# பெரியார் என்னும் பேரொளி

புலவர் சி. முத்தையா



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# பெரியார் என்னும் பேரொளி

புலவர் சி.முத்தையா

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை-600 113

தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: ந. வேலுசாமி அவர்கள்)

வரிசை எண் : 5 நாள்: 3.2.2014

# நூல் விவரக் குறிப்பு

| | | |
|---|---|---|
| நூல் தலைப்பு | : | பெரியார் என்னும் பேரொளி |
| ஆசிரியர் | : | புலவர் சி.முத்தையா, எம்.ஏ., பி.எட்., தமிழாசிரியர் (பணி நிறைவு) அனகாபுத்தூர், சென்னை. |
| பொதுப்பதிப்பாசிரியர் | : | முனைவர் நா. சுலோசனா உதவிப் பேராசிரியர் தமிழ்மொழி (ம) மொழியியல் புலம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை மையத் தொழில் நுட்பப் பயிலக வளாகம் தரமணி, சென்னை-600 113 |
| வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் | : | உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை தரமணி, சென்னை-600 113 தொலைபேசி எண். 044 - 22542992 |
| வெளியீட்டு எண் | : | 793 |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு | : | முதற் பதிப்பு |
| பதிப்பு ஆண்டு | : | 2014 |
| பயன்படுத்திய தாள் | : | 18.6 கிகி டிஎன்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ |
| நூலின் அளவு | : | 1/8 டம்மி |
| எழுத்தின் அளவு | : | 10 அளவு |
| பக்க எண்ணிக்கை | : | x + 94 |
| அச்சுப்படிகளின் எண்ணிக்கை | : | 1200 |
| விலை | : | ரூ.50./- (ரூபாய் ஐம்பது மட்டும்) |
| அச்சகம் | : | ஸ்ரீ சரவணா அச்சகம் 148, தம்புத் தெரு சென்னை-600 001 9444265471 |
| பாடம் | : | நீதிக்கருத்து |

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பன்று.

முனைவர் கோ. விசயராகவன், எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

## அணிந்துரை

அந்நியர்களின் ஊடுருவலாலும் வஞ்சனையாலும் ஏமாற்றப்பட்டு வாழ்வை இழந்து ஒடுக்கப்பட்டவரிடையே நம்பிக்கையை ஏற்படுத்தியவர். தமிழ் மக்களின் தன்மானத்தையும் தட்டி எழுப்பியவர். தமது அறிவுக் கனலால் பொய்ப்புரட்டுகளைப் போக்கியவர் தந்தை பெரியார் ஆவர். தந்தை பெரியர் இந்த மானுட சமுதாயம் உயர்வதற்கு அல்லும் பகலும் தமது மூச்சு உள்ளவரை அயராது உழைத்தவர். புரையோடிப் போயிருக்கும் சமுதாயத்தைப் புரட்டிப் போடுவதற்கு நெம்புகோலாகத் திகழ்ந்தவர்.

தென்னிந்திய நலவுரிமைச் சங்கம், நீதிக்கட்சியாகி நீதிக்கட்சி திராவிடர் கழகமாக வளர்வதற்கு ஆணிவேராக இருந்தவர்.

*இடும்பைக்கு இடும்பைப் படுப்பர் இடும்பைக்கு*
*இடும்பைப் படாஅ தவர்*

எனும் குறளுக்கிணங்க எத்தனைத் துன்பங்கள் வந்தாலும் அத்தனையையும் ஏற்றுக் கொள்ளும் மனப்பக்குவம் கொண்டவராகத். தந்தை பெரியார் திகழ்ந்தார்.

*அறிவூட்டும் இலக்கியம்*
*பெரியாரின் பெருவிருப்பம்*

இதுவே பெரியாரின் இலக்கியப் பார்வைக்கான அடிப்படை உண்மையாகும். தகைமைசால் தலைவர்; இயல்பாகப் பொருந்திய தலைமைப்பண்பு; தற்சிந்தனையாளர், வெளிப்படையாகப் பேசும் துணிவு, தொலைநோக்குச் சிந்தனையாளர் என பன்முக ஆளுமை கொண்டவராக விளங்கியவர். தாழ்த்தப்பட்டோர் வறுமையை ஒழிக்க உறுதுணையாகும் வகுப்புவாரி உரிமையைப் பெற்றுத்தந்தவர்.

*குடிசெய் வார்க்கில்லை பருவம்; மடிசெய்து*
*மானங் கருதக் கெடும்*

பொது வாழ்விற்கு இலக்கணம் வகுத்த வள்ளுவர் வாக்கிற்கிணங்க பொதுவாழ்வு வாழ்ந்தவர்.

சாதி ஒழிப்பு, தீண்டாமை ஒழிப்பு, மூடநம்பிக்கை ஒழிப்பு, காதல் மணம், சாதி மறுப்புத் திருமணம், விதவை மறுமணம், சுயமரியாதை இயக்கம், பெண்ணுரிமை, சொத்துரிமை என சமுதாய நலனுக்காக மானம் பார்க்காது தமிழன் மானம் காத்தவர். எவருக்கும்

தலைவராக வெகுமானம் பெற்றவர். 'மொழி' என்பது ஒரு இனத்தின் போர்க்கருவி. போர்க்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்படவேண்டும் எனும் பெரியாரின் மொழிக்கொள்கை வரவேற்கத்தக்கதாகும பெரியாரின் இனப்பற்றும் ஆரிய எதிர்ப்பும் அவர் கூறாமலேயே பலரால் எடுத்தாளப்பட்டு இன்று வரை நீட்சிபெற்றுள்ள பாங்கே பெரியாரின் வெற்றியாகும்.

பெரியாரியல் தொடர் பயிற்சி வகுப்பு நடத்தி பெரியாரியத்தைப் பரவுதல் பணியை மேற்கொண்டிருக்கும் பணிநிறைவு பெற்ற தமிழாசிரியர் சி. முத்தையா பல்வேறு தலைப்புகளில் பல செறிவான கருத்துக்களுடன் 'பெரியார் என்னும் பேரொளி' எனும் இந்நூலை வழங்கியுள்ளார். ஒவ்வொரு தலைப்பும் அவர்கண்ட பகுத்தறிவுச் சிந்தனையை வெளிப்படுத்துவதாக அமைகிறது.

தந்தை பெரியாரின் கொள்கைகளைப் பள்ளிக் கல்லூரி மாணவர்களிடையே பரப்புரையைத் தொடர்ந்து செய்து வரும் நூலாசிரியருக்கு எனது மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் தந்தை பெரியர் ஈ.வெ.ரா. அறக்கட்டளையின் ஐந்தாவது நூலாக வெளிவருவதில் பெருமகிழ்ச்சி. எழுத்துருவைச் செப்பம் செய்து குறித்த நேரத்தில் பொழிவினை நிகழ்த்தி நூலாக வெளிவருவதற்கு உறுதுணையாக இருந்த அறக்கட்டளையின் பொறுப்பாளர் முனைவர் நா. சுலோசனா அவர்களுக்கு எமது நன்றி கலந்த பாராட்டுகள்.

**தமிழும், தமிழ்நாடும் வாழ்ந்திட, அல்லும் பகலும் அயராது உழைத்து வரும் தமிழ்நாடு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா** அவர்களுக்கு இதயம் கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவரும் பள்ளிக் கல்வி மற்றும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத் தலைவர் **மாண்புமிகு அமைச்சர் கே.சி.வீரமணி** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் **முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் ஒளியச்சு கோர்வை செய்த இளநிலை உதவியாளர் (ம) தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா ஆகியோருக்கும், இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# என்னுரை

இந்நூலைத் தூய தமிழில் என்னால் எழுத இயலவில்லை. மொழியைவிடக் கருத்திற்கு இடந்தருகின்ற பெரியாரின் கொள்கைக்கு இடந்தந்துவிட்டேன்; பொறுத்தருள்க.

'என் கருத்தைச் சொல்ல உரிமையுண்டு. சொல்கிறேன். கொள்ளவோ தள்ளவோ உனக்கு உரிமை உண்டு. உன் புத்தியைப் பயன்படுத்திப் பார்த்து 'கொள்' அல்லது 'தள்'.

பாவம்! பைத்தியக்காரன் என என்மீது பரிதாபப்பட்டுவிட்டுப் போ'

- இது பெரியார் முன்னரே மொழிந்தது. இதையே நானும் அவர் வழியில் உங்களிடம் வழிமொழிகின்றேன்.

இன்று இளைஞர்கள் பெரியாரைத் தெரியாமல் இருக்கிறார்கள். அது கவலைக்குரிய நிலையாகும். ஆனால் தவறாகத் தெரிந்துகொள்வது அதைவிடக் கவலைக்குரிய செய்தியல்லவா? பெரியாரைப் படிக்காமல், அவர் கருத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்யாமல் அவரைப் பற்றி ஏதேதோ பேசுகிறார்கள்; எழுதுகிறார்கள். பெரியாரைப் பற்றி விமரிசிக்க நிறைய செய்திகள் இருக்கலாம். கடவுளையே மறுத்த பெரியாரை மறுக்க அனைவருக்கும் உரிமை உண்டு. கடவுள் மறுப்பிற்குப் பெரியார் உரிய காரணங்கள் காட்டினார். அதே போல் உரிய காரணங்களுடன் கருத்து மோதல்களுடன் பெரியார் ஏற்கப்படுவதும் எதிர்க்கப்படுவதுமே சரியான திறனாய்வாகும். தன்னலமும் தன்முனைப்பும் திறனாய்விற்குத் தடைக்கற்களாகும்.

எங்கள் ஊரில் ஒரு வீட்டில் முன்னோர் சேமித்து வைத்த வைரக்கற்கள் கோடி மதிப்புடையவை. புழங்காமல் கிடந்த பழைய நெற்குதிரில் ஒரு சிறிய பித்தளைக் குடுவையில் ஒளிந்து கிடந்தன. ஆனால் அதற்கு உரிமையுடையோர் தலைமுறை தாண்டிய வறுமையுடன் வாழ்வைக் கழித்துக் கொண்டிருந்தனர். பலர் கண்களில் வைரக்கற்கள் படவே இல்லை. கண்ணில் கண்ட சிலரும் அவற்றைக் கண்ணாடிக் கற்களாகவே கருதி விட்டனர். நமது நிலையும் அதுதான். ஒரு தலைமுறை கூடத் தாண்டவில்லை. பெரியாரியம் என்னும் சொத்துப் பத்திரத்தைத் தொலைத்து விட்டுத் தேடாமல் இருக்கிறோம். என்ன புரிகிறதோ! யாருக்குப் புரிகிறதோ! விட்டு விடுகிறேன்.

இந்நூல் செய்தி குறித்து உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் உரை நிகழ்த்தவும் நூலாக்கவும் வாய்ப்பளித்த நிறுவன இயக்குநர்.

மதிப்புநிறை முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும், வழிப்படுத்திய அறக்கட்டளைப் பொறுப்பாளர் உதவிப் பேராசிரியர் முனைவர் நா. சுலோசனா அவர்களுக்கும் நன்றி பாராட்டுகின்றேன். இப்பயனுள்ள பணிக்குக் களம் அமைத்துக் கொடுத்திருக்கும் பெரியார் ஈ.வெ.ரா. அறக்கட்டளை நிறுவனர்களுக்கும் நன்றிக் கடப்பாடுடையேன்.

அம்மா,
வறுமை தான் உன்னைக் காத்தது
இல்லையேல்
'மம்மி' ஆகியிருப்பாய் - சிங்கப்பூர்க் கவிதை

தந்தையே,
அடிமை நிலை எம்மைக் காத்தது
இல்லையேல்
உன்னை அறியாதிருந்திருப்போம் - இது நம் கவிதை

சி. முத்தையா

# ஆசிரியரைப்பற்றி



சி. முத்தையா, நெல்லை மாவட்டம் கரிவலம் வந்த நல்லூர் என்னும் ஊரில் 06.06.1945 அன்று பிறந்தவர். பெற்றோர் மு. சிவகுருநாதன், சி. கோமதியம்மாள் ஆவர். பள்ளிக் கல்வியைக் கரிவலம் வந்த நல்லூரிலுள்ள அரசு மேல்நிலைப்பள்ளியில் பயின்றவர். திருவையாறு அரசர் கல்லூரியில் புலவர் பட்டயம் பெற்றவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் இளங்கலை கல்வியியல் மற்றும் தமிழ் இலக்கியத்தில் முதுகலைப்பட்டம் பெற்றவர்.

விருதுநகர், சத்ரிய மேல்நிலைப்பள்ளியில் மேனிலைத் தமிழாசிரியராக பணியாற்றிப் பணிநிறைவு பெற்றவர். கவிஞர் முடியரசன், கவிஞர் மீரா, பேரா. சீனிவாசராகவன் போன்றோர் தலைமையில் கவியரங்கம் பாடியவர். இலக்கியப் பேச்சாளர், எழுத்தாளர், கவிஞர் என இவருடைய தமிழ்ப்பணி தொடர்ந்து கொண்டிருக்கிறது.

**சமூகப் பணிகள்**

விருதுநகரிலுள்ள பாவேந்தர் பேரவையின் தலைவராக உள்ளார். அதன்வழி 11ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களிடையே பாவேந்தரின் கவிதைகளை ஒப்புவிக்கும் போட்டியை ஆண்டுதோறும் தம் சொந்த செலவிலேயே நிகழ்த்தி வெற்றி பெற்றவர்களுக்கு முறையே பரிசுகள் அளித்து பாவேந்தரின் கவிதைகளைப் படிக்க ஊக்கமளித்து வருகிறார்.

'நித்திலம் அறக்கட்டளை' எனும் அறக்கட்டளை நிறுவி அதன் வழி விருதுநகரிலுள்ள சத்யா ஆதரவற்றோர் காப்பகத்தில் படிக்கும் 10,12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம், அறிவியல் பாடங்களில் அதிக மதிப்பெண்கள் பெறத் தனிப்பயிற்சி அளிக்கும் வகையில் தம் செலவில் ஆசிரியர்களை நியமித்து சமூகப்பணியாற்றி வருகிறார். அக்காப்பகத்தில் படிக்கும் தரமான நான்கு மாணவர்களைத்

தேர்ந்தெடுத்து அவர்களின் மேல்படிப்புக்கான செலவினத்தையும் தாமே ஏற்றுக்கொண்டு அவர்கள் வாழ்வில் உயர வழிவகை செய்து வருகிறார்.

எய்ட்ஸ் எனும் ஆட்கொல்லி நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளைத் தத்தெடுத்து அவர்களுக்காக ஆண்டு தோறும் ஒரு தொகையினைத் தந்து உதவுகிறார். இவைபோன்ற பல சமூகப்பணிகளைத் தொடர்ந்து செய்து வருகிறார்.

கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், அலுவலர்கள் என ஆர்வமுள்ள அனைவருக்கும் சிறப்பு ஆசிரியர்களை நியமித்து, பெரியாரியல் தொடர் பயிற்சி வகுப்பு நடத்தி வருகிறார். இப்பணியைப் பாராட்டி, பாவாணர் கோட்டம் வழி பேராசிரியர் ம.நன்னன் அவர்களிடமிருந்து ‘பெரியாரியல் பயிற்றுநர் விருது’ பெற்றவர்.

25 ஆண்டு காலம் அரிமா சங்க உறுப்பினராக இருந்து கவிதை, கட்டுரை, பேச்சு எனத் தமிழ்ப்பணியைத் திறம்படச் செய்தவர். மாணவர்களிடையே படைப்பாக்கத் திறனை வளர்த்துக் கொண்டிருப்பவர்.

மேலும் வான்புகழ் மன்றம், திருக்குறள் மன்றம் எனும் பல்வேறு அமைப்புகள் மற்றும் மன்றங்களின் வழி தமிழ்ப் பணியையும், சமூகப் பணியையும் தொடர்ந்து ஆற்றி வருபவர்.

இவருடைய துணைவியார் பணிநிறைவு பெற்ற தமிழாசிரியர் ஆவார். இவருடைய மக்களுள் ஒருவர் மருத்துவரும் இருவர் பொறியாளரும் ஆவர். தற்போது சென்னை, அனகாபுத்தூரில் வசித்து வருகிறார்.

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தகைமைசால் தலைவர் | 2 |
| 2. | ஏற்கப்படாமையே சிறந்தது | 7 |
| 3. | பெரியார் தமிழ்ப் பகைவரா? | 10 |
| 4. | பெரியார் நாத்திகர்-கடவுள் மறுப்பாளர் | 20 |
| 5. | பெரியார் பிரிவினை வாதியா? | 26 |
| 6. | பெரியார் பெண்ணுக்கு எதிரியா? | 32 |
| 7. | பெரியார் உயிர்க்கொள்கை | 36 |
| 8. | அடிமை நிலையின் தொடக்கம் | 40 |
| 9. | சமகாலப் பகுத்தறிவாளர்கள் | 44 |
| 10. | வகுப்புவாரி உரிமை வரலாறு | 47 |
| 11. | வருணாசிரமத்தை ஒழிக்க வழி | 50 |
| 12. | பெரியாரியத்தின் எழுச்சியும் தாழ்ச்சியும் | 54 |
| 13. | பெரியாரியச் சாதனைகள் - சமுதாயம் | 59 |
| 14. | பெரியாரியச் சாதனைகள் - அரசியல் | 62 |
| 15. | பெரியார் மறைவுக்குப் பின் திராவிடச் சமூக இயக்கங்கள் | 63 |
| 16. | பெரியார் மறைவுக்குப் பின் திராவிட அரசியல் இயக்கங்கள் | 67 |
| 17. | பெரியார் மறைவுக்குப்பின் சமுதாயச் சறுக்கல்கள் | 72 |
| 18. | பெரியார் மறைந்தார்- பெரியாரியம் மறையலாமா? | 76 |
| 19. | பெரியார் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரியா? | 78 |
| 20. | திராவிடத்தால் வீழ்ந்தோம்/எழுந்தோம் | 81 |
| 21. | திராவிடத் தேசியமா? தமிழ்த் தேசியமா? | 85 |
| 22. | மீண்டும் தொடக்கத்திலிருந்து | 90 |



பெரியார் என்னும் பேரறிவாளன்
திருவிடம் தோன்றிய திறலுடை மறவன்
தமிழகம் கண்ட தலைமை ஆசான்
அமிழ்தத் தமிழில் அறிவுநூல் தந்தோன்
மேற்கோ ளென்னும் சாய்க்கா லின்றிச்
சொந்தக் கருத்தைச் சொன்ன அறிஞன்
வன்முறை விரும்பான், வகுத்த கொள்கையைப்
பன்முறை பன்முறை பாமரர் அறிந்தே
ஏற்றுக் கொள்ள எடுத்துரைத் திட்ட
ஆற்றல் நிறைந்த அரிய பேச்சாளன்
பகுத்தறி வொளியினைப் பாய்ச்சி உலகின்
மிகப் பெரும் இருட்டினை விரட்டிய விறலோன்
பெரியார் என்னும் பேரொளி வாழ்க!

சி. முத்தையா

# தகைமைசால் தலைவர்

தீண்டாமை என்னும் சொல் பெரியாருக்கே சொந்தமானது போன்று அவரால் அடிக்கடி பயன்படுத்தப்பட்ட சொல். அறுபது ஆண்டுகளுக்கு முன்னும் அறுபது ஆண்டுகளுக்கு பின்னும் ஆகிய இரு காலக்கட்டங்களிலும் இந்தச் சமுதாயம், தீண்டாமை என்ற அதே சொல்லைப் பெரியாருடன் பொருத்திப் பார்த்துக் கொண்டிருப்பதுதான் வியப்பிற்குரிய செய்தி. ஆம், அன்று 1950களிலும் பெரியார் தீண்டத்தகாதவராகத் தெரிந்தார்,இன்று 2010க்குப் பின்னர் இன்றும் தீண்டத்தகாதவராகவே எண்ணப்படுகிறார். அதே வேளை 20,21 ஆகிய இரு நூற்றாண்டுகளில் தமிழகத்தில் நிகழ்ந்த அனைத்து நிகழ்வுகளிலும் பெரியாருக்குப் பங்கு இருந்திருக்கிறது; அவரது பணி பேசப்பட்டிருக்கிறது. இவ்வாறு எதிர்ப்பும் ஏற்புமாய் எழுந்தவர், வளர்ந்தவர், திகழ்ந்தவர் பெரியார்.

**தகைமைசால் தலைவர்**

*தமிழகத்தைப் பொருத்தவரை இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற* தலைவர் பெரியாரே; பெரியாரே! தான் உயர்வு பெற எண்ணாமல் தமிழன் உயர்வு பெற வாழ்நாள் முழுதும் பாடுபட்டவர் அவர் ஒருவர்*தானே!* வாழுங்காலத்திலும் வாழ்வுக்குப் பின்னும் போற்றலும், தூற்றலும்,ஏற்பும், எதிர்ப்பும் பெரியாருக்குச் சமமாகவே இருந்தது. வாழ்த்தையும், வசையையும் அவர் சமமாகவே புரிந்து கொண்டார். வசையாளர்களை விட வாழ்த்தாளர்களிடம் சிறிது எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று எண்ணுவதுதான் பெரியாரின் இயல்பு.

***இயல்பாகப் பொருந்திய தலைமைப் பண்பு***

தம் வாழ்நாளில் யாரையும் அவர் தலைவராக ஏற்றுக் கொண்டவரில்லை.. ஓர் இயக்கத்தில் தொண்டர் நிலையில் தொடங்கிப் படிப்படியாக உயர்ந்து தலைவர் ஆனவரும் இல்லை, ஏதோ புறக்காரணங்களால் ஆக்கப்பட்ட தலைவரும் இல்லை. இயல்பாகவே தலைமைப்பண்பு அவருக்குப் பொருந்தி வந்தது. இன்னும் சொல்லப் போனால் அவரிடம் வாய்த்திருந்த அறிவு, ஆற்றல், அருங்குணங்கள் ஆகியவையே ஓர்

தலைமைக்குரிய இலக்கணங்களாக இந்தச் சமூகத்திற்குக் கற்பிக்கப்பட வேண்டியவையாகத் திகழ்ந்தன.

**தற்சிந்தனையாளர்**

பெரியாரின் மிகப் பெரிய வலிமை,அவருடைய சொந்த அறிவு. 'உன் சொந்தப் புத்தியைப் பயன்படுத்திப் பார்' 'மனிதனிடம் பயன்படுத்தப்படாமல் இருக்கும் ஒரே கருவி புத்திதான்' என்றெல்லாம் அவர் பிறர்க்குச் சொல்லும் முன்னே தன் சொந்த அறிவைப் பயன்படுத்தினார், சொந்தமாகச் சிந்தித்தார்.

'என்னுடைய பகுத்தறிவின் துணைகொண்டு கொள்கைகளையும், திட்டங்களையும் வகுத்துச்' செயல்படுவதாகத் தானே கூறிக் கொண்டார். இன்னும் சொல்லப் போனால் தன் சொந்த அறிவிலும், சிந்தனையிலும் முழு நம்பிக்கை வைத்தார்.

**முழு ஒப்படைப்பு**

பெரியார், தான் ஏற்ற இலட்சியத்திற்காகத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்டவர். ஏனோ தானோ என்ற பணி எப்போதும் அவரிடம் கிடையாது. இது நடக்குமா, நிறைவேறுமா, நடக்குமளவு நடக்கட்டும் என்ற ஊசலாட்டத்துடன் அவர் எந்தச் செயலையும் தொடங்க மாட்டார். 'சுதந்திரநாள் துக்கநாள்' என்று அறிவித்த அவர் துணிவை எண்ணிப் பாருங்கள். இந்திய துணைக் கண்டத்தில் நூறு விழுக்காட்டினரும் ஏற்றுக் கொண்ட நிகழ்வா இந்திய சுதந்திரம்? மறுப்பதற்கும், முரண்படுவதற்கும்,தயங்குவதற்கும் வடகோடி முதல் தென்கோடி வரை பலருக்கும் பலகாரணங்கள் இருக்கத்தான் செய்தன.சுதந்திரத்தை மறுத்தால், தேசவிரோதிகளாகி விடுவோம்; பழி தூற்றுவார்கள்; மக்கள் செல்வாக்கு குறைந்துவிடும் என்றெல்லாம் எழுந்த தயக்கத்தில் பலரும் இருந்தனர்.

'வெறும் அரசியல் மாற்றமே இந்த சுயராஜ்ஜியம்; பொதுசன விடுதலையில்லை!'

என்ற தன் கருத்தில் வலுவாக இருந்ததால் பெரியாரால் மட்டும்தான், 'சுதந்திரநாள் துக்கநாள்' என அறிவிக்க முடிந்தது.ஏற்ற இலட்சியத்திற்குத் தன்னை முழுமையாக ஒப்படைத்துக் கொண்ட தகுதியாளர் அல்லவா!

ஏற்றுக் கொண்ட இலட்சியத்தைச் செயல்படுத்துவதில் தன் தொண்டர்கள் அனைவரைக் காட்டிலும் தானே முன் நிற்பார் பெரியார். தோற்றுவிடுவோம்; வீழ்ந்து விடுவோம் என்ற எதிர்மறைச் சிந்தனை அவருக்கு எப்போதும் இம்மியளவும் இருந்ததில்லை. மக்கள்

எதற்கெல்லாம் ஆதரவு தருவார்களோ அவற்றையே பட்டியலிட்டுத் தன் கட்சியின் கொள்கைகள் அவை எனக் கூறிக் கட்சி ஆரம்பிக்கும் தலைவர்கள் காலம் இது. பெரியாரோ, தன் சிந்தனை இது; கொள்கை இது; முடிவு இது! இதை எவர் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் கவலை இல்லை, நானே பரப்புநர்; நானே தொண்டர் எனச் செயல்பட்டவர். ஆயிரம் பேர் தன் இயக்கத்தில் தொண்டு செய்யப் பின் தொடர்ந்தாலும்; பின் தொடர்ந்த ஆயிரம் பேரும் விலகி விட்டாலும், கலங்காத, கவலைப்படாத, பொருட்படுத்தாத பாறை நெஞ்சமுடையவர் பெரியார். மோதுவது மலையுடன் என்றாலும்; தான் மட்டும்தான் மோதிக் கொண்டிருக்கிறோம் என்றாலும்; மலை விழும்வரை அல்லது அவர் விழும்வரை முட்டிக் கொண்டேயிருப்பார் பெரியார்.

## வெளிப்படையாகப் பேசும் துணிவு

பெரியார் பேசிய காலம், பாமரர்கள் வாழ்ந்த காலம். மடமை கோலோச்சிய மண்ணாக இருந்தது நாடு. கற்றவர் விரல் விட்டு எண்ணத் தக்கவரே. கல்லாமை,இல்லாமை,அறியாமை பரவியிருந்த காலம் அது. புராணத்தையும், இதிகாசத்தையுமே வரலாறாகக் கண்டு அதையே கற்றவர், கற்பித்தவர் காலம். தான் நம்பியதையே விடாமல் பற்றியிருக்கும் பேதைமை மிக்கோர், மூர்க்கர்கள் நிரம்பி வழிந்த சமுதாயம் அது. அதில், பெரியார் கூற வந்த கருத்துக்களோ முழு முரண்பாட்டுக் கருத்துக்கள்: முன்னைய நம்பிக்கைகளைப் புரட்டிப் போட்ட சிந்தனைகள்; தாம் இதுவரை ஏற்றுக் கொண்டவைகளுக்கு முற்றும் எதிர்மாறானவை. ஆனால், பெரியார் பேசினார்... தவறுகளை, குற்றங்களை, ஏமாற்றப்பட்டதை வெளிப்படையாகப் பேசினார்...நீ நம்புவது பொய்: உன்னை நம்பவைத்தவன் ஏமாற்றுபவன்; உன் நம்பிக்கை அறிவுக்குப் பொருந்தாதது என்பதைத் துணிச்சலாகச் சொன்னார்.

'புத்தியில்லையா?' எனப் புத்தியிருப்பது தெரியாமல் இருந்தவனிடமும் கேட்டார்; தனக்கு மட்டும்தான் புத்தியிருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தவனிடமும் கேட்டார். இந்த வெளிப்படைத் தன்மையும், துணிச்சலும் உடையவர் பெரியார் மட்டுமே.

## வாதத்திற்கு அஞ்சாத வழக்கறிஞர்

பொதுக் கூட்டங்களிலும் சரி, சிறப்பு அரங்கங்களிலும் சரி, பெரியார் பேச்சிற்கு எத்தனையோ சமயங்களில் முரண்பாடும், எதிர்ப்பும், வினாக்களும் எழுவது உண்டு!.. இதை அவர் இயல்பானதாகவே ஏற்றுக் கொண்டார். தன் கருத்தை மேலும் வலியுறுத்த, புரிய வைக்கக் கிடைத்த கொள்கை விளக்க வாய்ப்பாகவே வினாக்களையும், விவாதங்களையும் மகிழ்வுடன் ஏற்றார். வினா எழுப்பியவரை மதிப்பார்; முன்னிலைப் படுத்துவார்; தன் பற்றாளர்களின் எதிர்ப்பிலிருந்து அவரைக் காத்து ஆதரவளிப்பார்; கூட்டம் முழுவதும் புரிந்து

கொள்ளுமாறு வினாவைச் சொல்லச் செய்வார்; வினா - விடை வடிவில் விவாதத்தை மேல் எடுப்பார்; தெளிவுறுத்துவார்! பேச்சில் மட்டுமல்ல; எழுத்திலும் இந்தநிலை தான்.காலணா கடுதாசியில் கடைக் கோடியிலுள்ள கந்தனோ, முருகனோ எழுதும் மறுப்புக் கடிதத்திற்குத் தன் குடியரசு இதழில் விளக்கமாக விரிவாக பதில் எழுதத் தவறவே மாட்டார். ஏனென்றால், தன் கருத்தை உறுதியாக எவருடனும் விவாதித்து ஏற்றுக் கொள்ள வைக்க முடியும் என்ற நம்பிக்கை எப்போதும் அவரிடம் நிறைந்திருந்தது.

## வன்முறை விரும்பாமை-இடுக்கண் அழியாமை

முரட்டுத் தோற்றம் காட்டும் உடல்வாகு பெரியாருடையது. ஆனால், அவர் உள்ளமோ மிக மென்மையானது. கொள்கையில் கரடுமுரடாகத் தோன்றுபவர்; ஆனால், எவருக்கும் நட்பும், அன்பும், மதிப்பும் கொடுத்துப் பழகுவார். யாருக்கும் சிறு தீங்கும் எண்ணவும் அஞ்சும் இயல்பினர். வாடிய மனிதனைக் கண்ட போதெல்லாம் வாடியவர்.

தீக்கொளுத்து - உடைத்தெறி - அழித்தொழி என வஞ்சக மதத்தின் மீதும் கற்பிக்கப்பட்ட கடவுள்மீதும் தீப்பரப்பியவர் அவர். ஆனால் தன் கொள்கைகளைக் கடுமையாக எதிர்த்தவர், தன்னால் உண்டான பாதிப்பின் காரணமாகப் புழுதிவாரித் தூற்றியவர் எவர்மீதும் இந்தக் கோபத்தையும் எதிர்ப்பையும் வன்முறையையும் எண்ணியவரும் இல்லை; தூண்டியவரும் இல்லை!

இதற்கு மாறாக எத்தைனையோ இடங்களில் அவர்மீது பாய்ந்த வன்முறைத் தாக்குதல்கள் பலப்பல.... தமது நம்பிக்கையின் வேரைச் சாய்ப்பதை ஏற்றுக்கொள்ள முடியாத பாமரர்கள், தங்கள் பொய்களையும் - புளுகு மூட்டைகளையும் அம்பலப்படுத்திப் பிழைப்பைக் கெடுக்கிறாரே என்று எரிச்சலடைந்த பழமைவாதிகள், தங்கள் இன மேலாண்மைக்கு எதிராகப் பெரியாரைப் பேசவிடக்கூடாது என்பதற்காகச் சில பெரியவர்களால் தூண்டிவிடப்பட்ட கூலிக் கூட்டத்தினர், பெரியார் மீது கல் எறிந்தனர்; தடி எடுத்தனர். அத்தனையையும் பெரியார் ஏற்றார்.

**இடும்பைக்கு இடும்பைப் படுப்பர்; இடும்பைக்கு**
**இடும்பை படாஅ தவர்!** தான் பெரியார்.

## மனிதனை நினை

**யாதும் ஊரே, உண்டாலம்ம இவ்வுலகம்**

**முதற்றே உலகு, உலகம் யாவையும்**

**உலகெலாம் உணர்ந்து, உலகம் உண்ண உண்**

என அன்று தொட்டு இன்று வரை தமிழன் சிந்தனை விரிந்ததாகவே இருந்தது.

தன்னை மட்டும் எண்ணாமல் ஊரையும் உலகையும் நினைத்தே வாழ்ந்தவன் தமிழன். இன்றைக்கும் எலும்பு துருத்தியபடி ஏக்கத்துடன் நிற்கும் எத்தியோப்பிய ஏழைக் குழந்தையின் படத்தைப் பார்த்துவிட்டுத் துடிக்கும் நெஞ்சுக்குச் சொந்தக்காரன் தமிழன். ஓரறிவுயிர் முதல் ஐந்தறிவுயிர் வரை உள்ள புல் பூண்டு தொடங்கி புலி, சிறுத்தை வரை எல்லா உயிர் நலன்களையும் எண்ணி மகிழும் நெஞ்சினன் தமிழன். ஆனால் அவன் அருகிலேயே, அவன் புரண்ட மண்ணில் புரண்டு, அவன் குடித்த நீரையும் காற்றையும் குடித்து வாழும் தன்னொத்த இன்னொரு மனிதனிடம் மட்டும் அவனுக்கு விருப்பேயில்லாத வெறுப்பு, அவனைக் குற்றுயிராக்கிக் களிக்கும் கொடு நெஞ்சம், குனியக்குனிய அவன் தலையில் குட்டி மகிழும் கொடுமதி ஏன் பிறந்தது? அவன் நன்மையை, நட்பை மட்டும் நீ ஏன் எண்ணிப் பார்க்க மறந்து விட்டாய்? உன் சக மனிதனை எண்ணிப் பார்க்க இடையூறாய் இருப்பவன் கடவுளே ஆனாலும்,

**அந்தக் கடவுளை மற; இந்த மனிதனை நினை.**

என்ற தகைமை பொருந்திய தலைமைப் பண்பாளர் பெரியார்.

## மானங் கருதா மாண்பு

**குடிசெயல் வகை** என்ற அதிகாரத்தில்...

**குடிசெய்வார்க்கில்லை பருவம்; மடி செய்து**
**மானங் கருதக் கெடும்.**

என்று பொது வாழ்விற்கு இலக்கணம் வகுத்தார் வள்ளுவர். பெரியாருக்குப் பிடித்த திருக்குறள் இது. கூடி என்ற சொல்லின் சுருக்கம்தான் குடி, தன்னுடன் கூடி வாழும் கூட்டத்தின் நலனை உயரச் செய்வதுதான் குடி செயல்வகை. குடி என்றால் தன் குடும்பம் இல்லை. தன்னுடன் கூடிவாழும் ஒரு கூட்டம்தான் குடி. கூடுதல் - பொருந்துதல். இந்த நிலப்பரப்பில் இனத்தாலும், மொழியாலும், நெடுநாள் இணைந்து வாழ்ந்த இருப்பாலும் பொருந்திப் போன மனிதக் கூட்டங்கள் ஆங்காங்கே படிந்து கிடந்தன. அவையே ஊராயின - நாடாயின. தான் வாழும் கூட்டத்திற்காகத் தன் வாழ்வை ஒப்படைத்துக் கொள்வதுதான் குடிசெயல் வகை . அதாவது ‘பொதுத் தொண்டு’.

இந்தப் பொதுத் தொண்டில் ஈடுபடுபவன் நேரம் காலம் கருதக் கூடாது; சோம்பேறியாக இருக்கக்கூடாது; தன்மானம் பார்க்கக்கூடாது என்பதுதான் மேலே உள்ள குறட்பாவின் கருத்து. தன் சொந்த வாழ்வில் யாரும் தன்னை அவமானப்படுத்திவிட்டால் தன்மானம் கொண்டு எழலாம் ; எதிர்க்கலாம். ஆனால் பொதுவாழ்வில் உன் தன்மானத்திற்கு இடமில்லை. சிலர் போற்றுவர்; சிலர் புழுதிவாரித் தூற்றுவர். இரண்டையும் ஒத்ததாக ஏற்கும் உள்ளம் வேண்டும். இந்தத் தகுதி, தலைவர் ஒவ்வொருவருக்கும் கட்டாயம் இருக்க

வேண்டிய தகுதி. ஆனால் எந்தத் தலைவரிடமும் இல்லாத தகுதியாகிவிட்டது. இன்று, ஒரே கூட்டத்திற்கு இத்தனை கட்சி, ஒரே கொள்கைக்கு இத்தனை இயக்கம் எனத் தன்னுடைய மானத்தை மட்டும் பார்த்த தலைவர்களால் பெருகிவிட்டன.

ஆனால் பெரியாரோ, பெரியோரை வியக்கவில்லை, சிறியோரை இகழவில்லை. இந்தத் தமிழர் கூட்ட நலனுக்காக விட்டுக் கொடுத்தார். வீம்பு பாராட்டாதவராயிருந்தார். தன் மீது பகைமை பாராட்டியவர்களிடம்கூட தாமே வலியச் சென்று நட்புக்கொண்டார்.

தான் மதிப்புப் பெற வேண்டும் என்பதற்காக எதையும் செய்ய மாட்டார். தனக்கு மட்டும் மதிப்புத் தரும் அரச பதவிகளைத் தன் இறுதிவரை ஏற்க மறுத்தார். தன் சமுதாயத்திற்குத் தான் இந்தப் பதவியைப் பெறுவதால் நன்மை ஏற்படாது என்பதைத் திண்ணமாகப் புரிந்துகொண்டவர் அவர்.

சமூக வாழ்வில் பலமுறை அவர் அலட்சியப்படுத்தப்பட்டார் (மதிக்கப் பெறாமை) பன்முறை தோற்கடிக்கப்பட்டார் ; தனிமைப்படுத்தப்பட்டார். இதைப் பொதுமக்கள் செய்தார்கள்; தான் சார்ந்த கட்சி செய்தது; தன்னைச் சார்ந்திருந்த தொண்டர்கள் செய்தார்கள். ஆனால் அதே பொது மக்களிடம், அதே கட்சியிடம், தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற அதே தொண்டர்களிடம் வேறு வேறு சமயங்களில் பெரியார் மீண்டும் நட்புக்கொண்டார். அவர்களை ஆதரித்தார்... ஏன்? எதற்காக? தன் கூட்டத்தின் (குடி) நலனுக்காக.

**மானம் பார்க்காது தமிழன் மானம் காத்தார்**
**எவர்க்கும் தலைவராக வெகுமானம் பெற்றார்!**

# ஏற்கப்படாமையே சிறந்தது

## சமுதாய இலக்கணம்

ஒரு கருத்து சிறந்தது; எப்போது தெரியுமா? எவரும் தம் வாழ்வில் ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் தான். ஒரு தலைவர் சிறந்தவர்; எப்போது தெரியுமா? அவர் எவராலும் பின்பற்றப்படாதவராக இருப்பதால்தான். திருக்குறள் சிறந்த நூல்-எவரும் குறட்கருத்துக்களை வாழ்வில் ஏற்று நடக்கவில்லை. பெரியார் சிறந்த தலைவர்-எவரும் அவர் கொள்கையைப் பின்பற்றி வாழவில்லை. இதுதான் சமுதாய இலக்கணம். பெரியாருக்கு வாய்த்த இன்னொரு சிறப்பு என்னவென்றால், ஏற்கப்படாமையை விட மிகமிக எதிர்க்கப்பட்டவர் பெரியார். வாழ்ந்த காலத்திலும், தன் வாழ்நாளுக்குப் பின்னும் பெரியாரைப் போல் எதிர்க்கப்பட்டவர் எவருமில்லை. இன்றும் அவருக்குக் கிடைத்திருக்கும் பெரும் எதிர்ப்பு என்ன தெரியுமா? யாரைக் கைதூக்கி விட பெரியார் வாழ்நாள் முழுவதும் போராடினாரோ அவர்களே பெரியாரை எதிர்ப்பதுதான்.

## தடுமாறும் சமுதாயம்

> பெரியாரைச் சரியாகப் புரிந்து கொள்ளாமலும் மதிப்பிட முடியாமலும் அன்றும் இன்றும் இந்தச் சமுதாயம் தடுமாறிக் கொண்டிருக்கிறது.

என்பது நேர்மை மிக்க ஆய்வாளர்கள் பலரின் ஒருமித்த கருத்தாகும்.

'பெரியார் குறித்த ஆய்வைத் தொடங்கு முன்னரே தமிழ்நாட்டில் முடித்து விட்டார்களே என அஞ்சும் நிலை இன்று உள்ளது' எனச் சொல்லும் பேராசிரியர் ஒருவரின் மதிப்பீடு மிகமிகப் பொருத்தமாகவே உள்ளது.

எத்தனை எத்தனை எதிர்ப்புகள்:

பெரியார் தமிழ்ப் பகைவர்.

பெரியார் கடவுள் மறுப்பாளர் நாத்திகர்.

பெரியார் பிரிவினையாளர்.

பெரியார் பெண்ணை இழிவுபடுத்தியவர்.

எனப் பெரியார் எல்லாத் திசைகளிலிருந்தும் எதிர்க்கப்பட்டார். எல்லாக் கோணங்களிலிருந்தும் எதிர்க்கப்பட்டார். அத்துணை எதிர்ப்பையும் பெரியார் எதிர்த்துச் சிதைத்துத் தன்னை நிலை நாட்டினார்... என்பதை அவர் வார்த்தைகளாலும் அவர் வாழ்க்கையாலுமே இங்கே நிறுவ முயற்சிப்போம்.

> ஒரு சிந்தனையாளர் கருத்துக்களை அவர் எதிரிகளை விடச் சீடர்கள் சிதைத்து விடுகின்ற கொடுமை, வரலாறு நெடுகக் காணப்படுகிறது. புத்தர், காந்தி,பெரியார் மூவரும் இவ்வாறே தோற்கடிக்கப்பட்டவர்கள்; மறுக்கப்பட்டவர்கள்; மறைக்கப்பட்டவர்கள்.

என்பார் தோழர் அருணன். பெரியாரைச் சீடர்களும் சிதைத்தார்கள், எதிரிகளும் சிதைத்தார்கள். அந்தச் சிதைவிலிருந்து மீட்டுப் பெரியாரின் உண்மை நோக்கை, முழுமைப் பொருண்மையை இங்கே காண்போம்.

# பெரியார் தமிழ்ப் பகைவரா?

## வீட்டு மொழியும் நாட்டு மொழியும்

'பெரியாரின் முன்னோர்கள் கன்னடத்திலிருந்து வந்தவர்கள். அவர் வீட்டு மொழியோ தெலுங்கு. எனவே அவர் தமிழ்ப்பகைவர்'

என்பது ஓர் அற்புத் தனமான வாதமாகும்.

> தமிழ்நாட்டில் வீட்டு மொழி எதுவாக இருப்பினும் தமிழ்நாட்டு மொழியாகத் தமிழ் தான் இருக்க வேண்டும்

என்பதை அழுத்தமாகப் பதித்தவர் பெரியார். தமிழனாக, தமிழ்நாட்டவனாகவே தன்னை உணர்விலும், வாழ்விலும் பொருத்திக் கொண்டவர் அவர். அவர், தம் வாழ்நாள் முழுவதும் தமிழில் தான் பேசினார், எழுதினார், வாதம் செய்தார், போராடினார். அவர், நம்மைத் திராவிடர் எனக் குறிப்பிட்டுக் கொண்டதின் உள்ளாழக் குறிப்பு,

> பார்ப்பனரைத் தவிர்த்த தமிழ் பேசுபவர்கள்

என்பதேயாகும்.

## பயன்பாட்டு மொழியே செம்மொழி

தமிழ், கடவுள் படைத்த மொழி; அதனால் சிறந்தது. தமிழ், தொன்மையான மொழி; அதனால் சிறந்தது என்பதை ஏற்க மறுத்தவர் தான் பெரியார். மூடநம்பிக்கையால் ஒரு மொழிக்கு முதன்மை தேவையில்லை; முந்தித் தோன்றியதால் முதன்மை தேவையில்லை என்பதில் பெரியார் தெளிவாக இருந்தார். இன்றையப் பயன்பாட்டு மொழியாக, நாளையும் ஏற்கப்படும் மொழியாகத் தமிழை உருவாக்குவதில் அக்கறை காட்டிய உண்மையான தமிழ்ப்பற்றாளர் பெரியார். தமிழையும் மதத்தையும் ஒன்றாய் இணைக்கும் போக்குக்கு அவர் எதிரி.

> முதலாவதாக தமிழ் முன்னேற்றமடைந்து உலக மொழி வரிசையில் அதுவும் ஒருமொழியாக இருக்க வேண்டுமானால் தமிழையும், மதத்தையும் பிரித்து விட வேண்டும். தமிழுக்கும், கடவுளுக்கும் உள்ள சம்பந்தத்தையும் கொஞ்சமாவது தள்ளி வைக்க வேண்டும்.

என்று தமிழைப் பற்றிப் பேசத் தொடங்கும் பொழுதெல்லாம் அவர் கூறத் தவறியதில்லை.

'மக்கள் தேவர் நரகர் உயர்திணை' என இலக்கணத்திலும் மதத்தை நுழைத்துள்ள சூழ்ச்சியைத் தமிழ் இலக்கணப் பேராசிரியர்களுக்கும் சுட்டிக் காட்டியவர் அவர்.

## எழுத்துச் சீர்திருத்தம்

**செந்தமிழைச் செழுந்தமிழாய்ச் செழிக்கச் செய்வோம்**

என்ற புரட்சிக்கவிஞரின் கவிதைக்குப் பெரியாரின் கருத்தே விதை. அதே போல் பெரியாரின் எழுத்துச் சீர்திருத்தம், தமிழை வளர்ச்சிப்பாதையில் எடுத்துச் செல்ல எடுத்து வைக்கப்பட்ட முதல் அடி. கடவுள் மொழியாகத் தமிழ் தாழ்வதிலும் கணினி மொழியாகத் தமிழ் உயர்வதிலும் அவர் கொண்ட அக்கறை தானே எழுத்துச் சீர்திருத்தம். பெரியார் காலத்தில் ஓங்கி வளர்ந்து உயர்ந்த புகழ் பெற்ற தமிழறிஞர்கள் பற்பலர். அவரில் எவருக்கும் எழுந்ததா *எழுத்துச் சீர்திருத்தச் சிந்தனை? எழுத்துச் சீர்திருத்த எதிர்ப்புச் சிந்தனையோடு* தான் சிலர் எழுந்தார்கள், கவிழ்ந்தார்கள்.

## திருக்குறள்-மக்கள் குறள்

தமிழறிஞர்கள் கையில் மட்டுமே தவழ்ந்த திருக்குறளை தமிழர் கைகளில் தவழ விட்டவர் தந்தை பெரியார்தானே! 1948இல் திருக்குறள் மாநாடு நடத்தித் திருக்குறளை மக்கள் குறளாக மாற்றியவர் அவர். திருக்குறள் விளக்கக் கட்டுரைகள் பலப்பல எழுதிக் குவித்தார்.

**பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்**

**அவி சொரிந்து ஆயிரம் வேட்டலின்**

**குடி செய்வார்க் கில்லை பருவம்**

ஆகிய குறட்பாக் கருத்துக்களைத் தம் கட்டுரைகளில் எடுத்துக்காட்டிப் பாராட்டியவர் அவர். ஆனால் திருவள்ளுவரின் பெண் வழிச் சேறலை அவர் கண்டிக்கத் தவறவில்லை அவர்தான் பெரியார்.

## தமிழிசை இயக்கம்

செத்தால் கூடப் பாடுறாண்டா எனத் தாலாட்டில் தொடங்கி ஒப்பாரியில் நிறைந்த தமிழிசைக்கும் தமிழ் நாட்டில் பற்பல தடைகள். தமிழ் நாட்டின் இசையரங்குகளில் தமிழுக்கு இடமே இல்லாமல் இருந்தது. வடமொழியும் தெலுங்கும் இசைப்பவரே இசைவாணர். தமிழிசை வாணர்கள் சென்னையிலும் திருவையாற்றிலும் தீண்டத்தகாதவரே. பழந்தமிழ்ப் பண்புகள் ராகங்களாக மாற்றப்பட்டன. ஒரு நூற்றாண்டுக்கும் மூத்த தமிழிசைப்

புலவர்கள் மாரிமுத்தா பிள்ளை, முத்துத் தாண்டவர், அருணாசலக் கவிராயர் ஆகிய தமிழ் மூவரை மறைத்து முத்துசாமி தீட்சிதர், தியாகய்யர், சியாமா சாத்திரிகள் மும்மூர்த்திகள் ஆக்கப்பட்டார்கள். இந்நிலையில் 1930 மே மாதம் ஈரோட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் பார்ப்பனரல்லாதவர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு தமிழ் இசைக் கல்வியைக் கற்றுக் கொடுக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இத் தீர்மானத்திற்கு முசிறியார், செம்மங்குடியார் போன்றவர்களிடமிருந்து பெரியார் எதிர்பார்த்த எதிர்ப்பும் வந்தது. ஆயினும் தமிழில் பாடும் உரிமையைப் பெரியார் தொடர்ந்து வலியுறுத்தினார்.

'இசை விருந்தளிக்கும் செல்வர்களும் நுகர்வோர்களும் தமிழுணர்ச்சி உள்ளவர்களாக இருக்கும் வரை இந்த உணர்ச்சி வலுத்துக் கொண்டேயிருக்கும்.'

என்ற பெரியாரின் வேகமூட்டலின் விளைவுதான், செட்டிநாட்டரசர் நிறுவிய 'தமிழ் இசைச் சங்கம்' என்பது பொருத்திப் பார்க்க வேண்டிய உண்மை. தமிழிசைப் பாடலுக்காக வரிந்து கட்டிய பெரியார், தம் கொள்கை உறுதியிலும் விடாப் பிடியாக இருந்தார். தமிழிசைப் பாடல்கள் வெறும் பஜனைப் பாடல்களாக இருப்பதைக் கண்டிக்கத் தவறவில்லை.

## தமிழறிஞர் நிலை

திரு. வி.க., மறைமலையடிகள், தெ.பொ.மீ., மு.வ., அ.சிதம்பர நாதன், இராசமாணிக்கனார், கீ.ஆ.பெ. விசுவநாதம், நாவலர் சோமசுந்தர பாரதியார் போன்ற தமிழறிஞர்களுடன் நட்புரிமையுடன் இருந்தவர் பெரியார். இவர்களுடைய தமிழ்ப் பற்றையும் தமிழ் மேதைத் தன்மையையும் பாராட்டும் பெரியார், இவர்களெல்லாம் முன்னேற்ற முயற்சியில்லாமல் உள்ளனரே; கிணற்றுத் தவளைகளாய் இருக்கிறார்களே; அன்னக் காவடி பஞ்சாங்கப் பார்ப்பான் மகன் ஆங்கிலம் படித்து உயர் நீதிமன்ற நீதிபதி ஆகி விட்டானே! என உள்ளத்து ஏக்கத்தை ஒளிக்காமல் கூறி நொந்து கொள்வார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் வட மொழிப் பேராசிரியர் குப்புசாமி சாத்திரிக்கு மாத ஊதியம் ரூ.300. தமிழ்ப் பேராசிரியர் க. நமசிவாய முதலியார்க்கு ரூ. 80 என்ற வேறுபாடு இருந்தது. (தமிழன் எப்படியெல்லாம் ஏமாந்திருக்கிறான்) இந்த நிலை அறிந்த பெரியார், இந்தக் கொடுமையைக் கண்டித்து தலையங்கம் எழுதினார். நீதிக் கட்சியின் முதலமைச்சர் பனகல் அரசர் ஊதிய வேறுபாட்டை ஒழித்தார்.

> அன்று நாங்கள் போட்ட கூப்பாடும் ஜஸ்டிஸ் மந்திரி சபையின் உத்தரவும் இல்லாதிருந்தால் இன்றும் தமிழ்ப் பண்டிதர்கள் இதே நிலைமையில்தான் இருக்கக்கூடும்.

என்கிறார் பெரியார்.

நல்ல தமிழறிஞர் நம் தமிழ்க்கும் பகையானார்

என்று பாவேந்தர் குறிப்பிட்டபடி தமிழினப் பகையாளர்களாக இருந்த தமிழறிஞர்களையும் அவர்கள் நூல்களையும் எதிர்க்க வேண்டிய கட்டாயம் பெரியாருக்கு இருந்தது தவறில்லையே!

## தமிழ்-காட்டுமிராண்டி மொழி

பெரியார் தமிழைத் திட்டிக் கொண்டேயிருந்தார், மிகக் கடுமையாகக் காட்டுமிராண்டி மொழி என்றார் என்பது வெளிப்படையான உண்மைதான். முட்டாள், மூடன், காட்டுமிராண்டி என மகனைத் திட்டிய தாயின் உணர்வைப் புரிந்துகொள்ள முடியாதவர்கள் தான் இதைப் பழியாகப் பார்த்தார்கள்; பெரியாரைப் பழித்தார்கள்.

> நீ முட்டாளாக இருக்கிறாயே... அறிவு பெறு; மூடனாக இருக்கிறாயே... சிந்தித்துப் பார். காட்டுமிராண்டியாய்த் திரிகிறாயே... நாகரிகம் பெற்று மேன்மையடை.

என்ற உட்கருத்துதான் பெரியாரின் வசைகளில் ஒளிந்திருக்கிறது என்பதை உணர்வுடையோர் உணர்வர்.

மேற்குத் தொடர்ச்சி மலை, நீலகிரிமலை, சேர்வராயன் மலை, குடகு மலை பகுதிகளில் வாழும் தோடர், இருளர், பளிங்கர் போன்ற தொல்குடியான காட்டு வாழ் மக்கள், காண்போரை மிரட்டும் வலிய தோற்றமுடைய காட்டுமிராண்டிகள். அக் காட்டுமிராண்டிகளும் தமக்கெனத் தனி மொழி வைத்திருக்கிறார்கள். அம் மொழி கல்வி மொழியா? நீதி மொழியா? நிர்வாக மொழியா? வணிக மொழியா? இல்லை; இல்லை.

இன்று நம் தமிழ் மொழியும் கல்வி மொழியாக இல்லை; அலுவலக மொழியாக இல்லை; ஆட்சி மொழியாக இல்லை; நீதி மன்ற மொழியாக இல்லை; மருத்துவ மொழியாகக்கூட இல்லை. ஏன்? வழிபாட்டு மொழியாகக்கூட இல்லை. ஆனால் தமிழ் இருக்கிறது... வீட்டு மொழியாக, அடுப்படி மொழியாக-அதுவும் ஆங்கிலங் கலந்த அரைகுறைத் தமிழாகத்தான்... இப்போது சிந்தியுங்கள்; பெரியார் ஒப்பீடு பொருந்தி வருகிறதா? தமிழ் காட்டுமிராண்டி மொழிதானே.

காட்டுமிராண்டி கூடத் தன் மொழியில்தான் காதலை வெளிப்படுத்துவான். ஆனால் காதல் மொழியாகக் கூட நம் கன்னித் தமிழ்மொழி இன்றில்லையே! 'I love you' தானே இன்று அனைத்துத் தமிழரும் கூறும் காதல் முதல் மொழி.

இந்த இழிநிலை மாறப் பெரியார் அன்று மொழிந்த இழிசொல் தமிழனுக்கு அன்றும் உறைக்கவில்லை; இன்றும் உறைக்கவில்லை.

காட்டுமிராண்டி மொழியாக இருக்கும் தமிழ், முதலில் கல்வி மொழியாக மாறுவதற்கும் கடுந்தடையாக எழுந்து விட்டனவே ஆங்கில வழிக் கல்வி நிலையங்கள். அங்கே தமிழ் மொழி வழி வகுப்பே இல்லை. தமிழ்ப் பாடமே இல்லை. இசை வகுப்பில் திருவெம்பாவைப் பாடலை MARKALI THINKAL (மார்கழித் திங்கள்) என ஆங்கிலத்தில் எழுதிப்படிக்கும் அவலம் தமிழகத் தலை நகரிலேயே நடந்து கொண்டிருக்கிறதே.

## தேன்மொழி, கனிமொழி

இன்றையத் தமிழ்த் திரைப்படத்தில் ஒரு காட்சி, காதலர்களிடையே ஊடல் எழுகிறது. உயர் கல்வி பயின்ற காதலி சொல்கிறாள், "உனக்கு நானெல்லாம் செட் ஆக மாட்டேன்; எவளாவது தேன்மொழி, கனிமொழி கிடைத்தால் போய்ப்பார்". இந்த உரையாடலில் தமிழ் எவ்வளவு இழிவு படுத்தப்பட்டுள்ளது என்பதை எந்தத் தமிழ் இளைஞனாவது உணர்ந்திருப்பானா? இங்கு பெரியார் சரியாக உணரப்பட்டிருந்தால், மதிக்கப்பட்டிருந்தால், ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தால் இந்த நிலை நம் மொழிக்கு வந்திருக்குமா? பகுத்தறிவும் மானமும் சுய மரியாதையும் பெறாதவரை தமிழன் காட்டுமிராண்டி; அவன் மொழியும் காட்டுமிராண்டி மொழியே.

## வருணாசிரம வசப்பட்ட தமிழ்

'மொழிக்கும் சுயமரியாதை வேண்டும்' இது பெரியார் கூற்று. ஆனால் தமிழோ,ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகச் சுயமரியாதை இழந்து தவிக்கிறது. 5000 ஆண்டுகளாக வருணாசிரம வசப்பட்டுக் கிடக்கிறது நம் தமிழ். வருணாசிரமம்,சர்க்கரை நோய் போல் பரம்பரையாய்ப் பற்றித் தொடரும் கொடு நோய்; என்றும் தீரவே செய்யாத கடும் நோய். தமிழனை முடக்கிய இந்நோய் தமிழ்மொழியை, தமிழ் இலக்கண இலக்கியங்களையும் விட்டு வைக்கவில்லை. மருத்துவம் வளராத பழங்காலத்தில் ஒருவருக்குச் சிறுநீர்ப்பையில் கல்லடைப்பு ஏற்பட்டால் அது உயிரடைப்பில் தான் முடியும். இன்றோ, எப்படிப் பட்ட கல்லையும் மருத்துவம் கரைத்து விடும். (நம் காசையும் சேர்த்துத் தான்) அன்று,எந்த நோயால் இவன் இறந்தான் என்பது தெரியாமலே எண்ணற்றவர்கள் இறந்திருப்பார்கள். அதே போல், தமிழனுக்கு வருணாசிரம நோய் தொற்றியதையும் அதன் தாக்கம் தமிழையும் பற்றியதையும் பண்டைத் தமிழன் அறியாமலே 5000 ஆண்டுகள் கழித்து விட்டன. இந்த நோயைத் தம் பகுத்தறிவென்னும் நுண்ணோக்கியால் நுணுகிக் கண்டவர் பெரியார்.

சேய்க்கு நோய் வந்தால் தாய்க்கும் மருத்தளிக்கும் நன் மருத்துவர் போலத் தமிழனுக்கும் தமிழுக்கும் தடுப்பு மருந்து கொடுக்கத் தலைப்பட்டார் பெரியார்.

## தமிழர் கடவுள் கொள்கையும் ஆரியத்தாக்கமும்

அச்சமும்,ஆசையும் தாம் கடவுள் கொள்கைக்கு அடிப்படை. தொடக்கக் காலத்தில் ஆசையை விட அச்சமே கடவுட் கருத்தை உருவாக்கியது. பழந்தமிழரின் கடவுட் கொள்கை இயற்கையோடு இயைந்தது. தனக்கு விளங்காத, புரியாத, வெல்லமுடியாத இயற்கை விளைவுகளின் தாக்குதலுக்கு அஞ்சியதில் தொடங்கி அவ்வியற்கையால் பெற்ற வளத்தின் ஆசையாலும் வளர்ந்திருந்தது. பருவத்தில் மழை பெய்து வளம் கொழித்து வாழ்க்கை செழித்த போது ஆசை ஏற்பட்டது. கொடு மழையால் புயலும்,வெள்ளமும் சூழ்ந்து தங்கள் வாழ்வைப் புரட்டிப் போட்ட போது அச்சம் ஏற்பட்டது. இருளுக்கு அஞ்சினான், இடியோசைக்கு அஞ்சினான். ' இழும்' என வீழும் அருவியின் அழகிலும் இதமாக ஓடும் ஆற்றின் அழகிலும் ஆசை கொண்டான். இயற்கை தந்த அழகை முருகெனக் கொண்டான். இயற்கையால் வந்த அச்சத்தைக் கொற்றவையாகக் கண்டான். தன்னலமின்றிக் கூட்டத்தார் வாழத் தான் வீழ்ந்த தலைவனைப் புதைத்து அடையாளக் கல் நட்டான். அவனை மதிக்கக் கருதி அக்கல்லை மதித்தான். வெறுங்கல், பேரும் பீடுமெழுதிய பெருங்கல்லாக உயர்ந்தது; கலையழகூட்டச் சிலையாகியது. 'ஐ' என்றால் தலைவன். ஐயா, ஐயன், ஐயனார் ஆகி குலதெய்வமாகக் கும்பிடு பெற்றது, அந்தக் குத்துக்கல், இந்த மடைமையை மறுத்துத்தான்.

**நட்டு வைத்த கல்முன் நறும்படையலிட்டொடுங்கிக்**
**குட்டு வைத்தழுவார், கூன்கொள்கை மாயாதோ**

என நம் தலையில் குட்டு வைத்தார் பெரியார்.

தமிழகத்தில் ஆரியம் புகுந்தபின், முருகனுக்கு அப்பன் சிவன் என்றனர். சிவனுக்கு மனைவி - மனைவிக்கு அண்ணன் - முருகனுக்கு மூத்தவன் என்றெல்லாம் தங்கள் கடவுளர்களைத் தமிழ்க் கடவுளுக்கு மூத்தவர் ஆக்கினர்; முதன்மை ஆக்கினர்.

முருகன், கொற்றவை, ஐயனாரிடம் பழந்தமிழன் தன் மகிழ்ச்சியையும் வருத்தத்தையும் தமிழில்தான் புலம்பிக்கொண்டிருந்தான். ஆனால் ஆரிய இறக்குமதிக் கடவுளர்களாகிய சிவன், திருமால், உமை, கணபதிகளுக்குத் தமிழ்த் தெரியாதே! மொழிபெயர்ப்பாளராக முன்குடுமிப் பார்ப்பான் இடையில் முளைத்தான்; இடைத் தரகனானான். நல்ல புத்தி கொண்ட அப்பாவித் தமிழனைக் குறுக்குப் புத்தி கொண்ட அப்பாவிப் பார்ப்பான் படிப்படியாக, புதிது புதிதாக, விதவிதமாக ஏமாற்றத் தொடங்கினான்.

இமயமலையில் ..... கைலாயத்தில் சிவன் என்றான்; அந்தக் காலத்து எந்தத் தமிழனுக்கும் ஏறிச் சென்று பார்க்க முடியாதே! நீர்க் கடலையே

தாண்டும் அறிவு பெறாத காலத்தில் பாற்கடலில் படுத்திருக்கும் திருமால் என்று எட்டமுடியாத எல்லை வைத்து நம்ப வைத்தான். கபிலர், பரணர் போன்ற கல்வி வல்ல பார்ப்பனப் புலவர்கள் தமிழ் இலக்கியங்களுக்குள் இக்கருத்துக்களை இடைச் செருகல் செய்தனர். இந்த இடைச் செருகல்களை எடுத்தெறிந்து தமிழ் இலக்கியத்தைத் தூய்மைப் படுத்தவே துணிவு கொண்டார் பெரியார்.

## இதிகாசச் சூழ்ச்சி

'திருக்குறளைப் பற்றிப் பேசினால் கேட்கக் கூட்டம் வருவதில்லை. இராமாயணம், மகாபாரதம் பற்றி எத்தனை முறை பேசினாலும் கூட்டம் வருகிறதே, ஏன்?'

இந்தக் கேள்வியைத் தானே கேட்டுத் தானே பதிலுரைப்பார், திருக்குறளார் முனுசாமி. என்ன பதில் தெரியுமா?

'இராமாயணமும் பாரதமும் அடுத்தவன் கதை; அடுத்தவன் பெண்டாட்டி கதை. எனவே உட்கார்ந்து உட்கார்ந்து ஆசையாய்க் கேட்கிறாய். திருக்குறள் உன் கதை; உன் வாழ்க்கைக் கதை; எனவே கேட்கப் பிடிக்காது.'

என்பார் திருக்குறளார். எல்லாருக்கும் கதை கேட்கப் பிடிக்கும். அறிவு முதிராப்பருவமுடைய குழந்தைகளுக்குக் கதைகள் அதிகம் பிடிக்கும். தமிழனும் அறிவு முதிர்ச்சி அற்றவனாய்க் கதை கேட்டான்; அடுத்தவன் கதையை ஆசையுடன் கேட்டான்; அடுத்தவன் மனைவிக்கு நேர்ந்த துன்பங்களையெல்லாம் அழுதழுது கேட்டான்.

சிறிய உண்மையின் பெரிய உருவம்தான் கதை. நல்ல உடன் பிறப்பாளர் கதை இராமாயணம்.கெட்ட உடன்பிறப்பாளர் கதைதான் பாரதம். இந்த இரு கதைகளும் நம்முடைய இல்லங்கள் தோறும் நடந்துகொண்டுதான் இருக்கின்றன. இதையே எத்தனை முறை சொல்ல முடியும்? சிறிது சிறிதாகக் கதைக்கு கை முளைத்தது, கால் முளைத்தது. எளிய மனிதனாயிருந்த இராமன், தலைவனானான். பெரு வீரனானான். இளவரசனானான்; இறுதியில் திருமாலின் அவதாரமாகிக் கடவுளானான். அற்புதங்கள், அதிசயங்கள் நிகழ்த்தினான்.... விடிய விடியக் கதை நீண்டது. பார்ப்பான் வயிறும் வாழ்வும் நிறைந்தது.

கதை மாந்தர்களுக்குக் கடவுட்காதலர்களைக் கருவாக்கி அவர்கள் மூலம் வீரமக்களை இதிகாசங்கள் உருவாக்கிக் கொடுத்தன. இராம சகோதரர்கள், சீதை, அனுமன் ஆகிய கதை மாந்தர்கள், அவரவர் பெற்றோர்களுக்கு இயல்பாய்ப் பிறந்திருக்க முடியாதா? கர்ணன் உள்ளிட்ட பாண்டவர்களுக்கு வேறு வேறு தந்தையர்; பாஞ்சாலிக்கோ வேறு வேறு கணவர்கள் ஏன்? அடுத்த வீட்டில் இப்படிப்பட்ட 'கசமுசா' நடந்தால்தான் கேட்கவும் பேசவும் விரும்பும் அற்ப மனிதர்கள் நாம். இதை நம் வீட்டில்

அனுமதிப்போமா? இதைத்தான் பெரியார் கேட்டார். நமக்கோ அவர் மீது கடுங்கோபம்.

## இருவகை உத்திகள்

ஒரு கதையை முதலிலிருந்து தொடங்கி முடிவு வரை கூறுவது ஒரு முறை. முடிவை முதலில் கூறி - இது எப்படி நடந்தது எனத் தொடக்கத்தை நோக்கி நகர்த்துவது மற்றொரு முறை. புதினம், நாடகம், திரைப்படங்களில் இந்த இருவகை உத்திகளையும் கையாளுவார்கள். மதவாதிகளும் இந்த இரு உத்திகளையும் கையாண்டார்கள். மனிதனைக் கடவுளாக்குவது ஒரு முறை; கடவுளை மனிதனாக்குவது மற்றொரு முறை. ஏசுவும், முகமது நபியும் இந்த மண்ணில் பிறந்து மண்ணில் மரித்த மாந்தர்கள். நல்ல மனிதர்களாகவும் இருந்திருப்பார்கள் போலும். அக்காலத்தில் அவர்களைச் சுற்றி வாழ்ந்த மனிதக் கூட்டம் ஏசு, முகமது நபியைப் போல் நல்லவர்களாகவும், மனித நேயமுடையவர்களாகவும், சமூகப்பற்றாளர்களாகவும் பக்குவப் படாதது. எனவே ஏசு, முகமது நபி ஆகியோர் நற்செயல்களைக் கொண்டாடினார்கள்; நற்குணங்களை வியந்து பாராட்டினார்கள். மதவாதிகள், அவர்களது இயல்பான சமூகப் பணிகளை அதிசயங்கள், அற்புதங்கள் நிகழ்த்தியதாக ஒட்டு வேலை செய்து கடவுள் ஆக்கினார்கள் என்பதே உண்மை.

இரண்டாவது உத்தியில் முதலில் முடிவுரை - தேவ உலகம் - கடவுள் முன் தேவர்கள் தொழுது நிற்கிறார்கள். நிலவுலகில் தீயவன் ஒருவன் செய்யும் கொடுமைகளால் மக்கள் துன்புறுகிறார்கள். அத்தீயவனை அழிக்க வேண்டும். பேராற்றல் மிக்க அத்தீயவனைக் கடவுளால் மட்டுமே அழிக்க முடியும், என வேண்டுகிறார்கள். கடவுள் மனிதனாக (அவதாரமாக) மண்ணுலகில் பிறக்கிறான் எனக் கதை முடிவிலிருந்து தொடங்குகிறது. இராமன், கிருஷ்ணன் அவதாரங்கள் இதைப் போன்றவைதாம். முதல் உத்தியில் மனிதன் பிறந்தது உண்மை; கடவுளாக்கியதுதான் கற்பனை. இரண்டாவது உத்தியிலோ கடவுள் மனிதனாக அவதரித்ததே கற்பனைதான். ஆனால் விடிய விடிய இராமாயணம் கேட்ட நம்மவர்கள் இராமபக்த அனுமானாகவே மாறிவிட்டனர், இது கதை என்பதை மறந்து, இந்த 'HERO WORSHIP' தானே இன்று வரை தமிழனை முட்டாளாக்கி வைத்திருக்கிறது.

இதுகதை; இது கற்பனை; இது நடந்ததில்லை, வெறும் நாடகம் என்பதைப் புரிய வைக்கத்தான் பெரியார் புலம்பித் திரிந்தார். ஆனால் வடநாட்டிலும் தமிழ் நாட்டிலும் எண்ணற்ற இராமர் பாதங்கள், தென் கடல் நெடுகிலும் இராமர் பாலங்கள் என முள்ளு முனையிலே மூணு குளம் வெட்டி வெள்ளமாய் நீர் பாய்ச்சி வேளாண்மை செய்பவர்கள் இன்னும் இருக்கிறார்கள். பாவம் பெரியார்!

## பழந்தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சார்பு

சூரிய கிரகணம் பற்றிய இராகு, கேது செய்திகள், நாண்மீன்கள் பற்றிய கதைகள், அமிழ்தம் கடைந்த கதை, சொர்க்க, நரகக் கதைகள், அருந்ததி, அகலிகை போன்றோர் கதைகள், ஊழ்வினைக் கோட்பாடு என எண்ணற்ற மூட நம்பிக்கைகளும் புராணச் செய்திகளும் சங்க இலக்கியத்திலும் திருக்குறளிலும்கூட இடம் பெறத் தொடங்கின. இதன் தொடர்ச்சியாகத் தான் தமிழரின் ஒப்பற்ற காப்பியமாகக் குடிமக்கள் காப்பியமாகக் கொண்டாடப்படும் சிலப்பதிகாரத்தில் கூட மாமுது பார்ப்பான் மறைவழி காட்டத் தீ வலம் வந்து நடந்த கோவலன், கண்ணகி திருமணக் காட்சியுடன் தான் கதை தொடங்குகிறது. இந்து மதத்தாரைத்தான் ஆரியம் ஆட்கொண்டிருக்கிறது என்பதற்கும் மேலாகச் சமண அடிகளாகிய இளங்கோவடிகளும் ஆரியச் சார்பு அடிமையாகியிருப்பது வேதனைக்குரியது. முற்பிறப்பு, ஊழ்வினை, பத்தினித் தெய்வம், தீதிலா வடமீன். இந்திரன் கதை, மாடல மறையோன், பார்ப்பனத் தோழி, வனசாரிணி, காவல்பூதம், வேள்வி செய்தல் என எத்தனை எத்தனை ஆரியச் சார்புச் செய்திகள்.

> மதச் சம்பந்தமற்ற ஒருவனுக்குத் தமிழில் இலக்கியம் என்பது
> மிகமிக அரிதாகவே உள்ளது.

என்ற பெரியார் கூற்று, சிலப்பதிகாரத்திற்கும் பொருந்துகிறதே! மதத்தை விடுத்து மனிதனுக்காக மட்டுமே எழுந்த இலக்கியம் சங்ககாலம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டு முடியக் காணக் கிடைப்பது அரிதாகத் தானே உள்ளது.

## பெரிய புராணப் பெரும் பொய்கள்

மதங்கள் என்றாலே முரண்பாடுதான்; சண்டைதான்; போர்தான். இன்றைய 21ஆம் நூற்றாண்டிலும் இசுலாம், கிருத்துவப் போர், இசுலாம், இந்துப் போர்கள். 20ஆம் நூற்றாண்டிலோ பழைய கிருத்துவம், புதிய கிருத்துவத்திற்கிடையே சிலுவைப் போர்கள், இசுலாம் உட் பிரிவினருக்கிடையே இடைவிடாத போர்கள் என்பதெல்லாம் இன்றைய வரலாற்றுச் சான்றுகள். இதன் முந்திய கட்டமாகத் தமிழகத்தில் சைவ சமணப் போரும், சைவ வைணவப் போரும் அன்றே நடந்துகொண்டிருந்தன. கம்பராமாயணத்தின் எழுச்சியால் வைணவம் தழைபபதைப் பொறுக்க முடியாததால் எழுந்ததுதான் சைவப் பெருமை பேசும் பெரிய புராணம். கம்பராமாயணத்தில் நிகழ்த்திக்காட்டப்பெற்ற அதிசயங்கள், அற்புதங்களுக்கு இணையாகத் தாமும் பாடினால் தானே, மதப் போதை மாத்தமிழன் மகிழ்வான்? எனவே சேக்கிழாரும் மூன்று வயதில் ஞானப்பால் உண்ட சம்பந்தன், அரவு தீண்டி மாண்ட மகனை உயிர்ப்பித்த நாவரசன், கடவுளால் இருதார உரிமை வழங்கப் பெற்ற சுந்தரன் மற்றும் பிள்ளைக் கறி சமைத்தது, மனைவியையே

கடவுளுக்குக் கொடுத்தது போன்ற அதிசயங்களைப் பாடிக்குவித்தார்: அனல்வாதம் புனல் வாதத்தில் மதுரைத் தமிழ்ச் சங்க ஏடுகளை அழித்த ஆணவம் புகன்றார். 8000 சமணரைக் கழுவேற்றிய வரலாறு படைத்தார். ஆனால் என்ன பாடி என்ன பயன்? கம்பன் கவிச்சிறப்பின் முன் இந்த வம்பன் கவிதை நிற்கவில்லை. பெரிய புராணம், சைவ மடங்களின் இருட்பொந்துகளுக்குள் முடங்கி இளைப்பாறத் தொடங்கியது.

## பெரியாரின் இலக்கியப் பார்வை

**அறிவூட்டும் இலக்கியமே**
**பெரியாரின் பெருவிருப்பம்**

என்ற சுப.வீரபாண்டியனின் ஆய்வுரைதான் பெரியாரின் இலக்கியப் பார்வையின் அடிப்படை உண்மை.

> இலக்கியமென்று பாராட்டப்படுகின்றவற்றில் குறைகளையும் மூட நம்பிக்கைகளையும் ஒழுக்கக் கேடுகளையும் தாராளமாக எடுத்துச் சொல்ல வேண்டியது அவசியமாகும். இதுதான் நமது புலவர்களின் இலக்கியத் தொண்டாக இருக்க வேண்டும்.

என்ற பெரியாரின் வார்த்தைகள் தாம் தமிழ் இலக்கியத் திறனாய்விற்குப் பெரியார் அமைத்துக் கொடுத்த சரியான அடித்தளம். ஆனால் நம் தமிழறிஞர்களோ இலக்கியத் திறனாய்வு இம்மியளவும் இல்லாதவர்களாய்ப் போலி மத வாதிகளைப் போல் சமயச் சொற்பொழிவாளர் வேடமிட்டே வாழ் நாளை வீணாளாக்கிவிட்டனர்; தமிழ் வணிகர்களாகத் தரம் தாழ்ந்தனர். ஆச்சாரியர்களுக்கும் ஆதீனங்களுக்கும் அடிபணிந்து, பெரியார் திறனாய்வைக் கொச்சைப்படுத்திப் பழி தூற்றினர்.

'நெற்றிக் கண்ணைத் திறந்தாலும் குற்றம் குற்றமே' எனத் திருவிளையாடல் புரிந்த தமிழறிஞர்களே, உங்கள் கடவுள், கண்ணைத் திறந்தாரோ, திறக்கவில்லையோ! இதோ! பெரியார் பகுத்தறிவுக் கண்ணால் எரிக்கிறார்! கடவுளே பாடினாலும் கடவுளைப் பாடினாலும் எந்தப் படைப்பும் திறனாய்விற்கு உட்பட்டதே. சமுதாயப்பயன் விளைவிக்காதனவும், சமுதாயத்திற்குக் கேடு விளைப்பனவும் குற்றம் உடையனவே.

> மொழி என்பது ஒரு இனத்தின் போர்க்கருவி. போர்க்கருவிகள் காலத்திற்கேற்ப மாற்றப்பட வேண்டும். - பெரியார்.

# பெரியார் நாத்திகர் கடவுள் மறுப்பாளர்

## கடவுள் மரத்தில் ஒளிந்திருந்த சாதிப் பாம்பு

> பெரியாரின் கடவுள் எதிர்ப்பு, தத்துவப் போக்கில் எழுந்த ஆய்வுச் சிந்தனை இல்லை. தன் காரியத்திற்கு எதிராக வரும் கடவுளை அவர் எதிர்த்தார்.

என்ற தோழர் அருணனின் ஆய்வுரை இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று. மனிதனைக் கொத்திய சாதிப் பாம்பு, மதம் என்ற பொந்தில் மறைந்திருந்தது. அந்தப் பொந்து கடவுள் என்ற மரத்தின் உச்சியில் இருந்தது. கடவுள் மரமோ வேதம், உபநிடதம், புராணம் ஆகிய அடர்ந்த புட்புதர்களுக்கு நடுவே இருந்தது. இந்தச் சாதிப் பாம்பைக் கொல்லச் சிறுதடி பயன்படுமா? பெரியார் அழிவு வேலைக்காரர் அல்லவா? பகுத்தறிவுத் தீ மூட்டினார். மக்களிடம் உயர்வு தாழ்வு நஞ்சைப் பாய்ச்சிய சாதிப் பாம்பை அழிக்க மூட்டிய தீ பரவி கடவுள் மரத்தை எரிக்கத் தொடங்கியது. சாதியை அழிக்க எதிராக வந்த கடவுள் பெரியாருக்கு எதிரியானார்.

## கடவுள் இருந்தால்... இருக்கிறார்

> அய்யா, நீங்கள் கடவுள் இல்லை; இல்லை என்று சொல்லிக் கொண்டேயிருக்கிறீர்களே! திடீரென உங்கள் முன் கடவுள் வந்து விட்டால் என்ன செய்வீர்கள்?

இது குறும்புக்கார இதழாளரின் கேள்வி.

> இருக்கிறார் என்று சொல்லிவிட்டுப் போகிறேன்.

இது பெரியாரின் குறும்பான பதில். கடவுள் இருக்கிறார்; இல்லை என்பதில் பெரியாருக்குப் பெரிய அக்கறையோ கவலையோ இல்லை.

> நாத்திகன் கடவுள் வார்த்தைகளை மறுக்கவில்லை. அவன் மறுக்கும் வேத, உபநிடத, புராணங்கள் மனிதர்களின் வார்த்தைகளே.

என்ற பெரியாரின் வாதத்தில் 'எனக்கில்லை கடவுள் கவலை' என்பதை உறுதி செய்கிறார்.

கடவுள் பெயரைச் சொல்லி அவர் சொன்னதாகச் சொல்லிச் சக மனிதனைத் தாழ்த்தியிருக்கிறீர்கள்; சுரண்டியிருக்கிறீர்கள் என்பதைத் தான் நாத்திகன் புரிய வைக்கிறான். அந்த வார்த்தைகள் பொய்யானவை என மறுக்கிறான். கடவுள் உண்மையா? பொய்யா? என்ற கவலை நாத்திகனுக்கு இல்லை.

## நாத்திகம் மதமா?

பெரியார் சிந்தனைகள், கருத்துரைகள் அனைத்தையும் முழுமையாகப் புரட்டிப் பாருங்கள். அவர் நாத்திக வாதத்தை எங்கே தொடுகிறார், எங்கே முடிக்கிறார்? என்பதைக் கூர்ந்து கவனியுங்கள். தனது சமூக நீதிப் போராட்டத்திலிருந்து பிரித்தெடுத்துத் தனித்த சிந்தனையாக அவர் நாத்திகத்தை முன்னிலைப் படுத்தியிருக்கிறாரா? பேசியிருக்கிறாரா? பெரியாரின் நாத்திகம், உலகாயுதம், சாருவாகம் போல கடவுளை மறுப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்ட மதமில்லை; பெரியார் ஒரு மதத்தலைவரும் இல்லை; அவருக்குத் தன் போக்கான நடைமுறையை விட்டு விட்டுத் தத்துவம் பேசுவதில் அக்கறையும் இல்லை என்பதுதான் ஆய்வாளர் கண்ணோட்டம்.

## கடவுள் அச்சம் களைந்தார்

கடவுளை எதிர்த்தார், திட்டினார், உடைத்தார் என்பதெல்லாம் கடவுள் கருத்தின் மீது மனிதனுக்கு உண்டாக்கப்பட்டிருந்த அச்சத்தைப் போக்குவதற்கு அவர் எடுத்த நடவடிக்கைகள்தாம். 'கடவுள் கண்ணைக் குத்தி விடுவார்' என்ற மிரட்டலை நம்பிப் பயந்துகொண்டிருந்த அப்பாவியிடம், 'பார்!' நீ கடவுள் என நம்பும் கல்லை நான் உடைக்கிறேன்; என்னை ஒன்றும் செய்யவில்லை, என அவன் அச்சத்தைத் தெளிவித்தார். கடவுளைத் திட்டிக்கொண்டே நோவும் சாவுமாக நூற்றை நெருங்கிய வலிய கிழவரல்லவா பெரியார்!

## கடவுள் பெயரால் சுரண்டல்

கடவுள் கருத்தின் ஒரு முகம், உழைக்காத ஒரு கூட்டம் உழைப்பவன் பொருளைக் கடவுள் பெயரால் சுரண்டுவது. மழை இல்லை, வீட்டில் ஒரு நெல் மணிகூட இல்லை என்ற நிலையில் கும்பியும் குடலும் காய்ந்து கிடக்கும் கூட்டத்தாரிடமும், மழை பெற மாரியாத்தாவிற்கு ஆடுவெட்டிப் பொங்கலிடச் சொன்னதைப் பார்த்துப் பார்த்துப் பொங்கியவர் பெரியார். இவனோ பொங்கலிடத் தன் பூமியை அடகு வைத்துப் பொருள் பெறுகிறான். மூன்று முறை பொங்கலிட்டான்; நிலத்தை முழுதாக இழந்துவிட்டான்.

நேர்மையாக வரி செலுத்தாதவன்கூட நேர்த்திக்கடனை நிறைவாகச் செலுத்துகிறான். கல்யாணம் தொடங்கிக் கருமாதி முடிய தன் வீட்டில் நடக்கும் அத்தனை சடங்கிலும் பார்ப்பானுக்குத் தன் வருவாயில் வரிகட்டாதவன் யார்? ஏழை முதல் பணக்காரன் வரை அவனவன் தகுதிக்குத் தக்கபடி கோதானம் முதல் பூதானம் வரைப் பார்ப்பான் பிடுங்கி விடுகிறானே!

ஓராயிரத்திற்கும் யாகம்; நூறாயிரத்திற்கும் அதே யாகம் நடத்துகிறானே! நம்மவன் உழைத்துச் சேர்த்த பொருளில் கோல் கொண்டு அரசாள்பவனுக்குக் கட்டத் தவறினாலும் நூல்கொண்டு அரசாள்பவன் தவறாமல் பெறுவதைப் பார்த்துப் பெரியார் கொதித்தார். இவனது இத்தனை பிடுங்கலும் கடவுளைக் காட்டித்தான் என்பதைக் கண்கூடாகக் கண்டார். 'அவனை நம்பாதே; அவன் இருப்பதாகச் சொல்வதை நம்பாதே; அவனுக்குக் கொடுக்காதே 'உனக்குக் கொடுக்கும்' என அவன் சொல்வது உன்னைக் கெடுப்பதற்காகத்தான், எனச் சொல்லிச் சொல்லி மாய்ந்தார் பெரியார்.

## கேட்காதே; கொடுக்காதே

கடவுள் கேட்கிறார், நீ கொடு என்பதும் கடவுள் தருகிறார், நீ பெறு என்பதும் ஏமாற்று; இதற்குள் சூழ்ச்சி இருக்கிறது என எச்சரித்தார் பெரியார்.

'உன் புத்தியைப் பயன்படுத்திப் பார்' எனச் சொல்வதற்காகத்தான் 'கடவுளை நம்புபவன் முட்டாள்' என உசுப்பேற்றினார். கடவுள் தருவார் எனச் சொல்லி உன்னை ஏமாற்றிக் கடவுள் பெயரால் உன்னிடமிருந்து பொருளைப் பிடுங்குபவன் 'அயோக்கியன்' எனத் திட்டினார்.

> தீ மிதித்தல், தீச்சட்டி ஏந்துதல், அலகு குத்துதல் என உன்னை நீயே வருத்திக்கொள்வது காட்டுமிராண்டித் தனமில்லையா? உன்னைத் துன்புறுத்தித் தான் இன்பமடையும் கடவுள் தாயுமானவரா?

எனக் கண்டித்தார்.

> **கறவையிடம் பால் கரந்து கன்றிற்கின்றிக்**
> **கடவுளெனக் கல்லின் மேல் சிந்தலாமா?**

எனக் கவிஞன் கேட்பது பெரியார் கேட்ட கேள்வியைத்தான். கன்று பசித்திருக்கிறது; கல்லின் மேல் பாலையும் தேனையும் சொரிகிறாயே, இது இரக்கமற்ற அரக்கத்தனம், முட்டாள்தனம். அடுத்தவன் பொருளை வீணாக்கி இரசிக்கும் கொடூரக் களிப்பில்லையா இது? அவன் பொருளை இப்படிப் பாழ் செய்வானா? எந்தப் பார்ப்பானாவது தீ மிதிக்கிறானா? அலகு குத்தி ஆடுகிறானா? தன் சொந்தப் பணத்தில் பாலாபிடேகம் செய்கிறானா? எனக் கேட்டுக் கேட்டுப் பார்த்தார். 'கடவுளை மற; மனிதனை நினை' என்பதைக் கட்டளைச் சொல் ஆக்கினார்.

## தேவையில்லாத விசயம்

ஆம், கடவுள் பெரியாருக்குத் தேவையில்லாத விசயம்; அவன் மனிதனைச் சோதனைக்குள்ளாக்காத வரை. கடவுள் பெரியாருக்குத் தேவையில்லாத விசயம், அவன் மனிதனில் உயர்வு தாழ்வு கற்பிக்கத் துணையாகாத வரை. கடவுள் பெரியாருக்குத் தேவையில்லாத விசயம், அவன் மனிதனின் சுய அறிவை அழித்து மூட நம்பிக்கையில் முடக்குவோருக்கு ஒத்துழைக்காதவரை.

பெரியாருக்கு மட்டுமல்ல, நமக்கும் கடவுள் தேவையில்லாத விசயம்தான். அந்தக் கடவுளை நினைத்து அச்சப் படாமலும், அந்தக் கடவுளை நம்பிப் பேராசைப் படாமலும் இருந்தால்,

## பெரியார் ஏற்ற கடவுளை நீங்களும் ஏற்கலாம்

கடவுளைக் குறித்துப் பெரியார் கொண்டிருக்கும் கருத்துக்களைக் கீழே காணுங்கள். விருப்பு வெறுப்பின்றிச் சிந்தியுங்கள். உங்கள் மனத்தை மட்டும் சாட்சியாக வைத்து ஆய்வு செய்யுங்கள். உங்களுக்கும் ஏற்புடையதுதான் என நீங்கள் ஏற்கும் கருத்துக்கள் எத்தனை? என்பதை எண்ணிப் பார்த்துப் பின் பெரியாரை மதிப்பிடுங்கள். முடிவில் நீங்களும் நாத்திகர் ஆகலாம்; அல்லது பெரியாரும் ஆத்திகராகத் தோன்றலாம்.

## கடவுள் குறித்துப் பெரியார் கருத்துக்கள்

1. அறிவியல் வளர்ச்சிமிக்க இந்நாளில் கடவுளைப்பற்றிப் பேசிக் கொண்டிருப்பதே காட்டுமிராண்டித்தனம்.
2. தானாகத் தோன்றித் தானாக வாழ்ந்து தானாக அழிந்து கொண்டிருக்கும் உலக இயற்கைக்குத்தான் கடவுள் எனப் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதாக மாத்திரம் சொல்லிக்கொண்டிருப்பவர்களிடம் நமக்கு இப்போது அவ்வளவாகத் தகராறு இல்லை.
3. அன்பு என்னும் குணம் தான் சிவம். உயிர்களிடம் அன்பு செலுத்துவதுதான் சைவம் என்பதானால் நாமும் ஒரு சைவன் எனச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறோம்.
4. கடவுளைப் பற்றிய விசயங்கள் வரும்பொழுது நாம் கவலைப்படுவது எதைப் பொறுத்த வரையில் என்றால் கடவுள் இருக்கிறார் என்று ஒருவன் ஒப்புக்கொள்வதன் மூலம் அவனுடைய அறிவு வளர்ச்சியும், முயற்சியும் கெட்டுச் சோம்பேறித்தனம் உண்டாகக் கூடாது என்பதைப் பொறுத்துத்தான்.
5. ஒரு மனிதனுக்குப் பிறர் சொல்லிக்கொடுத்த பிறகுதான் கடவுள் என்ற பேச்சும் நினைப்பும் உண்டாவதொழியத் தானாக ஏற்படுவதில்லை.

6. இயற்கையின் உண்மையை அறிய முடியாத இடம் வரை அவை கடவுளென்றும் அவற்றின் இயக்குதல் கடவுள் சக்தி என்றும் சொல்ல வேண்டிய அவசியம் தானாக ஏற்பட்டது.

7. முடியாதவை, அறியாதவைதான் கடவுள் சக்தி, மேஜிக், சித்து முதலியவற்றை 'இது ஏதோ தந்திரம் தானே ஒழிய வேறில்லை, ஆனால் அது இன்னது என்று கண்டு பிடிக்க முடியவில்லை' என்று சொல்லிவிடுகிறோம். இதே நிலையைத்தான் கடவுள் கருத்திலும் கொள்ளவேண்டும்.

8 மனிதன், தான் எல்லாம் தெரிந்தவன் என்கிற ஆணவம் உடையவனாதலால் தன் புத்திக்கு எட்டாததைத் தனக்குத் தெரியவில்லை எனக் கண்ணியமாய் ஒப்புக் கொள்ளச் சம்மதிக்கவில்லை. அவற்றைக் கடவுள் செயல் என மழுப்பினான்.

9. கடவுள் தமிழ்ச் சொல் இல்லை. தமிழனுக்கு தோன்றிய காலத்திலேயே கடவுள் உணர்ச்சி இருந்திருக்குமானால் அதற்கு ஒரு வார்த்தை தமிழில் இருந்திருக்கும். அதே போல் கடவுள் இல்லை என்ற கருத்தையோ, மனிதனையோ குறிக்கும் தமிழ்ச் சொல் இல்லை. கடவுள் பெயர்கள், புராணங்கள், பூசைகள், விழாக்கள் அனைத்தும் வடமொழியே.

10. ஜீவகோடிகளின் உயர்ந்த இலட்சியத்தைக் குறிக்கும் பொருளே கடவுள். எனவே ஒவ்வொருவனும் தன் கடவுளைத் தானே படைத்துக் கொண்டான்.

## நாத்திகன் என்றால் யார்?

### அறிஞர் முர்ரே விளக்கம்

அறிஞர் முர்ரேயிடம், வழக்கறிஞர், தான் நீதிமன்றத்தில் சொல்வதற்காக, 'நாத்திகர் என்றால் யார்?' என்று ஒரு குறிப்பு எழுதித் தரும்படி கேட்டார். நீதிமன்றத்திலும் அமெரிக்காவெங்கிலும் பிரபலமான அந்தக் குறிப்பை முர்ரே எழுதித் தந்தார்.

> உங்களிடம் முறையிட வந்திருப்பவர்கள் நாத்திகர்கள். அவர்கள் கீழ்க்கண்டவாறு வாழ்க்கை முறை உள்ளவர்கள். ஒரு நாத்திகன் தன்னையும் மனிதர்களையும் நேசிக்கிறான்; கடவுளை அல்ல. (அமெரிக்காவிலே இருந்து சிந்தித்தாலும் நாத்திகன் என்றவுடன் வரும் கருத்தே தந்தை பெரியாரின் 'கடவுளை மற; மனிதனை நினை'
>
> என்பதாகத்தான் இருக்கிறது. பெரிய மனிதர்கள் ஒன்றுபோலவே நினைப்பார்கள் என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு) ஒரு நாத்திகன், பூமியில் வாழும் போதே

எல்லா மனிதர்களுக்கும் கிடைக்க வேண்டிய இன்பமாகச் சொர்க்கத்தை நினைக்கிறான். பிரார்த்தனை மூலம் ஒரு உதவியும் கிடைக்காது என்றும், ஒவ்வொருவனும் தன்னுடைய சொந்த பலத்தை நம்பி வாழ்வின் பிரச்சினைகளைச் சமாளித்து மகிழ்ச்சி அடையவேண்டும் என்றும் நாத்திகன் நினைக்கிறான். வாழ்க்கை முழுமையடைவதற்கு ஒவ்வொருவனுடைய, சக மனிதர்களுடைய அறிவே உதவுமென்று நாத்திகன் நம்புகிறான்.

அதனால் அவன் கடவுளை அறிய முற்படுவதை விட்டு, தன்னையும் தன்னொத்த மனிதனையும் அறியவே முயன்றான். ஒரு நாத்திகன் பிரார்த்திப்பதைவிட செய்கை செய்வதையே ஒத்துக்கொள்வான். ஒரு நாத்திகன், வாழ்க்கை வாழ்வதற்கே என எண்ணுபவன்; மரணம் மூலம் இதிலிருந்து தப்பிக்க எண்ணமாட்டான். அவன் வியாதிகளை வென்று, ஏழ்மையை ஒழித்துப் போர்களை நீக்கவே விரும்புவான். அவன், மனிதன் மனிதனை புரிந்து கொண்டு நேசிப்பதையே விரும்புவான். நல்லொழுக்கம் நிறைந்த வாழ்வை விரும்பும் அவன், கடவுளை நம்புவதையோ வழிபாட்டையோ அல்லது இவ்வுலகத் துன்பத்திற்கு விடிவாக மறுமையையோ ஏற்றுக்கொள்வதில்லை. நாங்கள் எல்லா மனிதர்களின் வாழ்வையும் காத்துப் பொறுப்புள்ள மக்களாக இங்கே, இப்போதே பணிபுரிய வேண்டும் என எண்ணுகிறோம்.

(22 - 09 - 2014 விடுதலை)

இந்த விளக்கத்தில் நீங்கள் விரும்பும் கொள்கைகள், நீங்கள் ஈடுபட ஆசைப்படும் செயல்பாடுகள், உங்கள் கருத்திற்கு இசைவான சிந்தனைகள் கட்டாயம் இருக்கும். அப்போது நீங்களும் நாத்திகனாக இருக்கப் பெருமைப் படுவீர்கள். மனிதனாக இருக்க ஒவ்வொரு மனிதனுக்கும் பெருமை உண்டல்லவா?

# பெரியார் பிரிவினைவாதியா?

## பொதுப்பணியில் தொடங்கினார்

1919 முடிய பெரியார் தனி மனிதராக, ஈரோட்டுக்காரராக பெருந்தனக்காரராக. பெரு வணிகராகவே அறியப்பட்டவர். சமூக நலத்தில் இயல்பாகவே பெரியாருக்கு இருந்த ஈடுபாடு காரணமாகக் கோவில் அறங்காவலர் முதல் ஈரோடு நகரவைத் தலைவர் முடிய பலப்பல பொதுச் சேவை நிறுவனங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர். தான் பொறுப்பேற்ற பொது நிறுவனங்களுக்கு உண்மையாக உழைத்தவர்; நேர்மையை நிலை நாட்டியவர். ஒரு பொது மனிதனைப் போல் நாட்டுப்பற்றிலும் நாட்டமுடையவராய்த் தான் அவர் வளர்ந்திருந்தார்.

## காங்கிரஸில் பெரியார்

சமூகப் பணிக்கான தன் களத்தை விரிவாக்க முனைந்தபொழுது பெரியாருக்குக் காந்தியடிகள் மீது ஓர் ஈர்ப்பும் ஈடுபாடும் உண்டாயிற்று. தீண்டாமை, மதுவிலக்கு ஆகிய காந்தியாரின் இரு கொள்கைகளும் இயல்பாகவே பெரியாரின் சிந்தனைக்குப் பொருந்தி வந்தவையாகத் திகழ்ந்தன. காந்தியடிகளின் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கிய நேரமது. பெரியாரும் நாட்டுக்குழைக்கும் காங்கிரஸில் சேர்ந்தார்; கதராடைக்கு மாறினார். 'மூட்டை தூக்குவதால் ஏற்படும் உடல் வலியால் நான் வருந்தியிருக்கலாம்; ஆனால் மூட்டை தூக்குவது இழிவு என நான் எப்போதும் கருதியதில்லை' என்ற கருத்துடைய பெரியார் கதர் மூட்டையைத் தோளில் சுமந்து காடு மேடு அலைந்து விற்றார். கள்ளுக்கடை மறியலுக்குத் தம் இல்ல மகளிரை அனுப்பினார். தன் தென்னந்தோப்பை வெட்டி அழித்தார். கொண்ட கொள்கையில் முழுமுனைப்புடன் ஈடுபாடு காட்டுவதுதானே பெரியார் குணம்!

பெரியார் காங்கிரஸில் சேர்ந்த நேரம், தமிழ் நாட்டில் பார்ப்பனரல்லாதார் இயக்கமாகத் தொடங்கப் பெற்ற நீதிக்கட்சியும் தளிர்த்து வளர்ந்து கொண்டிருந்த காலம்தான். ஆனால் நீதிக்கட்சி அந்நியராட்சியை ஆதரித்துக் கொண்டிருந்தது என்ற கருத்து சில நண்பர்களால் பெரியார் நெஞ்சில் விதைக்கப்பட்டிருந்தது. எப்போதும் பார்ப்பனரல்லாதார் மீது ஈடுபாடு

கொண்டிருக்கும் பெரியார், அந்நியர் ஆட்சியை நம் நாட்டிலிருந்து அகற்ற வேண்டும் என்ற உணர்வு மேம்பட்டால்தான் நீதிக்கட்சியில் சேராமல் காங்கிரஸில் சேர்ந்தார். இதிலிருந்தே பெரியார் தேச விடுதலைக்கு எதிரி அல்லர் என்பதைத் தெளிவாக அறியலாம்.

## தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர்

காங்கிரஸில் சேர்ந்த பெரியார் தான் தொடர்பு கொண்டிருந்த அனைத்துச் சேவை நிறுவனப் பதவிகளிலிருந்தும் தன்னை விடுவித்துக் கொண்டார். ஈரோடு நகரவைத் தலைவர் பதவியையும் உதறினார். இன்றைக்கு நூறு ஆண்டுகளுக்கு முன்பே பல ஆயிரங்களை ஈட்டித் தந்த தனது வணிக நிறுவனத்தையும் இழுத்துப் பூட்டினார். தங்கள் வணிகத்தை வளர்க்கவே அரசியலுக்கு வரும் வல்லவர்களை மட்டுமே கண்டு கொண்டிருக்கும் நாம் பெரியார் போன்ற நல்லவரை எங்காவது காணமுடியுமா? இவரல்லவா நாட்டிற்குழைக்கவே வாழ்ந்த நாணயத்தார்! தன் தீவிர உழைப்பால் தமிழகமெங்கும் காங்கிரஸை வளர்த்தார். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரானார். விடுதலைப் போராட்டங்களில் பங்கு பெற்றார். 1921இல் கள்ளுக்கடை மறியலில் முதன்முறையாகச் சிறைப்பட்டார். தம் வாழ்வில் எண்ணற்ற முறை சிறை சென்றிருந்தாலும் நாட்டின் விடுதலைக்காகவே முதல் முறை சிறை சென்றார் பெரியார்.

1921ஆம் ஆண்டிலேயே தன் மனைவியையும், தங்கையையும் கள்ளுக்கடை மறியலில் கலந்து கொள்ளச் செய்த காங்கிரஸ்காரர் - விடுதலைப் போராட்ட வீரர் - நாட்டுப் பற்றாளர் யாராவது தமிழ் நாட்டில் அன்று இருந்தார்களா? பெரியார் மட்டுமே குடும்பத்துடன் காந்தியடிகளைப் பின்பற்றியவர்; இதே கால கட்டத்தில்தான் தீண்டாமைக்கெதிரான வைக்கம் போராட்டத்திலும் பெரியார் தீவிரமாக ஈடுபட்டார்; கொடுஞ்சிறைப்பட்டார். காந்தியாரின் இரு கண்களெனத் திகழ்ந்த மது விலக்கு, தீண்டாமை இரண்டிற்காகவும் தம்மை முழுமையாக ஒப்புக் கொடுத்த பெரியார் அன்று காந்தியாரின் பெருந் தொண்டராகக் காங்கிரஸை வழி நடத்தினார். காந்தியடிகளால் மதிக்கப் பெற்றார்.

ஆனால், அந்நியரிடமிருந்து நாட்டை மீட்கத் துடிக்கும் காங்கிரஸில், 'நம்மவரில் ஒரு பகுதியினரை அடிமையாக்கி வைத்திருக்கிறோம்; அவர்களுக்கும் விடுதலை தர வேண்டும்' என்ற எண்ணம் இல்லாதது தான் பெரியார் நெஞ்சில் எரியூட்டியது. வைக்கமும் சேரன்மாதேவியும் காரங்கிரஸ்காரர்களின் வருணாசிரமத்தை வெளிக்காட்டியது கண்டு பெரியார் வெகுண்டார். நாட்டை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதை விட மனிதனை அடிமைத்தனத்திலிருந்து மீட்பதே உண்மை விடுதலை என்பதில் உறுதிகொண்ட பெரியார் காங்கிரஸ் கட்சியுடன் முரண்பட்டார்.

## வைக்கம் தந்த பாடம்

திருவாங்கூர் அரசிற்கெதிராகப் போராடி இருமுறை சிறைப்பட்டு வைக்கம் தெருவில் தாழ்த்தப்பட்டவர் நடந்து செல்ல இருந்த தடையை உடைத்த பெரியாருக்கு இப்போராட்டத்தில் காந்தியடிகளே தமக்குப் பெருந்தடையாக இருப்பதைக் கண்டு நொந்தார். வைக்கம் போராட்டம் குறித்து தமது Young India இதழில் பற்பல நாட்களில் 48 பக்கங்கள் எழுதிய காந்தியார் ஒரு இடத்தில்கூட 'வைக்கம் வீரர்' பெரியாரைக் குறித்துக் குறிப்பிடவே இல்லை என்பது காந்தியாரைப் புரிந்து கொண்டவர்களுக்கும் புரியாத செய்தி.

## சேரன்மாதேவியில் காங்கிரஸ் தீண்டாமை

அதேபோல் சேரன்மாதேவி குருகுலத் தீண்டாமைச் செய்தி பெரியாரைத் திகைக்க வைத்தது. காங்கிரஸ், போலித் தேசபக்தர்களின் கூடாரமாகவே உள்ளது என்ற உண்மை கள்ளமற்ற பெரியாருக்கு மெல்ல மெல்லப் புரிந்தது. காங்கிரஸின் பண உதவியால் நடத்தப்பட்ட சேரன் மாதேவிக் குருகுலத்தில் பார்ப்பனர், பார்ப்பனரல்லாதார் மாணவர்களுக்குத் தனித் தனி இடத்தில் உணவு பரிமாறப்பட்ட தீண்டாமை, தீவிரமாகப் பின்பற்றப்படுவதை அறிந்தார் பெரியார். இதில் அன்றையப் பார்ப்பனத் தலைவர்கள் அனைவருக்கும் பங்கிருந்தது. திருத்த முயன்றார்; எதிர்ப்பை அறிந்தார். இதுவா காந்தி கண்ட காங்கிரஸ்? என வெறுப்புற்றார்.

## காந்தியடிகளும் பெரியாரும்

சேரன் மாதேவித் தீண்டாமையிலும் வைக்கம் போராட்டத்திலும் காந்தியடிகளின் நோக்கும் போக்கும் பெரியாரை வருத்தியது. நேரடியாகக் காந்தியடிகளுடன் விவாதித்தார். காந்தியார் வருணாசிரமத்தில் வைத்திருந்த பற்று அப்போது தான் பெரியாருக்குப் புரிந்தது.

**தீண்டாமை ஒழிப்பே நம் கொள்கை; சாதி ஒழிப்பல்ல**

என்ற காந்தியாரின் சொற்கள் பெரியாரைத் திடுக்கிட வைத்தன.

> பிராமணன் அவனவன் தருமத்தைச் செய்யும் போது உயர்ந்தவனாவது போலவே மற்ற வருணத்தானும் அவனவன் தருமத்தைச் செய்யும்போதுதான் உயர்ந்தவனாகிறான்.

என்ற காந்தியின் கருத்து, அவரது வருணாசிரம தருமத்தின் தெளிவான வெளிப்பாடே என்பதைப் புரிந்து கொண்டார். உலகத்திற்கே மகாத்மாவாகப் போற்றப்பட்ட காந்தியாருக்கே மனிதனின் உயர்வு தாழ்வுக் கருத்தில் ஏற்புடைமை இருக்கும்போது, சென்னையில் அவரைத் திண்ணையில் அமர வைத்த சாத்திரியார்களின் காங்கிரஸ் வருணாசிரம வசப்பட்டிருப்பதில் வியப்பில்லையே!

## இட ஒதுக்கீட்டுத் தீர்மானம்:

### காங்கிரசுக்கு வைத்த சோதனை

மனிதருள் உயர்வு தாழ்வு கற்பிக்கும் வருணாசிரம தருமத்தில் பற்றுக் கொண்ட காங்கிரசார் ஆட்சிக்கு வந்தால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்டவர் நிலை மேலும் தாழ்ந்து விடும் என்ற அச்ச உணர்வு பெரியாருக்கு எழுந்தது. எனவே காங்கிரசாருக்கு ஒரு சோதனை வைத்தார். நாட்டு விடுதலைக்குப் பின்னர் வழிமொழிய வேண்டிய இடஒதுக்கிட்டுத் தீர்மானத்தை அன்றே காங்கிரசின் பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களில் பெரியார் முன்மொழியத் தொடங்கினார். மனிதருள் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரால் தாழ்த்தப்படுத்தப்பட்டிருக்கிறார்கள்; அவர்களை மேலே தூக்கிவிடக் கல்வியிலும் அரசுப்பணிகளிலும் இடஒதுக்கீடு தேவை என்பதைக் காங்கிரஸ் இப்போதே ஏற்றுக் கொள்ள வேண்டும் என வலியுறுத்தினார். ஆனால், அவரது இடஒதுக்கீட்டுத் தீர்மானம் பல முறை தோற்கடிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டுக் காங்கிரஸ்காரர்களின் வருணாசிரமம் நிலை நிறுத்தப்பட்டது.

### காங்கிரசிலிருந்து வெளியேறினார்

1920 நெல்லை, 1921 தஞ்சை, 1922 திருப்பூர்,1923 சேலம், 1924 திருவண்ணாமலை ஆகிய இத்தனை இடங்களில் நடந்த காங்கிரஸ் மாநாடுகளில் எல்லாம் இடஒதுக்கீட்டுத் தீர்மானம் தோற்கடிக்கப்பட்டது. இத்தனை தோல்விக்குப் பின்னரும் 1925 இல் காஞ்சிபுரத்தில் பெரியார் கொண்டு வந்த இடஒதுக்கீட்டுத் தீர்மானமும் நிராகரிக்கப்பட்டது. பெரியார் வெகுண்டெழுந்தார். காங்கிரசை விட்டு வெளியேறினார்.

> காங்கிரசை ஒழிப்பதே இனி என் வேலை

என அறிவித்தார். ஒரு குறிப்பிட்ட வகுப்பார் நலத்திற்காக மட்டுமே நாட்டு விடுதலையை விரும்பிய காங்கிரஸ் இயக்கம் தேச விரோத இயக்கமா? இந்நாட்டு மக்கள் அனைவரது நலத்திற்காகவும் நாட்டு விடுதலை அமைய வேண்டும் எனக் கூறிய பெரியார் தேச விரோதியா?

அந்நியனான வெள்ளையனை ஆதரித்தார் பெரியார் என்று சொல்லும் நம்மவருக்குப் பெரியார் பதில் சொன்னார்.

> என்னைத் தொடக் கூடாது என்று சொல்பவனும், நான் தொட்டதைச் சாப்பிட மறுப்பவனும் அந்நியனா? உனக்கும் எனக்கும் வித்தியாசமில்லை; தொட்டாலும் குற்றமில்லை எனச் சொல்லுபவன் (வெள்ளைக்காரன்) அந்நியனா?.

இந்தக் கேள்விக்கு விடுதலைக்குப் பின்னர் அறுபத்தியாறு ஆண்டுகள் கடந்த

பின்னும் விடை கிடைத்திருக்கிறதா? நாம் ஒருவருக்கொருவர் அந்நியனாகத் தானே இன்னும் விலகியிருக்கிறோம்.

## கடவுளையே எதிர்த்தவர் காந்தியை எதிர்க்க மாட்டாரா?

காந்தியாரின் வருணாசிரம ஆதரவுக் கொள்கையால் அவரை எதிர்க்கத் துணிந்திருந்த பெரியாருக்கு இலண்டன் வட்ட மேசை மாநாட்டில் காந்தியார் தெரிவித்த கருத்து மேலும் அதிர்ச்சி யளித்தது. விடுதலைக்கு முன் ஆங்கிலேயர் ஆட்சியில் இலண்டனில் வட்ட மேசை மாநாட்டில், இந்தியாவில் நடை பெற இருக்கும் உள்ளாட்சித் தேர்தலில் தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தனிப் பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும் என்ற கருத்தை ஆங்கிலேயர் ஏற்றுக் கொண்டனர். அப்போது காந்தி, ‘இது என் தேசாபிமானத்திற்கே எதிரானது. என் உயிரைக் கொடுத்தும் இதைத் தடுப்பேன்’ என ஆத்திரப்பட்டார். நம் மக்களைத் தனி ஒதுக்கீடு மூலம் பிரிக்கப் பார்க்கும் வெள்ளையர் சூழ்ச்சி எனக் காந்தியார் கருதியதால் இந்த இடஒதுக்கீட்டை எதிர்த்திருக்கலாம். ஆனால், இந்த நாட்டு மக்களிடம் ஆழமாகப் பதிந்திருக்கும் உயர்வு தாழ்வு உணர்வைக் காந்தி புரிந்து கொள்ளவில்லை. இன்றைக்கும் 16வது நாடாளுமன்றத் தேர்தலை நாம் சந்திக்கும் வேளையிலும், தாழ்த்தப்பட்டோருக்குத் தனித் தொகுதி ஒதுக்கப்படாதிருந்தால், ஒரு தாழ்த்தப்பட்டவர் கூடப் பாராளுமன்றப் படிக்கட்டை மிதிக்க முடியாது என்பது தான் வெட்கத்துடன் ஒப்புக் கொள்ள வேண்டிய உண்மை. இது காந்தியாருக்குப் புரியவில்லை; பெரியாருக்கு அன்றே புரிந்திருந்தது.

காந்தியார் மீது மிகுந்த மரியாதை கொண்டவர் பெரியார். ஆயினும் தன் காரியத்திற்கு எதிராக வரும் கடவுளையே மறுத்த பெரியார், காந்தியாரை எதிர்த்தது தவறா? எவருடனும் Compromise செய்து கொள்ளும் வழக்கம் எப்போதும் பெரியாருக்கு இருந்ததில்லை. இதுவே பெரியாரின் வலிமை. எனவே காங்கிரசையோ, காந்தியையோ பெரியார் எதிர்த்தார் என்றால், அந்த எதிர்ப்பின் உள்ளீட்டை உற்று நோக்கினால், அந்த எதிர்ப்பு எதிர்க்கப்பட வேண்டிய எதிர்ப்பே என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். ‘சமநிலைச் சமுதாயம்’ என்றே ஒரே குறிக்கோளை உயிர்க்கோளாகக் கொண்ட பெரியாருக்கு, அதற்கு எதிர்வரும் எவரும், எதுவும் பகையே! அவரைப் போல் சமநிலைச் சமுதாயத்தை ஏற்க விரும்பும் எவர்க்கும் பெரியார் பகை கொண்ட எவரும், எதுவும் பகையே.

## திராவிடம்-இனப்பரப்பின் இடுகுறியே

பெரியார் நாட்டு விடுதலையை எதிர்த்தார் - அந்த விடுதலை பொதுமக்கள் அனைவருக்கும் உரிய சமூக விடுதலை ஆகாதபோது. பெரியார் விடுதலை நாளைத் துக்கநாள் என்றார் - நம் அடிமை நிலை மறையவில்லை;

ஒரு அந்நியன் கையிலிருந்து மற்றொரு அந்நியன் கைக்கு மாறியிருக்கிறது. என்பதால்தான். பெரியார் 'திராவிட நாடு' 'தமிழ் நாடு' பிரிவினை கேட்டாரே! ஏன்? 'மக்களின் சம உரிமையின்மைக்கு எதிரான பெரியாரின் கோபம் அவரது பிரிவினை வாதம்'. அவர் கேட்ட விடுதலையில் உள்ள 'நாடு' என்ற சொல் நிலப்பரப்பைச் சுட்டுவதில்லை. இனப்பரப்பின் இடுகுறிதான் அது என்பதை அவரது திராவிட நாடு, தமிழ் நாட்டுக் கோரிக்கை தொடர்பான எழுத்தையும் பேச்சையும் ஊன்றிப் படிப்பவர்கள் உணர்வார்கள். பார்ப்பனர் ஒழித்த தமிழ் பேசும் மக்களைச் சுட்டிக் காட்ட அவர் எடுத்துக்கொண்ட வார்த்தைதான் திராவிடன். பெரியார் திராவிடம் குறித்துப் பேசுவதற்கு முன்பே 'திராவிடன்' என்ற பெயரில் பார்ப்பனரல்லாதார் இயக்கம் நாளிதழ் நடத்திக் கொண்டிருந்தது இங்கே குறிக்கத் தக்கது. பெரியார் கண்ட இயக்கமும் திராவிடர் கழகம்தான்; திராவிடக் கழகம் அன்று

> நாங்கள் பிரிவினைக் கருத்தை விட்டுவிட்டோம். ஆனால் பிரிவினை கேட்டதற்கான காரணம் மட்டும் அப்படியே இருக்கிறது.

என அண்ணா பின்னாளில் கூறியதும் ஆழமாகச் சிந்திக்கத்தக்கது தானே!

# பெரியார் பெண்ணுக்கு எதிரியா?

## எந்தப் பெண்ணுக்கும் பெரியாரைப் பிடிக்காது

உலகிலேயே பெண்ணடிமைத் தனத்தில் முதல் இடம் பெற்ற நாடு பாகிஸ்தான்தான். இரண்டாவது இடம் ஆப்கானிஸ்தான். மூன்றாம் இடம் இந்தியாவிற்கு. இவ்வடிமை நிலைக்கு இந்த நாடுகளின் முஸ்லீம், இந்து மதங்களே மூல காரணம் என்பது எந்தப் பெண்ணும் அறியாத செய்தி. எனவேதான் எந்தப் பெண்ணுக்கும் பெரியாரைப் பிடிக்காது. கல்வி வேறு, அறிவு வேறு எனப் பெரியார் சொன்னதை நூற்றுக்கு நூறு மெய்ப்பித்துக் காட்டியவர்கள் நம் பெண்களே. I.A.S., I.I.T. படித்த பெண்கள்கூடத் தம் குடும்பத்தில் தங்கள் தனித்தன்மையை, உரிமையை அறியாதவர்கள் தாம். பேராசிரியர், வழக்கறிஞர் பெண்களும் குடும்ப வாழ்வில் தம் பங்கு வாதத்தையோ நியாயத்தையோ நிலை நாட்டாதவர்கள் தாம்.

ஒவ்வொரு தமிழனுக்கும் பிறப்பிலேயே சூத்திரன் - தாழ்த்தப்பட்வன் - பிற்படுத்தப்பட்டவன் என்ற அடிமை விலங்கை மேலாண்மைச் சமூகத்தார் பூட்டியிருந்தனர். இந்த அடிமை நிலையால் ஏற்பட்ட அறியாமை காரணமாக வேதங்கள், புராணங்கள், இதிகாசங்கள், சொர்க்கம், நரகம் ஏழேழு பிறவிகள், பாவ புண்ணியங்கள் போன்ற மூட நம்பிக்கை விலங்கையும் தானே பூட்டிக்கொண்டான். இந்த இரு விலங்குகளாலும் பிணைப்புண்ட தமிழன், தன் ஆற்றாமையால் எழுந்த ஆத்திரத்திற்கு வடிகாலாகத் தன் குடும்பப் பெண்களைத் தனக்கடிமை ஆக்கினான். ஒரு தமிழ்ப்பெண் - தந்தை, தமயன், தம்பி, கணவன், மகன் என ஆண் வர்க்கம் அனைவர்க்கும் அடிமை ஆனாள். பிறப்பால் அடிமை, அறியாமையால் அடிமை, பெண்பாலால் அடிமை என மூன்று விலங்குகள் பூட்டிய தமிழச்சி, நடைபிணமாக, மயக்க நிலையில் இயந்திரகதியாக இயங்கிக்கொண்டிருந்தாள், அவளுக்கு முரட்டு மருத்துவம் பார்க்கத் துணிந்தார் பெரியார். வாளால் அறுத்துச் சுடும் வன்மருத்துவரை யாருக்குப் பிடிக்கும்?

## கற்புக்கரசி இங்கே! கற்புக் கரசன் எங்கே?

பெண்ணுக்குக் கற்பு வேண்டாம் - ஆம் ! உன் கணவனுக்குக் கற்பு வேண்டாம் என்றால் உனக்கெதற்கு? பதிவிரதன், கற்பரசன் இல்லாத கட்டத்தில் பதிவிரதை, கற்புக்கரசி ஏன்?

உனக்கு ஒரு திருமணம். உன் கணவனுக்கு மட்டும் மூன்று, நான்கு திருமணமா? உனக்கு மட்டும் ஒரு கணவன்! உன் கணவனுக்கு இரண்டு மனைவியரா? நீயும் இரண்டு திருமணம் செய்து கொள். அவன் விரும்பியவர்களுடன் எல்லாம் கூடி வாழ்கிறான். நீயும் திருமணம் செய்து கொள்ளாமல் விரும்பியவனுடன் கூடி வாழ்.

ஒருவனுக்கு நீ அடிமை என்பதைக் காட்டப் பெண்ணுக்குத் தாலி யென்றால், ஆணுக்கும் தாலி போடு.... இல்லாவிட்டால் உன் தாலியைக் கழற்றி எறி.

பிள்ளை பெற்று வளர்க்கும் பாசத்தால்தானே கணவனுக்கு அடங்கி ஒடுங்கிக் காலம் கழிக்கிறாய்? அவன் ஒரு பிள்ளையைச் சுமந்து பெற்றிருந்தால்தானே வலி தெரியும்; பொறுப்பு வரும். எனவே பெண்ணே! இனி நீ பிள்ளை பெறாதே.

இப்படிப் பெண்களைத் திடுக்கிட வைத்தார் பெரியார். சமூக ஒழுக்கத்திற்குக் காப்பாக விளங்கும் கற்பையும் திருமணத்தையும் பெரியார் ஏற்றுக் கொண்டவர் தாம்.

சுகாதாரம், சரீரம், பொது ஒழுக்கம் பொறுத்து நான் கற்பை ஆதரிக்கிறேன். ஆனால் கற்பு ஆண்களுக்கு வலியுறுத்தப் படுவதில்லை. 'ஒரு பிறவிக்கு ஒரு நீதி'.

என்ற கற்புமுறை 'அடியோடு ஒழிக்கக்கப்பட வேண்டும்' என்றார் பெரியார்.

கற்பின் பெயராலும் திருமணம் என்ற உரிமையாலும் ஒரு பாலினம், தன்னிலும் உடலால் வலிமை குறைந்த மற்றொரு பாலினத்தை வாழ் நாள் அடிமையாக - 24 மணி நேர அடிமையாக வைத்திருப்பது சரியா?.

என்பதுதான் பெரியார் எழுப்பிய வினா.

## பெண் ஏன் அடிமையானாள்?

*பெண்ணே! பெண்ணின் அடிமை நிலைக்கும் காரணம் பெண்களே என்பதைப் புரிந்து கொள். பெண் அடிமை நிலையை நீக்க ஆண் முன்வர மாட்டான். பெண்தான் தன் அடிமை நிலை போக்கப் போராட வேண்டும்.*

எனப்புத்தி புகட்டினார். பெண்களின் அழகையும் அங்கங்களையும் வருணிப்பது பெண்ணுக்குப் பெருமை ஆகாது. இது தமக்கு அவமானம், அடிமைத்தனம்

எனப் பெண் உணர்ந்தாளா? தன்னைப் பொன்னாலும் பூவாலும் அலங்கரித்துக் கொண்டு பிறர் கவனத்தைத் தம் மீது திருப்புவது இழிவு, அநாகரிகம் என எந்தப் பெண்ணுக்காவது தோன்றாதது ஏன்? என்ற பெரியாரின் கேள்விகளில் உள்ள நியாயத்தைப் புரிந்துகொண்டால் பெண்ணுக்காகப் போராடிய ஒரே ஆண் பெரியாரே என்பது புரியும்.

## பிள்ளை பெறாவிட்டால் பெண்ணுக்கு என்ன நஷ்டம்?

> பெண்கள் பிள்ளை பெறும் தொல்லையிலிருந்து விடுதலை பெற வேண்டும். இது இயற்கைக்கு விரோதம் என்று சொல்வார்கள். உலகில் மற்ற உயிரினங்கள் இயற்கை வாழ்வு நடத்தும்போது, மனிதன் மட்டுமே இயற்கைக்கு மாறாகத் தன்னை மாற்றிச் செயற்கை வாழ்வையே பெரும்பாலும் நடத்தி வரும்பொழுது இந்த விசயத்திலும் இயற்கைக்கு விரோதமாய் நடைபெறுவதில் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடாது. பெண், பிள்ளை பெறுவதை நிறுத்தி விட்டால் உலகம் விருத்தியாகாது என்பார்கள். மானிட வர்க்கம் விருத்தியாகாவிட்டால் பெண்களுக்கு என்ன நஷ்டம்?

என்ற மிகக் கடுமையான கேள்விகளைக் கேட்டுப் பெண்ணைத் *திணற* வைத்தார்.

> நீ பிள்ளை பெறாவிட்டால் உலகம் அழிந்துவிடும் என்றால் உன்னை அழித்துக் கொண்டிருக்கும் உலகம் அழிந்தால் உனக்கென்ன?

என்று கேட்ட பெரியாரைப் புரிந்து கொண்டால் அன்றே பெண் விடுதலை பெறுவாள். அது கொஞ்சம் கடினம்தான்.

## பெரியார் கண்ட இனிவரும் உலகம்

சூரிய மண்டல உண்மைகளை முதலில் வெளியிட்ட கோபர்நிக்கஸ், நட்சத்திரங்களும் சூரியனுக்கு ஒப்பானவை எனக் கண்டறிந்த புரூனோ, உலகம் உருண்டை என்பதை உலகிற்கு உணர்த்திய கலிலியோ, பரிணாம வாதத்தைப் படைத்தளித்த டார்வின் போன்ற அறிவியல் அறிஞர்கள் மதத்தை அழிக்கும் மிகப் பெரிய கருவி விஞ்ஞானம் தான் என்பதை உலகிற்கு உறுதி செய்தார்கள். சமூக விஞ்ஞானியான பெரியாரும், அறிவியல் வளர்ச்சியால் உலகில் ஏற்படக்கூடிய மாற்றங்களை அன்றே பதிவு செய்தார். (குடும்பக்கட்டுப் பாடு முதல் பொதுச்சமையலறை வரை) அவை படிப்படியாக இன்று நடைமுறைக்கு வந்து கொண்டிருப்பதையும் நாம் கண்டு வருகிறோம். அதன் தொடர்ச்சியாகப் பெண்கள் பிள்ளை பெற வேண்டாம் என்ற பெரியாரின் சொற்கள் அறிவியல்

உண்மை ஆகத் தான் போகிறது. வயிற்றைச் சுமக்க வேண்டாம்; வளைகாப்பு நடத்த வேண்டாம். கணவனின் விந்தணுவையும், மனைவியின் கருமுட்டையையும் சோதனைச் சாலையில் கொடுத்து விட்டுச் சென்று குறிப்பிட்ட நாளில் குழந்தையை DOOR DELIVERY பெற்றுக் கொள்ளும் காலம் மிக விரைவில் வரத்தான் போகிறது.

## பெரியாரின் எதிர்ப்பின் பின்புலம் காண்பீர்

கடவுள் கருத்து, நாட்டுப்பற்று, தாய்மொழிப்பற்று, பெண்ணுரிமை என்பவை குறித்த பெரியார் கொள்கையில் இருந்த உண்மையொளியையும், நேர்மைத் திறத்தையும் மேலே விவரித்தோம். பெரியாரின் ஒரே கொள்கையான சமநிலைச் சமுதாய உணர்வு தான் இந்த நான்கு கொள்கைகளுக்குள்ளும் ஊடுருவியிருந்ததை நாம் நன்கு உணரலாம். மனிதருள் கீழ் மேல் கற்பிக்கத் துணை நின்ற கடவுளை எதிர்த்தார். மனிதரை உயர்வடையச் செய்யாமல் தாழ் நிலையில் அழுத்தி வைக்கத் துணை நிற்கும் மொழியை எதிர்த்தார். சமநிலைச் சமுதாயத்தை உருவாக்க மறுக்கும் காங்கிரசை, காந்தியை,நாட்டு விடுதலையை அவர் எதிர்த்தார்.

> மண்ணில் மண்ணாய் மக்கிக் கிடக்காதே; உன் ஒளி மங்கிக் கிடக்காதே

எனச் சுட்டிக் காட்டவே பெண்ணடிமை நிலையை எதிர்த்தார். பெண் ஆணுக்கு அடிமை தான் என்ற உணர்வை உள்ளுணர்வாய் வளர்த்துக் கொண்டிருக்கும் வல்லாளர்களுக்குப் பெரியார் என்றும் எதிரி தான்.

எனவே பெரியார் குறித்துக் காமாலைப் பார்வையாய்க் காண்பதைக் கைவிட்டு உண்மையொளி வீசும் தூய விழி திறந்து பெரியாரை ஆய்வு செய்வோம். அவர் கருத்து, மனிதகுல மாண்பை வளர்க்கும் வழி காட்டுமா என விவாதித்து விளக்கம் பெறுவோம். பெரியார், சீசரின் மனைவி அல்லர்; *திறனாய்விற்கு* விலக்குப் பெற, அவரிடமும் குறை காணும் உரிமையையும், பகுத்தறிவையும் பெற அவரே நம்மை வழி நடத்தியிருக்கிறார்.

# பெரியாரின் உயிர்க் கொள்கை

## பிறப்பொக்கும்

'யாதும் ஊரே, பிறப்பொக்கும், முதற்றே உலகு, உலகெலாம், உலகம் யாவையும், உலகெலாமுணர்ந்து,உலகம் உண்ண உண்' எனத் தமிழன் அன்றும் இன்றும் தன் விசாலப் பார்வையில் உலகை விழுங்கியவன் தான்.

'தூய உள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்
தொல்லுலக மக்களெல்லாம் ஒன்றே என்னும்
தாயுள்ளம்'

கொண்டவன் தமிழன். உலகிற்குத் தமிழன் ஈந்தது இந்த உயிர்க் கொள்கை.

'உலகத தொழிலாளர்களே, ஒன்று சேருங்கள்'

என்ற பொதுவுடைமை முழக்கத்திலும் மேலானது

'உலக மனிதர்களே ஒன்றாகுங்கள்'

என்ற தமிழ் முழக்கம். ''சாதியிரண்டொழிய வேறில்லை'' எனத் தொடங்கி

'மிக்குயர்ந்த சாதி கீழ்ச்சாதி என்ற
வேற்றுமைகள் தமிழ்க்கில்லை: தமிழர்க்கில்லை'

என முழங்கியது வரை மனிதருள் உயர்வு தாழ்வற்ற நிலையை உலகிற்கு உணர்த்தியவர்கள் நாம். ஆனால் மனிதருள் ஒரு வகுப்பினர், தம் அறிவாலும் சூழ்ச்சியாலும் பிறர் மீது வல்லாதிக்கம் செலுத்தத் தொடங்கிய போது தான் மனிதச் சமநிலை சிதைந்தது. ஒவ்வொருவனும் தன்னினும் வலிமை குறைந்தவனை அடிமைப்படுத்த வேண்டும் என்ற கருத்திற்கு ஆளானான். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வேர் விட்டு முளைத்திருந்த இந்த நச்சு மரத்தை வீழ்த்த எழுந்த கோடரியாகப் பெரியார் எழுந்தார். சாதி, மதம், மொழி, நாடு, கடவுள் இவை அனைத்தையும் விட மனிதனே இன்றியமையாதவன்; மனித மேம்பாடே என் உயிர்க் கொள்கை எனத் துணிந்தார்.

## குழந்தை வயதில் குத்திய முள்

பெரியார் ஆரம்பப் பள்ளியில் சேர்க்கப் பட்டிருந்த குழந்தை வயதுக் காலம். பள்ளி இடைவேளையில் தண்ணீர் குடிக்கப் பக்கத்திலுள்ள ஒரு வீட்டிற்குச் சென்றார். அது ஓதுவார் வீடு. தயக்கத்துடன் தண்ணீர் கொடுத்தார்கள், குடித்த குவளையைக் கீழே வைக்கச் சொன்னார்கள். வைத்து விட்டு நடந்த பெரியார், தற்செயலாகத் திரும்பிப் பார்த்தார். அந்த வீட்டுப் பெண், பெரியார் தண்ணீர் குடித்த குவளைச் சுற்றி ஏதோ முணங்கிய படி நீரைத் தெளித்துக் கொண்டிருந்தார். மறுநாள், வேறு வீட்டிற்குத் தண்ணீர் குடிக்கச் சென்றார். இது வணிகச் செட்டியார் வீடு. குடிக்கத் தண்ணீர் கேட்ட சிறுவனைக் கண்டு துடித்து விட்டது அந்தக் குடும்பம். வேண்டாம்... வேண்டாம்... போய் வீடு.. நீயெல்லாம் எங்கள் வீட்டில் தண்ணீர் குடிக்கக் கூடாது எனத் தடுத்து அனுப்பி விட்டனர். இளம் பெரியாருக்கு ஏதும் விளங்கவில்லை. ஒரு வீட்டில் தண்ணீரைக் கொடுத்து அவமதித்தனர்; மற்றொரு வீட்டில் தண்ணீர் கொடுக்காமலே அவமதித்தனர். குழந்தை பெரியார் நெஞ்சில் உயர்வு தாழ்வுச் சமுதாயம் வீசிய முதல் கொடுவாள் வீச்சு இது. வாள் வீச்சின் வடுவும் அவர் நெஞ்சில் தங்கியது; வலியும் தங்கியது.

## போலிச் சாமியார்

பெரியார் வலிவும் வனப்பு மிக்க இளைஞராகத் திகழ்ந்த காலம். அவருக்குத் திருமணமும் முடிந்திருந்தது. தந்தையாரிடம் ஏற்பட்ட ஏதோ மனத்தாங்கலில் பெரியார் வீட்டை விட்டு வெளியேறினார். காசிக்குச் சென்றார். சுகஜீவனம் நடத்தச் சாமியார் வேடமிட்டார். காசியில் மடங்கள் தோறும் அன்னதானம் நடைபெறும்; கவலையின்றிக காலம் கழிக்கலாம் என்று எண்ணியிருந்த பெரியாருக்கு அங்கோர் அதிர்ச்சி காத்திருந்தது. எந்த இனத்தார் நடத்தும் மடத்திலும் பார்ப்பனச் சாமியார்களுககு மட்டுமே படியளக்கப்பட்டது. மனிதனுக்குத் தண்ணீர் கொடுப்பதில் தான் உயர்வு தாழ்வு பார்க்கிறார்கள் என்றால் சாமியாருக்கு உணவு கொடுப்பதிலும் சாதி பார்க்கும் கொடுமையை நேரில் பட்டறிந்தாா. தண்ணீர், உணவு போன்ற அடிப்படைத் தேவையிலேயே உயர்வு தாழ்வு பார்க்கும் இந்த இழிசமுதாயம், தாழ்த்தப்பட்டவனுக்குக் கல்வி கொடுக்குமா? செல்வம் கொடுககுமா? அதிகாரம் கொடுக்குமா? அவன் கையில் ஆட்சியைக் கொடுக்குமா? என அச்சப்பட்டார். இதற்கு முடிவு கட்டுவதே என் ஒரே முடிவு எனத் துணிந்தார்.

## அனைத்துயிரும் ஒன்று என்னும் உண்மையறிவு

சமுதாய விடுதலைககாகப் பெரியார் தொடங்கிய இதழின் பெயர் குடியரசு. ஆம்! அனைத்துக் குடிமக்களுக்குமான அரசைப் பெறத் தானே அவர் போராடுபவர், 2-5-1925 இல் வெளியான முதல் குடியரசு இதழில,

> ஒவ்வொரு வகுப்பும் முன்னேற வேண்டும். இதை அறவே விடுத்துத் தேசம், தேசம்எனக்கூக்குரலிடுவது எமது பத்திரிக்கையின் நோக்கமன்று. மக்களுக்குள் சுயமரியாதையும் சமத்துவமும், சகோதரத்துவமும் ஓங்கி வளர வேண்டும். உயர்வு, தாழ்வு என்னும் உணர்ச்சியே நமது நாட்டில் வளர்ந்து வரும் சாதிச் சண்டை என்னும் நெருப்பிற்கு நெய்யாய் இருப்பதால் இவ்வுணர்ச்சி ஒழிந்து அனைத்துயிர் ஒன்றென்று எண்ணும் உண்மை அறிவு மக்களிடம் வளர வேண்டும்

எனத் தொடங்கினார் பெரியார்.

'உயர்வு தாழ்வற்ற சமுதாயம் வேண்டும்' அதற்கு உதவ இட ஒதுக்கீடு வேண்டும். அதை அடையத் தமிழன் மான உணர்வோடும் சுயமரியாதையோடும் போராட வேண்டும் எனத் தன் உயிர்க் கொள்கையையும் அதைப் பெறப் பின்பற்ற வேண்டிய வழி வகைகளையும் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தார். தன் போராட்டத்தை அறிமுகம் செய்தார்.

## நான் யார்? குடியரசுக் கட்டுரை

> ஈ.வெ.இராமசாமி என்கிற நான் திராவிடச் சமுதாயத்தைத் திருத்தி, உலகிலுள்ள மற்றச் சமுதாயத்தினரைப் போல் மானமும் அறிவும் உள்ள சமுதாயமாக ஆக்கும் தொண்டைத் தோள்மேல் போட்டுக்கொண்டு அதே பணியில் இருப்பவன்.
>
> இதற்கு எனக்கு யோக்கியதை இருக்கிறதோ இல்லையோ, இதைச் செய்ய யாரும் முன் வராத நிலையில் நான் அதை மேற்போட்டுக் கொண்டுள்ளேன்.
>
> இதைத் தவிர வேறு பற்று ஒன்றும் எனக்கு இல்லாததாலும், பகுத்தறிவை அடிப்படையாய்க் கொண்டு கொள்கைகளையும் திட்டங்களையும் வகுப்பதாலும், நான் இத்தொண்டுக்குத் தகுதி உடையவன் என்றே கருதுகிறேன்.

இதுவே தமிழ்ச் சமூகத்திற்குப் பெரியார் வகுத்தளித்த தொண்டுச்சாசனம். E.C.G, XRAY, SCAN என்றெல்லாம் உடலின் உட்பகுதியை விளக்கும் பல ஒளிப்படங்கள் மருத்துவத் துறையில் வளர்ந்து வருவதை நாம் காண்கிறோம். பெரியார். தன்னைத் தானே எடுத்துக் கொண்ட உள்ளொளிப்படம் தான் மேலே காணும் அவர் அறிக்கை. மிகமிகத் தெளிவாக, வெளிப்படையாக, அறிவுபூர்வமாக,அழகாகச் சொல்லியிருக்கிறார் பாருங்கள். இந்த அறிக்கையைப் பன்முறை, பன்முறை படித்துப் பாருங்கள்.

என் சமுதாயத்தை மேம்பட வைப்பது என் குறிக்கோள். இதைச் செய்ய எனக்குத் தகுதியில்லாமல் இருக்கலாம்; ஆனால் தகுதியான வேறு ஆள் இல்லை. நானே செய்கிறேன்.எனக்கு வேறு பணியும் இல்லை; வேறு பற்றும் இல்லை.பகுத்தறிவு என்ற பட்டப்படிப்பே என் தகுதி (QUALIFICATION). மிகமிக அருமையாக அடித்தளமிட்டு அமர்ந்து கொண்டு தான் பெரியார் தன் பணியைத் தொடங்கியிருக்கிறார் என்பதைத் தெள்ளத் தெளிவாக்குகிறது பெரியார் மக்கள் மன்றத்தில் வெளியிட்ட வாக்குமூலம்.

## நீதிமன்ற வாக்குமூலம்

'நான் யார்?' என மக்கள் மன்றத்தில் வாக்குமூலம் தந்தவர், 1957இல் சென்னை உயர் நீதிமன்றக் குற்றவாளிக் கூண்டில் நின்று கொண்டு படித்த மற்றொரு அறிக்கையில், 'என் சமுதாயத்தின் எதிரி யார்? எனக்கு யாருடன் போர்? என்பதைத் தெளிவாக்கினார்.

வருணாசிரம ஒழிப்பே என்னுடைய ஒரே பிரதானத் தொண்டு. இனியும் என் வாழ்வு வரையிலும் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற தொண்டும் இதுதான்'

என வாக்குமூலம் கொடுத்தார் பெரியார்.

## வருணாசிரம தருமத்தின் பலமான அடித்தளம்

> தாழ்த்தப்பட்ட மக்கள் பிறவியிலேயே கீழ்த்தன்மையடைந் தவர்கள் என்றும், அவர்கள் கடவுளாலேயே அந்தப்படி பிறப்பிக்கப்பட்டவர்கள் என்றும், கடவுள் செயலையோ மதவிதிகளையோ யாரும் மாற்ற முடியாது என்றும், அவை மாறுதலுக்குக் கட்டுப்பட்டவை அல்ல

என்றும் பலமான அடித்தளத்தின் மீது கட்டப்பட்டிருந்தது வருணாசிரம தருமம்.

கடவுளின் ஆசி பெற்றதும்,மதத்தின் பாதுகாப்புடையதும், மாற்றவோ மறுக்கவோ,முடியாத வலிமையுடையதுமான வருணாசிரமத்தை ஒழிக்கப் பெரியார் கையிலிருந்த படைக்கருவிகள், 'என் குறிக்கோள்' என்ற உறுதிப்பாடு, 'நானே செய்கிறேன்' என்ற தன்னம்பிக்கை,'பகுத்தறிவு' என்ற பட்டப்படிப்புத் தகுதி ஆகியவையே. பெரியார் துணிவுடன் போரைத் தொடங்கினார்.

புராணங்களில் புளுகியிருப்பார்களே, தேவாசுரப் போர்கள் என்றும் அவதாரங்கள் எடுத்துத் தீமையை அழித்த கதைகளென்றும். அவையெல்லாம் கற்பனையில் படைக்கப்பட்ட இயற்கை இறந்த நிகழ்ச்சிகள். ஆனால் பெரியார் இந்த மண்ணில் தொடங்கிய போர்தான்.

வருணாசிரம தருமம் X சமதர்மச் சமுதாயம்

இன்னும் போர் முடியவில்லை. வெற்றி தோல்வியும் உறுதி செய்யப்படவில்லை.

# அடிமை நிலையின் தொடக்கம்

### மனிதனின் குறுக்குப் புத்தி

நாற்கால் விலங்காய்த் திரிந்த மனிதன் படிப்படியாக நாகரிகம் பெற்றான். பின்னிரு காலில் எழுந்து நின்றான். முன் காலிரண்டைக் கைகளாய்க் கையாளக் கற்றான். வேட்டையில் மட்டுமே உணவு பெற்றவன் விதைத்துண்ணும் வித்தை கண்டான். இவ்வாறு வளர்ந்த கூட்டத்தில்தான் வளர்ந்தது ஒரு குறுக்குப்புத்தி. சூழ்ச்சியிலும் உடல் வலுவிலும் தன்னிலும் குறைந்தவனைத் தன் வேலைக்கு ஏவத் தொடங்கினான். இது சுகமாக இருப்பதை அறிந்து சுவை கண்ட விலங்கானான். மெல்ல மெல்லத் தனி மனிதனின் இவ்விழி குணம் ஒரு வகுப்பாரின் குணமாக வளர்ந்தது. மாந்தரில் ஒரு வகுப்பினர் பிறர் மீது மேலாண்மை செலுத்தத் தொடங்கினார்கள். பிறர் உழைப்பை உறிஞ்சும் வாழ்க்கை இனித்தது அவர்களுக்கு. உட்கார்ந்து தின்பது என்ற 'சுக ஜீவனம்' உங்களுக்குத் தெரிந்திருக்கும் அல்லவா?.

## குறுக்குப் புத்தியின் நீட்டிப்பு

நம்மை விட வலிமை குறைந்தவன் தான் நாம் சொன்னதைக் கேட்பான். எனவே அவனை வலிமையற்றவனாகவே வைத்திருக்கவேண்டும். அறியாமையும் வறுமையும்தான் புத்தியிலும் உடல் பலத்திலும் ஒருவனை வலியற்றவனாக்கும் என்பதைக் குறுக்குப்புத்தியும் கூர்த்த புத்தியும் உடைய கூட்டம் சிந்தித்தது. எனவே மேலாண்மை செலுத்தியவர்கள் கீழ்நிலைப்பட்டவர்களைச் சொத்துரிமையற்றவர்களாக்கினார்கள். கூலிக்கு வேலை செய்பவர்களாக அவர்கள் தரத்தைக் குறுக்கினார்கள். கூலியையும் அரை வயிற்றளவாகக் குறைத்துக் கொடுத்தனர். வறுமை அவர்களின் உடல் வலிமையை வற்ற வைத்தது.

கீழ்ப்படுத்தப் பட்டவர்களுக்குக் கல்வியும் மறுக்கப்பட்டது. ஏகலைவர்கள் கட்டை விரல்கள் வெட்டியெறியப்பட்டன. உயர்நிலை மக்களுடன் கலந்து பழகும் வாய்ப்பும் அவர்கள் பொது அறிவை வளர்த்து விடும் என்பதால் ஊருக்கு வெளியே உள்ள ஒதுக்குப் புறச்சேரிகளில் குடியமர்த்தப்பட்டனர். நடந்தால் குற்றம்; பார்த்தால் பாவம்; தொட்டால் தீட்டு;

எனச் சட்டம் போட்டு அவர்களைத் தள்ளி வைத்தனர். ஓய்வு கொடுத்தால் சிந்திக்கத் தொடங்கி விடுவான் என்பதால் ஓய்வே தராமல் ஓயாது உழைக்க வைத்தனர். இவ்வாறு வறுமை, அறியாமையால் தலைமுறை தலைமுறையாகத் தாழ்ந்து தாழ்ந்து அவன் அடிமைத் தன்மைக்கு முழுமையாய் ஆளானான்.

## உள்ள எழுச்சிக்கும் மடைமாற்று

தலைமுறை தாண்டியும் தாழ்த்தப்பட்டவன் என்றும் சிந்திக்கக் கூடாதல்லவா? அவனை ஆசை காட்டியும் அச்சமூட்டியும் தலை தூக்காதவாறு பாதுகாத்தார்கள். கடவுள், மோட்சம், நரகம், முற்பிறப்பு என்பவை, இதிகாச, புராணக் கதைகள், பாட்டுக்கள், கூத்துக்களாக அவன் மூளையில் திணிக்கப்பட்டன 'நம் முற்பிறப்புப் பாவம் காரணமாகவே கடவுள் நம்மைத் தாழ்நிலையில் படைத்துள்ளான்; அடுத்த பிறவியில் நாம் உயர்ந்தவராய்ப் பிறப்போம்' என்ற மூடநம்பிக்கையில் முடங்கி மகிழச் செய்தனர். 'கடவுளைக்கூட நேரில் காணத்தகுதியற்றவர் நாம்' என்று தம் கீழ்மைக்குத் தாமே காரணம் என்பதை ஏற்றுக் கொள்ளச் செய்தனர். இவ்வாறு உள்ளம் ஒடுங்கியவனுக்குக் கள்ளும் போதையும் கொடுத்து அவன் உடலையும் ஒடுங்கச் செய்தனர்.

## மிக மிகக் கொடிய அடக்குமுறை

சுய சிந்தனையும் உடல் வலிவுமுடைய தனி மனிதர் சிலர் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் தோன்றினார்கள். அவர்கள் அடங்க மறுத்தார்கள்; எதிர்ப்புத் தெரிவித்தார்கள்; கேள்வி கேட்டார்கள்; கிளர்ச்சி செய்தார்கள். இத்தகைய தனிமனித எழுச்சி மேனிலைச் சமுதாயத்தால் மிகமிகக் கொடுமையாக அடக்கப்பட்டது. சாணிப்பால், மனிதக் கழிவு, குடும்பத்துடன் தீ வைத்துக் கொளுத்துதல், பாலியல் வன்முறை என அவர்கள் அடக்குமுறைக்கு அளவே இல்லை.

## தாழ்த்தப்பட்டவரில் தலைவர் உருவானால்...

தாழ்த்தப்பட்டவரில் சுயமாக எழுந்த தலைமைப் பண்புடையார் சிற்சில சமயங்களில் தோன்றினர். பொதுசன ஆதரவால் புகழ் பெற்றனர். தம் இனத் தலைவராக ஏற்றம் பெற்றனர்; ஏற்றுக்கொள்ளப்பட்டனர். அவ்வாறு எழுந்த தலைவர்கள் தங்கள் இன முன்னேற்றத்திற்காகப் போராட எழுந்தபோது மேனிலைச் சமுதாயம் அவர்களை நந்தனார் ஆக்கி தம்முடன் சேர்த்துக்கொண்டனர்; கொண்டாடினர். முடிவில் நந்தனார்களை நம்மவர் ஆக்கி அழிப்பதும் மேலாதிக்கத்தாருக்குக் கைவந்த கலை.

## காதலுக்கும் கல்லறைதான்

மேற்குடியும் கீழ்க்குடியும் காதல் வயப்பட்டுக் கலந்த பொழுது மாறுகால், மாறுகை வாங்கி மதுரை வீரன் சாமியாக்கினார்கள். காவு கொடுத்துக் காத்தவராயன் சாமியாக்கிக் கல் நட்டார்கள். நூற்றாண்டுகள் கடந்த மேலாதிக்கத்தில் எழுந்த, எரிந்த கீழ்வெண்மணி, மேலவளவு, கீழவளவு, திண்ணியம், உத்தமபுரம், மரக்காணங்கள் கணக்கிலடங்கா.

## படிநிலைச் சமுதாயம் - அடிமை நிலையின் பரிணாம வளர்ச்சி

மேலே கண்ட இத்தனை முறைகளிலும் கீழ்ப்படுத்தப்பட்டவர் அமுத்தி வைக்கப்பட்டிருந்தாலும் நூற்றாண்டுகளின் மாற்றங்களில் ஆங்காங்கே முட்டல்களும் மோதல்களும் எழுந்தன. புரட்சிகளும் பூகம்பங்களும் பொங்கின. இதில் வெற்றி பெற்ற புரட்சியாளர்களுக்காக மேலாதிக்கவாதிகள் கண்ட புது வழிதான் 'படிநிலை'. ஆம்! 'நான் முதல்படி. நீ இரண்டாம்படியை எடுத்துக்கொள். உன் இடத்திற்கு அடுத்தவன் வராமல் பார்த்துக்கொள்வது உன் பொறுப்பு' என்ற உடன்பாடு, பழைய ஏற்பாட்டைத் திருத்திய புதிய ஏற்பாடு.

இப்போது மேல் தட்டாருக்கு இரட்டை வெற்றி! எப்போதும் முதல்படி தங்களுக்கே என்ற மேனிலை உறுதி செய்யப்பட்டது. எதிரியிடம் போராடும் பொறுப்பை இரண்டாம் படியாரிடம் ஒப்படைத்துவிட்ட நிம்மதியும் இருந்தது. இப்படியே காலப்போக்கில் மூன்றாம், நான்காம் படிகளும் உருவாக்கப்பட்டன. பிராமணன், சத்திரியன், வைசியன், சூத்திரன் என்ற பெயர் சூட்டல்கள், கடவுளின் தலைமுதல் கால்வரை எங்கெங்கே பிறந்தான் என்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டன. 2,3,4 ஆம் படிநிலைகளுக்குள் இடம் பிடிக்க ஏமாளித் தமிழர்களிடம் போட்டிகள், போர்கள். முதலிடம் பிடித்த பார்ப்பான் மட்டும் தன் இடத்தை எப்போதும் தக்க வைத்துக்கொண்டான். முதலிடத்திற்கு யாரும் போட்டியிட முடியாமல் அடி வருடல் தொடங்கிக் குடி கெடுத்தல் வரை தன் சூது மதியால் கோள்மூட்டிக் குளிர் காய்ந்தான்.

இப்படித்தான் நம் சமுதாயத்தில் இன்றுவரை ஆதி திராவிடர், ஆசாரி, வேளாளர், முதலியார், வன்னியர், கவுண்டர், தேவர், நாடார், ரெட்டியார், நாயக்கர் என எல்லாருக்கிடையிலும் நான் உயர்வா? நீ உயர்வா? எனப் பகையும் பொறாமையும் தொடர்கிறது. இடனறிதல், காலமறிதல், வலியறிதல் வகைப்பட்டு வெற்றி தோல்விகள் உறுதி செய்யப்படுகின்றன. முதலிடத்தில் உள்ள பார்ப்பானுக்கு மட்டும் யாருடனும் மோதலில்லை; அவன் முதலிடத்திற்குப் போட்டியிடும் மனத்துணிவு எவருக்கும் எழவே இல்லை. இதுதான் பார்ப்பனியம். இவ்வாறு படிநிலைச் சாதியமைப்பு, தமிழரிடையே வேற்றுமையையும் பிரிவையும் உறுதிப்படுத்தியது.

## இதை எப்படி மாற்றுவது?

புண்ணாகிப் புரையோடிச் சிதைந்து சீழ் பிடித்த இந்தச் சமூதாயப் பிளவை எப்படிச் சீராக்குவது? என்ற பெரியாரின் சிந்தனை தான் அவரது பகுத்தறிவு வாதம். பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனை அவரது சமூக நீதியின் வெளிப்பாடே. சுயராஜ்ஜியம் எனது பிறப்புரிமை எனச் சொல்லிக் கொண்டிருந்தார்களே, அதற்கு முன் மானமும் சுயமரியாதையும் தான் மனிதனுக்குப் பிறப்புரிமை. தன் விடுதலையே தாய்நாட்டு விடுதலையைக் காட்டிலும் இன்றியமையாதது என்பதைப் பெரியார் உணர்ந்தார்.

> இந்த இழிவு, வெறும் வார்த்தையாலோ, பிரச்சாரத்தாலோ, மேல் சாதிக்காரர்களைக் கேட்டுக்கொள்வதாலோ நீங்காது.
>
> தாழ்த்தப்பட்டவர், மேல் சாதிக்காரர் போல் குளித்து முழுகித் திருநீறு,நாமம் முதலியவைதரித்து உணவில் சைவர்களாக மாறி, சுவாமிகள் எனப் புதுப் பெயர் தரித்தாலும் இழிவு போகாது.
>
> ஒருபுறம் கீதையையும் மனுதர்மத்தையும் ஆதரித்துக் கொண்டு, மறுபுறம் தீண்டாமை ஒழிப்பு வேலையில் ஈடுபட்டிருப்பவர்களை நம்பினாலும் நடக்காது. இவர்கள் எவ்வளவு நாளைக்குப் பாடுபட்டாலும் அடியற்ற ஓட்டைக் குடத்தில் நீர் இறைக்கும் மூடர்களுக்கு ஒப்பானவர்களே.
>
> எனவே தீண்டத்தகாவர்கள் மதத்தை ஒழியுங்கள்,மதத்தை விட்டு விலகியிருங்கள். உங்கள் மதம் போகாமல் உங்கள் தீண்டாமை போகாது.
>
> தேசாபிமானம் என்கிற யோக்கியமற்ற சூழ்ச்சிக்கு நீங்கள் இரையாகக் கூடாது; அது சோம்பேறிகள், காலிகள் ஆகியோர் பிழைப்புக்கு ஏற்படுத்தப்பட்ட மோட்சம், நரகம் போன்ற மூடநம்பிக்கையாகும். உங்களுக்குத் தேவை சுயமரியாதை தான்.
>
> பொது மக்கள் ராஜ்ஜியம் இல்லாத சுயராஜ்ஜியம் தேவையில்லை. மானமுடையவன் தான் மனிதன். அதுவே அவன் பிறப்புரிமை.

இவ்வாறெல்லாம் தன் சுய சிந்தனையில் எழுந்த கருத்துக்களைப் பரப்புரை செய்தார். மனித உயர்வு தாழ்வைப் போக்க உரிய வழிமுறைகள் இவையே என அறிவித்தார்.

# சமகாலப் பகுத்தறிவாளர்கள்

## கற்றுச் சிந்தித்தவர்கள்
## சிந்திக்கக் கற்பித்தவர்

இருபதாம் நூற்றாண்டில் தமிழகம் கண்ட மிக உயர்ந்த மனித நேயச் சிந்தனையாளராகப் பெரியார் பேரொளி வீசத் தொடங்கிய அதே காலக்கட்டத்தில் உலக நாகரிகத்தின் உச்சத்தைத் தொட்ட அமெரிக்காவிலும், இங்கிலாந்திலும் தோன்றிச் சிறந்த இரண்டு பகுத்தறிவுச் சிந்தனையாளர்களாகிய அறிஞர் இங்கர்சால், பேராசிரியர் பெட்ரண்ட் ரசல் ஆகியோரை இங்கு ஒப்பு நோக்குவது பொருத்தமானது. மதத்திற்கு எதிராகவும், மனித சுதந்திரத்திற்காகவும் வாழ்நாள் முழுவதும் போராடிய அவ்விரு பேரறிவாளர்களின் கருத்துக்களும், சிந்தனைகளும் பெரியார் கருத்துக்கு வலுச்சேர்ப்பதாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

## பகுத்தறிவாளர் இங்கர்சால்

இங்கர்சால், 1833ல் அமெரிக்காவில் பிறந்தவர். சட்ட வல்லுநர், கேட்பார் பிணிக்கும் பேச்சாளர், எவர்க்கும் அஞ்சாத கொள்கைப் பரப்புநர். தம் இளமையிலேயே பாதிரியார் ஒருவர் ஞானஸ்தானத்தைப் பற்றிப் புகழ்ந்து கூறிக் கொண்டிருக்கும் பொழுது குறுக்கிட்டு,

> எனது ஞானஸ்தானம் சுத்தமாகக் குளிப்பது தான். அது தங்கள் ஞானஸ்தானத்தை விடச் சிறந்தது

எனக் கூறிப் பெரியாரின் இளமைக் குறும்பை நினைவுபடுத்தியவர். அமெரிக்காவில் நிலவிய அடிமை முறையைத் தீவிரமாக எதிர்த்தவர்.

> கடவுளை நேசிப்பதை விட மனிதர்களை நேசிப்பது மிகச் சிறந்தது

என்ற அறிஞர் இங்கர்சாலின் கூற்று, பெரியாரின்

> கடவுளை மற, மனிதனை நினை

என்ற கருத்துத் தானே!

> உலகத்தில் மிகவும் முக்கியமானது சுதந்திரம். அது உணவைவிட - உடையை விட - செல்வம், கலையை விடச் சிறந்தது. எல்லா மதங்களைக் காட்டிலும் சிறந்தது. இத்தகைய சுதந்திரத்தைக் காப்பாற்ற நான் அனைத்தையும் இழுக்கவும் சித்தமாக இருக்கிறேன்.

என்ற இங்கர்சாலின் முழக்கம் பெரியாரின் முழக்கத்தைப் போலவே மிகப் பொருந்தி ஒலிப்பது இவ்விருவரின் உணர்ச்சி ஒத்த நிலைமையை எடுத்துக் காட்டுகிறது.

## பேராசிரியர் பெட்ரண்ட் ரசல்

'நான் ஏன் கிருத்துவன் அல்ல?' என்ற நூலை எழுதிய பெட்ரண்ட் ரசல், இங்கிலாந்தில் பிறந்தவர். பல்கலைக் கழகப் பேராசிரியர். பெரியார் வாழ்ந்த காலத்திலேயே வாழ்ந்தவர் (1876-1975) தம் கருத்துக்களை வலியுறுத்தப் பெரியாரைப் போல் தெருவில் இறங்கிப் போராடியவர்; சிறை கண்டவர். தம் வாழ் நாள் முழுவதும் வசைகளுக்கு ஆளானவராகவே வாழ்ந்திருந்தாலும் 'நோபல் பரிசு' பெற்ற பெருமைக்குரியவர் பெட்ரண்ட் ரசல்.

> கிறிஸ்து என்பவர் நல்லொழுக்கமிக்கவர் என்பதை நான் ஒப்புக் கொண்டாலும் மனித சமூகத்திலேயே அதிக நல்லவர் என்பதையும் அதிக அறிவாளி என்பதையும் நான் ஒப்புக்கொள்ளவில்லை

என்ற ரசலின் வார்த்தைகள், கிருத்துவை அவர் தேவனாகவோ, தேவகுமாரனாகவோ ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை உணர்த்துவதுடன் கிருத்து நம்மைப்போல் சாதாரண மனிதனாக வாழ்ந்து மறைந்த ஒரு நல்லவர் என்பதையும் புரிய வைக்கின்றன.

கிருத்துவின் இரண்டாவது வருகை என்ற நம்பிக்கையைப் பெட்ரண்ட் ரசல் ஏற்க மறுத்தார். நரகம் என்பதில் நம்பிக்கை வைத்ததன் மூலம் கிருத்து பழிக்குப் பழி வாங்கும் பண்பினரோ என ஐயமுற்றார் ரசல்.

கீழ்த்திசையைப் போலவே மேற்றிசையிலும் மதம் மனிதனை முட்டாளாக்கியும், மூடநம்பிக்கைகளால் முடமாக்கியும் வைத்திருப்பதை இப் பேராசிரியரின் சிந்தனை புலப்படுத்துகிறது. இந்து மதமோ, கிருத்துவ மதமோ - மதம் அபின் தான் என்ற கார்லைல் கூற்றுப் பொய்யாகாது.

> மதத்திற்கு அடிப்படை பயமே; பயத்திலிருந்து மனித சமுதாயத்தைக் காப்பாற்றவே விஞ்ஞானம் வந்துள்ளது

> நாம் நமது காலிலேயே நிற்க வேண்டும். சுயேச்சையை விரும்பும் எந்த மனிதனுக்கும் கடவுள் கருத்து லாயக்கில்லாதது .

என்றார் ரசல். இவை போற்றிக் காக்க வேண்டிய பொன்னுரைகள் அல்ல. புரிந்து கடைப்பிடிக்க வேண்டிய பொருளுரைகள்.

'ஆசையும் அச்சமும் தான் மதத்திற்கு அடிப்படை'

என்ற பெரியாரின் வார்த்தைகளைத்தானே இப்பேராசிரியரும் நினைவுபடுத்துகிறார்.

'கடவுளைப் படைத்தவன் முட்டாள்'

'கடவுளைப் பரப்பியவன் அயோக்கியன்'

'கடவுளை வணங்குபவன் காட்டுமிராண்டி'

எனப் பெரியார் விரிவுரை எழுதியதைத்தான் ரசல்,

'கடவுள் கருத்து லாயக்கில்லாதது'

எனக் குறுகத்தரித்துள்ளார்.

> மேனாட்டுப் பகுத்தறிவு வாதங்கள் உயர் அரங்கங்களில் மேட்டுக்குடியார்களின் விவாதப் பொருளாக மட்டுமே விளங்கி வந்தன. பெரியார் மட்டுமே, தம் பகுத்தறிவு வாதத்தைப் பட்டி தொட்டிகளின் பொட்டல் திடல்களில் பாமரனுக்கும் எடுத்துச் சொன்னவர்

என்ற அண்ணாவின் சொற்கள் தாம் பெரியாரின் பெருந்தொண்டை நமக்குப் புரிய வைக்கின்றன.

# வகுப்புவாரி உரிமை வரலாறு

## நான் ஓர் அழிவு வேலைக்காரன்

*இந்தச் சமுதாயம் பாழடைந்துபோன பழைய கட்டிடம்; இடிந்தும் உடைந்தும் நொருங்கிக் கிடக்கிறது. இதைக் கொத்துவேலை செய்தோ, மராமத்துப் பார்த்தோ குடியிருக்கத் தகுதியாக்க முடியாது. வெறும் சீர்திருத்தம் செய்வதால் பயனில்லை. மொத்தமாகத் தரையோடு தரையாக இடித்துக் கட்ட வேண்டும் என்று முடிவெடுத்த பெரியார் அறிவித்தார், 'நான் ஓர் அழிவு வேலைக்காரன்'.* மனிதனை அடிமையாக்கியதன் தொடக்கத்தை ஆராய்ந்தார். வறுமை நிலை ஒழிக்க - வகுப்பு வாரி உரிமை; அறியாமை நீக்க - வருணாசிரம விடுதலை - என அடிமை நிலை தொடங்கிய இடத்திலேயே தோண்டத் தொடங்கினார்.

மக்கள் தொகையில் 3% இருக்கும் பார்ப்பான் 97% கல்வி, அரசுப்பணி பெறுவதையும் 97% இருக்கும் தமிழர் 3% மட்டுமே பெறுவதையும் ஆதாரக் கணக்குகளுடன் அறிவித்தார் பெரியார். அரசின் உயர்நிலை அலுவலர்கள், காவல்துறைத் தலைவர்கள், நீதியரசர்களில் ஒருவர்கூடத் தமிழர் இல்லை என்பதை உணர வைத்தார். ஒரு குடும்பத்தின் முழுச் சொத்தையும் மக்களில் ஒருவனே அனுபவித்துக் கொண்டிருப்பதும், மற்றவர்கள் ஏமாற்றப்பட்டு ஏழ்மையில் தவிப்பதும் சரியா? பாகம் பிரி, பங்குவை - உன் பங்கை மட்டும் நீ எடு; எங்கள் உரிமையை எம்மிடம் விடு - எனப் பாகப்பிரிவினை கேட்கத் தொடங்கினார் பெரியார். நியாயம் பிறப்பதற்காகக் கலகத்தைப் பிறப்பித்தார்.

## வகுப்பு வாரி உரிமை என்றால் என்ன?

> சமூகத்தில் மேற்சாதி, கீழ்ச்சாதி இரு வகுப்பினரிடையே பகைமை நீங்கி நம்பிக்கை ஏற்படவும், ஒருவர் பாத்தியதையில் மற்றொருவர் பிரவேசிக்காதபடி பந்தோபஸ்து ஏற்படுத்துவதும்தான் வகுப்பு வாரி பிரதிநிதித்துவம்

என்று தூய தமிழில் சொல்லாமல் புரியும் தமிழில் பெரியார் கூறிய விளக்கத்தை ஊன்றிப் படியுங்கள். இருவருக்கிடையில் பகைமை நீங்க

வேண்டும் என்பதில், எதிரியாக வேண்டாம்; உடன்பிறப்பு உறவோடு பாகப்பிரிவினை செய்யலாம் என்ற மனிதநேயமும், ஒருவர் பாத்தியதையில் மற்றொருவர் புகக்கூடாது என்பதில், இருபக்கத்தாரையும் மதிக்கும் நேர்மையும் பெரியாருக்கே உரியன.

வகுப்புவாரி உரிமை - இந்திய மக்கள் அனைவரும் ஒன்றே என்ற தேச ஒற்றுமையில் பிளவை ஏற்படுத்திவிடும் என்று வகுப்புவாரி உரிமைக்கு எதிராகப் பேசியவர்கள் அன்றும் இருந்தார்கள். அவர்களுக்குப் புரியும்படிதான் 'குடும்பச் சொத்தை ஒருவனே அனுபவிப்பது கொடுமை' என்றும், குடும்ப உறுப்பினர் அனைவருக்கும் 'பாத்தியதை' உண்டு என்றும், ஒருவன் பங்கில் மற்றவன் தலையிடாதபடி 'பந்தோபஸ்து' செய்யவேண்டும் என்றும் பெரியார் கூறினார். ஒவ்வொருவருக்கும் உரிய பாத்தியதையைச் சட்டப்படி பந்தோபஸ்து (சட்டப் பாதுகாப்பு) செய்வதுதான் பெரியார் விரும்பிய வகுப்புவாரி உரிமைச் சட்டம். இந்தக் கருத்தின் தொடர்ச்சியாகத்தான் பெண்ணுக்கும் சொத்துரிமை கொடுக்கப் போராடியவர் பெரியார்.

## இட ஒதுக்கீடு வரலாறு

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே தமிழ் நாட்டில் பார்ப்பனரால் பாதிக்கப்பட்டவர்கள் சங்கங்கள் பற்பல, ஆங்காங்கே தோன்றலாயின. இக்கருத்தின் வடிவாக்கத்தில் எழுந்த பெரிய இயக்கம்தான் நீதிக்கட்சி என்ற ஜஸ்டிஸ் பார்ட்டி. இந்தச் சமயத்தில் இந்தியா ஆங்கில அரசின் நேரடி ஆட்சியில் இருந்தாலும், உள்ளூர் நிர்வாகத்திற்கான ஆட்சியையும் அமைச்சரவையையும் இந்தியரே அமைத்துக் கொள்ளச் சனநாயகத் தேர்தல்களை ஆங்கில ஆட்சியாளர் அறிமுகம் செய்திருந்தனர். இந்த ஏற்பாட்டில் தமிழ் நாட்டில் பெரியார் ஆதரவு பெற்ற நீதிக்கட்சியின் ஆட்சி நடைபெற்றது.

நீதிக்கட்சி ஆட்சியில்தான் தமிழ் நாட்டில் முதல் முதலாக வகுப்புவாரி உரிமைச் சட்டம் 1928ஆம் ஆண்டில் அமைச்சர் முத்தையா என்பவரால் கொண்டுவரப்பட்டது. இதன் பயனாய்க் கல்வி, அரசுப்பணிகளில் பார்ப்பனரல்லாதவர்களுக்கு வாய்ப்புப் பெருகியது. நாடு விடுதலை பெற்று அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கப்படும்வரை (1950 வரை) ஆங்கிலேயர் ஆட்சியில் நீதிக்கட்சி உருவாக்கிய இடஒதுக்கீடு நடைமுறையில் இருந்தது.

## காங்கிரஸ் கட்சியில் இட ஒதுக்கீட்டிற்குத் தடை

1950இல் இட ஒதுக்கீடு காரணமாகப் பொறியியல் கல்லூரியில் இடம் கிடைக்காத பார்ப்பன மாணவர் சார்பாக (அவர் வழக்குத் தொடுக்காமலே) சில பார்ப்பன வழக்கறிஞர்கள் உயர் நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். சென்னை அரசாங்கத்தின் இட ஒதுக்கீட்டுச் சட்டம், இந்திய அரசியலமைப்புச்

சட்டத்திற்கு முரணானது என்ற அவர்கள் வாதத்தை ஏற்ற உயர்நீதி மன்றம் இடஒதுக்கீட்டுச் சட்டத்திற்குத் தடை விதித்தது. தில்லி உச்சநீதிமன்றமும் இந்தத் தடையை உறுதி செய்தது. நினைத்துப் பாருங்கள் - 1928 முதல் இருபதாண்டுகள் ஆங்கிலேயர் ஆட்சியில் தமிழருக்குக் கிடைத்த உரிமை. காங்கிரஸ்காரர் ஆட்சியில் பறிக்கப்பட்டது என்றால் இவர்களில் யார் அந்நியர்? என்ற பெரியாரின் கேள்வி சரியானது தானே?

## பெரியார் வெகுண்டெழுந்தார்

உச்சநீதி மன்றத் தீர்ப்பையறிந்து பெரியார் கொதித்தெழுந்தார். தமிழகம் முழுவதும் போராட்டம், கடையடைப்பு, அரசு அலுவலக மறியல் என இயல்பு வாழ்க்கை தடம்புரண்டது. தமிழ் நாட்டார், வட நாட்டார் பேத உணர்ச்சி தலை தூக்கியது. அன்றைய இந்திய உள்துறை அமைச்சர் சர்தார் வல்லபாய் படேலுக்கு இட ஒதுக்கீடுக் கொள்கையில் உணர்வு பூர்வமாக உடன்பாடிருந்தது. பெரியார் தலைமையில் பெருங்கிளர்ச்சி செய்த தமிழ் நாட்டு மக்களுணர்வை இந்திய அரசு எற்றது. 1951ஆம் ஆண்டு பிப்ரவரியில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முதல் திருத்தமாக இட ஒதுக்கீட்டுக் கொள்கை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

> பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றத்திற்கு
> அரசு செய்யும் எந்த ஏற்பாட்டையும் அரசியலமைப்புச் சட்டம்
> தடை செய்யாது

என்பதே இட ஒதுக்கீட்டை ஏற்றுக்கொண்ட அரசியலமைப்புச் சட்ட திருத்த வரிகள். பெரியார் இல்லாதிருந்தால் இன்று எழுதுகோல் பிடித்து எழுதிக்கொண்டிருக்கும் எண்ணற்ற தமிழர்களின் கைகள் இன்றும் அவரவர் தொழில் கருவியைத்தான் தூக்கியிருக்கும்.

# வருணாசிரமத்தை ஒழிக்க வழி

## இமய மலையை இல்லை என்கிறார்

தாழ்த்தப்பட்டோர் வறுமையை ஒழிக்க உறுதுணையாகும் வகுப்புவாரி உரிமையைப் பெற்றுத் தந்த பெரியார், தாழ்த்தப்பட்டோர் அறியாமையை ஒழிக்கத் தன் வாழ் நாளையே அர்ப்பணித்தார். ஐயாயிரம் ஆண்டு அடிமை வாழ்விற்கு எதிரியாகப் பெரியார் புறப்பட்ட பொழுது சமுதாயத்தில் எழுந்த பேரதிர்ச்சியைச் சொல்லில் அடக்கமுடியாது.

> இவர் இமயமலையை இல்லை என்கிறார்;
> எண்ணிப்பார்த்தால் உண்மையாக இருக்கிறது

எனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனையே வியப்படைய வைத்தது பெரியார் வாதம்.

> *திடுக்கிடச் செய்கிறார்; திகைக்க வைக்கிறார்*

என அண்ணாவையே திக்குமுக்காடச் செய்தன பெரியார் சிந்தனைகள்.

உன் புத்தியைப் பயன்படுத்து. சுய அறிவுகொள். ஏன் என்று கேள்வி கேள். மானம் பார். சுயமரியாதை உணர்ச்சி கொள். உன் அடிமைச் சங்கிலியை நீயே அறுத்தெறி. பள்ளத்திலிருந்து துள்ளி வெளியே குதி. எனத் தன் வாழ்நாள் முழுவதும் பேசினார். எழுதினார், எழுச்சியூட்டினார். அடிமைத் தமிழா, உனக்கு அறிவு இல்லையா என வசை பொழிந்தார். தன்மீது பொழியப்பட்ட வசையையும் வன்முறையையும் ஏற்றார். சட்டத்தை எதிர்த்தார். சிறை சென்றார். தமிழன் அடிமை நிலை தீர்க்க இறுதிவரை போராடிக் கொண்டேயிருந்தார். அவர் போராட்ட வரலாற்றுச் சுருக்கம் இதோ!

## சாதி ஒழிப்பா? வறுமை ஒழிப்பா?

பெரியார் 1931-32இல் மூன்று மாதங்கள் சோவியத் ரஷ்யாவில் தங்கி அந்நாட்டைச் சுற்றிப் பார்த்தார். எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும் என்ற பொதுவுடைமைச் சிந்தனையில் பொலிவுற்றிருந்த அன்றைய சோவியத் யூனியனின் நல்லாட்சி அவரைக் கவர்ந்தது. தாய் நாடு திரும்பிய பெரியார்,

பகுத்தறிவுச் சிந்தனையுடன் பொதுவுடைமைச் சிந்தனையையும் தம் கொள்கை முழக்கமாகப் பேசத்தொடங்கினார். தோழர்கள் சிங்காரவேலரும் ஜீவாவும் நெருங்கியவர்கள் ஆயினர். தம் பகுத்தறிவு இயக்கத்தில் *'சமதர்மக்கட்சி'* என்ற உட்பிரிவும் தொடங்கப்பட்டது. *'புரட்சி'* என்ற இதழும் வெளியிடப்பட்டது.

இந்தக் காலக்கட்டத்தில், ஆங்கில அரசிற்கு எதிராக எழுந்த பொதுவுடைமைக் கிளர்ச்சியாளர்களை ஒடுக்கத் தீவிர அடக்குமுறையைத் தொடங்கியது வெள்ளையர் அரசு. பொதுவுடைமை பேசும் பெரியார் இயக்கமும் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு அரசாங்கத்தால் அடியோடு அழிக்கப்படும் என்ற செய்தியை அரசுத் தொடர்புடைய உண்மை நண்பர்கள் சிலரால் பெரியார் அறிந்தார். வறுமை ஒழிப்பா? (பொதுவுடைமை) சாதி ஒழிப்பா? (சுயமரியாதை) என்ற அன்றைய வினாவிற்குப் பெரியார் தெளிவான விடை கண்டார்.

தாழ்த்தப்பட்ட ஒருவர் தொழில் செய்து பெரிய செல்வந்தர் ஆகலாம்; I.A.S. படித்து ஆட்சியாளர் ஆகலாம்; அரசியலில் ஈடுபட்டு அமைச்சர் ஆகலாம். இதன்மூலம் அவர் வறுமை ஒழியலாம். ஆனால் அவரது சாதி இழிவு ஒழியாது. தாழ்த்தப்பட்ட தன்மை சமுதாயத்தில் குறையாது. ஆனால் சாதி ஒழிந்தால்தான் மனிதனின் தாழ்வு மாறும். எனவே நான் சமதர்மச் சமுதாயத்திற்குப் பாடுபடுவதைக் காட்டிலும் சமநிலைச் சமுதாயத்திற்குப் பாடுபடவே விரும்புகிறேன் எனப் பெரியார் அறிவித்தார்.வருணாசிரம ஒழிப்பே உயிர்க்கொள்கை என்பதை நிலை நாட்டினார்.

நாட்டு விடுதலைக்குப் பின் இந்தியாவில் நடந்த நிகழ்வு ஒன்று பெரியார் சிந்தனையை மெய்ப்பித்தது. இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சராயிருந்த திரு.சகசீவன்ராம் என்ற தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர், பாட்னாவில் உள்ள உயர்சாதித் தலைவர் ஒருவரின் சிலைக்கு மாலை அணிவித்தார். அவர் சென்றபின் அங்குள்ள மேற்சாதியினர், சிலை தீட்டுப்பட்டுவிட்டது எனக் கங்கை நீரால் தூய்மை செய்தனர். இதைப்போன்ற ஆயிரம் நிகழ்வுகள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. இதை முன்பே உணர்ந்தவராதலால் வறுமை ஒழிப்பை விடச் சாதியொழிப்பிற்கே முன்னுரிமை என்றார்.

## தீண்டாமைக்கெதிரான போராட்டங்கள்

தெருவில் நடக்கவிருந்த தடையை உடைத்த வைக்கம் போராட்டம், பார்ப்பனர் உண்ணத் தனியிடம் ஒதுக்கப்பட்ட சேரன்மாதேவிக் குருகுலத்திற்கு எதிர்ப்பு, செங்கற்பட்டு மாநாட்டில் பெயருக்குப் பின் இருந்த சாதிவால் நறுக்கிய தீர்மானம்; தமிழ்நாடு தமிழர்க்கே போராட்டம், இரயில்வே உணவகங்களில் உள்ள பார்ப்பனருக்குத் தனியிடம் எதிர்ப்பு, கருப்புச்சட்டை மாநாடு, விடுதலை நாள் - குடியரசு நாள் துக்க நாள் அறிவிப்பு, வகுப்புவாரி உரிமைக்காக அரசியல்

சட்டத்திருத்தப் போராட்டம், குலக்கல்வி எதிர்ப்பு, சாதியைப் பாதுகாக்கும் அரசியலமைப்புச் சட்டம் எரிப்பு, இந்திய தேசப்படம் எரிப்பு, பொதுக் கிணறு, பொதுப்பாதை, பொதுச் சுடுகாடு, கருவறை நுழைவுப் போர், இரட்டைக்குவளை முறை ஒழிப்பு, பொதுக்கோயில், பொதுப்பள்ளிக்கூடம் அமையப் போராட்டங்கள், தமிழ்ச் சமுதாய இழிவு எதிர்ப்பு மாநாடு, அனைவரும் அர்ச்சகர் ஆக்கப் போராட்டம், எனச் சாதி ஒழிப்பிற்குப் பெரியார் எண்ணற்ற மாநாடுகள், *வாழ்நாள் முழுவதும் போராட்டங்கள் நடத்தினார்.* புன்னகையுடன் பன்முறை சிறை புகுந்தார்.

## மூடநம்பிக்கை ஒழிப்பு

தன் குடியரசு இதழில் எழுதப்பட்ட இராமாயண, பெரியபுராண, *மகாபாரத ஆராய்ச்சிக்* கட்டுரைகள் - தமிழ் நாட்டில் கால் படாத இடமே இல்லை எனும்படி அனைத்து ஊர்களிலும் புராண, இதிகாசப் புளுகுகளை வெட்ட வெளிச்சமாக்கப் பேசிய பேச்சுக்கள். *விநாயகர் சிலை உடைப்பு, ராமர்* படம் எரிப்பு, கம்பராமாயணத்திற்குத் தீ, மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு என மூட நம்பிக்கை ஒழிப்பில் முழுக்கவனம் செலுத்தினார். தன் இயக்கப் பேரணிகளில் தீச்சட்டி, தீ மிதிப்பு, அலகு குத்துதல் நடத்திக்காட்டி அதன் புனிதத்தன்மைப் புளுகினை அம்பலப்படுத்தினார்.

## பெண்ணுரிமைப் போர்

கலப்புத் திருமணங்கள், விதவைத்திருமணங்கள், *சீர்திருத்தத்* திருமணங்கள் - பெண்கள் மாநாடுகள், பெண் அடிமை நிலையை விளக்கி எழுதப்பட்ட எத்தனை எத்தனை ஆய்வுரைகள், நூல்கள் எனப் பெண்ணுக்குப் பெருமை செய்யப் போராடியவர் பெரியார்.

## பதவி விலைப்படாதவர்

தனது சமநிலைச் சமுதாயப் போராட்டத்திற்கு இடையூறு எனக் கருதும் எதையும் பெரியார் விலக்கி வைத்தார். தம்மைத் தேடிவந்த முதலமைச்சர் பதவியைக் கூட ஏற்க மறுத்தார். சனநாயகம், தேர்தல், வாக்குச் சீட்டு வலையில் விழுந்து விட்டால் சரிக்கட்டுதல், ஒத்துப்போதல், விட்டுக்கொடுத்தல் என்ற விலை கொடுக்க வேண்டியது வரும் என்பதால் விழிப்பாயிருந்தார். அவர் கொள்கைக்குத் துணை புரியும் கட்சிக்குத் துணை புரிவார், கொள்கையை எதிர்க்கும் கட்சியை *எதிர்த்துப் போர் புரிவார். அரசியல் கட்சிகளுக்குப்* பெரியார் ஆதரவு தரும் நிலை அடிக்கடி மாறுவது போல் தெரியும். ஆனால் உண்மையில் மாறுவது அவர் இல்லை; அரசியல் கட்சிகள்தாம் அடிக்கடி தங்கள் கொள்கைகளை மாற்றிக் கொள்கிறார்கள்.

## சுயமரியாதைத் தொண்டர் படை

தமிழன், தன்மானம் பெறத் தான் எந்த அவமானமும் பெறத் துணிந்த தன்னிகரில்லா வீரர் படை பெரியார் பின்னே அன்று திரண்டிருந்தது. அன்று பெரியார் இயக்கத் தொண்டனுக்குப் பெயர் சூனாமானாக்காரன். (இதை

இன்னும் இழிவாகச் சொல்வார்கள்) அவன் எந்தச்சாதியைச் சேர்ந்தவனாக இருந்தாலும் எல்லாச் சாதியினருக்கும் - சமுதாயத்திற்கே - தீண்டத்தகாதவன்தான். ஊரை விட்டு, உறவை விட்டு ஒதுக்கி வைக்கப்பட்டவன் அவன். பெண்டாட்டி, பிள்ளைகளின் வெறுப்பிற்கு ஆளானவன். அவன் செய்த தவறு என்ன தெரியுமா? சாதியால், மதத்தால், பணத்தால், பதவியால் எவனையும் உயர்ந்தவன் என ஏற்றுக்கொள்ள மறுத்தான். எவன் முன்பும் தோள் துண்டை இறக்கி, இடுப்பில் இறுக்கி, உடல் சுருக்கிக் கும்பிடுவதை வெறுத்தான்.

எல்லாரும் தட்டிக் கேட்கத் தவறிய மேல் தட்டுக்காரர்களின் தவற்றைச் சுயமரியாதைக்காரன் சுட்டிக் காட்டினான்; தட்டிக் கேட்டான். கை தொட்டால் தீட்டு, கண்பட்டால் பாவம் என ஊர் ஓரத்தில் ஒடுக்கப்பட்டவன் தோளில் கை போட்டுத் தோழமை பாராட்டினான் சுயமரியாதைத் தோழன். கறுப்பு உடலில் பாயும் சிவப்புக் குருதியில் பேதமில்லை எனக்கட்டித் தழுவினான். தாழ்த்தப்பட்டவன் வீட்டில் தண்ணீர் குடித்தான். மனிதனில் நீயும் ஓர் மனிதன் என்பதை அவனுக்கு நினைவூட்டி அவன் நிமிர்ந்து நிற்கப் பாடுபட்டான்.

இந்தச் சுயமரியாதைக்காரன் தான் பெண்ணைப் போற்றினான். என் மனைவி எனக்கு அடிமையில்லை என அடிமைத்தாலியை அறுத்தெறிந்தான். பெண்குழந்தையைப் பள்ளிக்கு அனுப்பினான்.

தன் சுயமரியாதைத் தொண்டிற்குப் பரிசாக வீட்டில் எதிர்ப்பு, வீதியில் கேலி, அரசின் அடக்கு முறை, ஆதிக்கச் சாதியார் பகை, தொழில் முடக்கம், வேலை இழப்பு என இத்தனை கொடுமைகளையும் ஏற்றான். ஆனால் பெரியார் கற்றுக் கொடுத்த சுயமரியாதையை மட்டும் இழக்காமல் முற்றிய மூங்கிலாய் நின்று முறிந்து போனான்.

## வயதில் அறிவில் முதியோர்
## நாட்டின் வாய்மைப் போருக்கென்றும் இளையார்

தூய தொண்டர் படையின் துணையுடன் சாதி ஒழிப்பும் சமநிலைச் சமுதாயமும் பெற வாழ்நாள் முழுவதையும் போர்க்களத்திலே கழித்தார் பெருவீரர் பெரியார். ஓய்வு அவருக்குப் பிடிக்காது. சோம்பல் அவரைத் தொடாது. அச்சம் அவரை அண்டாது. ஆண்மை என்றும் குன்றாது. தொண்ணூற்று ஐந்தாண்டு முதுமை வரை - தொடரும் நோய்களுடன் நாள் தோறும் தொடர்ந்து பேசினார். ஊர் ஊராய்ப் பேசினார். தன் உயிர் மூச்சாம் கொள்கைக்காகவே வாழ்ந்து ஒரு நாள் தன் மூச்சை நிறுத்தினார்.

பெரியார், சாதியின் ஆட்சியைப் பறித்தார்; சாதியின் மணிமுடியை வீழ்த்தினார்; சாதியின் தோள்களை வெட்டினார். சாதியின் கால்களை முறித்தார். சாதி வாலையும் ஒட்ட நறுக்கினார். ஆனால் சாதி ஒழியவில்லை. மனித உள்ளத்தின் இருட்டறையில் சென்று ஒளிந்து கொண்டது; இன்னும் உயிர் வாழ்கிறது - இதுவே உண்மை நிலை.

# பெரியாரியத்தின் எழுச்சியும் தாழ்ச்சியும்

### தாழ்வில்லா வாழ்வு

1927-1973 முடிய உள்ள காலகட்டத்தைக் கணக்கீடாகக் கொண்டு பெரியாரியத்தின் எழுச்சியையும், தாழ்ச்சியையும் கணித்துப் பார்க்கலாம். 1879இல் தோன்றிய பெரியாரின் பகுத்தறிவுச் சிந்தனை அவரது இளமை முதலே அவருள் முகிழ்ந்திருந்தாலும் 1926இல் அவர் காங்கிரசிலிருந்து வெளியேறிய பின்னரே முழு ஈடுபாடாக, இயக்கமாக வெளிப்பட்டது. அவரது இறுதி மூச்சுவரை அவரது மூச்சாகவே விளங்கியது. தோராயமாகச் சொல்வோமானால் அவரது வாழ்வின் சமபாதிக்காலம், அவர் சாதி ஒழிந்த சமநிலை காணவே தம் வாழ்வை ஒப்புக்கொடுத்தார். இதில் முதல் கட்டம் 1927 - 1947. ஆங்கிலேயர் ஆட்சிக்காலம். 2வது கட்டம் 1947-1973 - நம்மவர் ஆட்சிக்காலம் எனப் பிரிக்கலாம்.

### 1927-1947 - எதிர்ப்புடன் எழுந்தார்

குடியரசு இதழே பெரியாரின் போர் வாளும் கேடயமும். சொல்மாரி பொழிவதே அவர் விற்போர். சமுதாயப் போர்க்களத்தில் நாளும் நாளும் அறப்போர்தான். சிறைக்கூடமே ஓய்வு இல்லம். பெரியார் கண்ட நன்னம்பிக்கை முனைகளே அவர் நடத்திய மாநாடுகள். செங்கற்பட்டு, விருதுநகர், ஈரோடு, சேலம், தூத்துக்குடி, சென்னை எனத் திசை எட்டிலும் கூட்டிய மாநாடுகளில் கூடிய சுயமரியாதை வீரர்களுக்குக் கொள்கை உரம் ஊட்டப்பட்டது. சுயமரியாதை மாநாடு, சமதர்ம மாநாடு, மூடநம்பிக்கை ஒழிப்பு மாநாடு, பெண்கள் மாநாடு, மது விலக்கு மாநாடு, இந்தி எதிர்ப்பு மாநாடு எனக் கொள்கை விளக்கப் பயிற்சிப் பாசறைகளாக மாநாடுகள் பயன்பட்டன. தமிழர்கள் ஆயிரம் ஆயிரம் பேராய்ப் பெரியார்பின் அணிதிரண்டனர். 1938இல் சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் ‘பெரியார்’ என்ற சிறப்புப் பெயர் பெற்றுத் தமிழ் நாட்டிற்கே பெரியார் ஆனார்.

### எதிர்ப்பு எழாத இடமே இல்லை

நகரங்களில் மாநாடுகளுக்கு இடம் பெறுவதிலிருந்து சிற்றூர்களில் படிப்பகம் திறப்பது வரை மேலாதிக்கக்காரர்களின் தூண்டுதலால்

நம்மவர்களிடமிருந்தே எழும் ஏச்சும் எதிர்ப்பும் எழாத இடமே இல்லை. இதில் காங்கிரஸ்காரர்களின் பங்கு கணிசமானது. தீவைக்கப்படாத படிப்பகமோ, கலகம் விளைவிக்காத கூட்டமோ அரிதுதான். மதுரையில் மாநாட்டுப் பந்தலையே தீக்கிரையாக்கினார்கள். எழுச்சிப் பேரணிகள் எதிரிகளால் கலைக்கப்பட்டு முடிவு இடம் வருமுன்னரே முடிவடைந்தன. பெரியாரின் குடியரசு இதழுக்கு எதிராகத் தேசபந்து, நவசக்தி, சுதேசமித்திரன் எனத் தமிழ் நாட்டின் எல்லா இதழ்களும் எதிர்ப்பைக்கக்கின.

## தோள்கொடுத்த அறிஞர்கள் - துணைவந்த தலைவர்கள்

குடியரசு இதழில் பெரியாருக்குத் தோள்கொடுக்கச் சிந்தனை ஆழம் கொண்ட, அறிஞர்குழு ஒன்று ஆர்வமுடன் செயல்பட்டது. பெரியார் ஓரிடத்தில் பேசிய கருத்தை ஆயிரம் இடங்களில் பேசிப் புரியவைக்க எழுச்சி மிக்க பேச்சாளர் கூட்டமும் திசையெங்கும் புறப்பட்டது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட வகுப்பாரில் சமுதாய மதிப்புப் பெற்ற தலைவர்களில் பெரியாரைப் புரிந்துகொண்டவர்கள் பலரும் பெரியாருக்கு ஆதரவு கொடுக்கத் தொடங்கினர். குடியரசுப் பதிப்பகம் மூலம் பெரியாரின் பேச்சும் எழுத்தும் நூல் வடிவம் பெற்றுக் குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டன. இந்த நூல்களை எழுதியமைக்கும் வெளியிட்டமைக்கும் வழக்குகளைச் சந்திப்பதும் சிறைத் தண்டனை பெறுவதும் வாடிக்கையாயின. பெரியாரின் அரசியல் ஈடுபாடும், காங்கிரஸ் எதிர்ப்பும் இந்தி எதிர்ப்பாக வெளிப்பட்டது. இந்தித் திணிப்பை எதிர்த்து 1938இல் மிகப் பெரிய கிளர்ச்சியையும் சிறை நிரப்பும் போராட்டத்தையும் தமிழறிஞர்கள், சமூகத்தலைவர்கள், தொண்டர்கள், மாணவர்கள் ஆதரவுடன் பெரியார் நடத்தினார். ஆயிரக்கணக்கானவர்கள் சிறை சென்றனர். தொண்டர் பலர் உயிர்ப்பலி ஆயினர். பெரியார் பெல்லாரி சிறையில் அடைக்கப்பட்டார். அவர் சிறையில் இருக்கும்போதே நீதிக் கட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த நிலையில்தான் 'திராவிட நாடு திராவிடர்க்கே' 'தமிழ் நாடு தமிழர்க்கே' என்ற பிரிவினை வாதத்திற்கான காரணங்களைப் பெரியார் ஆழமாகப் பேசத் தொடங்கினார். அரசியலிலும் ஆட்சியிலும் தமிழர் நலம் அழிக்கப்படுவதை ஆணித்தரமாக எடுத்துரைத்தார். 1944இல் நீதிக்கட்சி, திராவிடர் கழகம் ஆயிற்று. பெரியார் திராவிடர் கழகத் தலைவரானார். ஆங்கிலேயர் கொடுத்த கௌரவப்பட்டங்கள், கௌரவப் பதவிகளைத் திராவிடர் கழகத்தார் விட்டு விட வேண்டும் என்று மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆங்கிலேயர் ஆதரவுக் கட்சி என்று நீதிக்கட்சிக்கிருந்த பழியை இதன் மூலம் பெரியார் போக்கினார்.

–

## 1948 - 1973 - பெரியாரியம் பேரொளி பரப்பியது

பெரியாரின் இருபதாண்டுகாலப் புரட்சியும் போராட்டமும் தமிழ்ச் சமுதாயத்தைப் புரட்டிப் போட்டியிருந்தது. பெரியார் கொள்கை மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எழுச்சிக் காலம் தொடங்கியது. கற்றவர், அரசு அலுவலர், ஆட்சியாளர், பெரியார் பணியால் சமுதாயத்தில் முழுப்பயன் அடைந்தவர் கூட்டம் பெரியாரைக் கொண்டாடத் தலைப்பட்டது. தமிழ் நாட்டின் ஒவ்வொரு அசைவிலும் பெரியார் கருத்திற்கு இடம் ஏற்பட்டது. 1951இல் அரசியலமைப்புச் சட்ட முதல் திருத்தத்தால் வகுப்புரிமை வாய்ப்பை உறுதிப்படுத்தினார் பெரியார். 1952,இல் குலக்கல்வித் திட்டத்தால் பழநிலைச் சமுதாய அமைப்பை நிலைநிறுத்தத் திட்டமிட்ட பார்ப்பனச் சூழ்ச்சியை முறியடித்தார். தமிழன் ஆட்சித்தலைவன் ஆவதால், பெருந்தலைவர் காமராசரை ஆட்சிக் கட்டிலில் ஏற்றுவதற்கு முழுத்துணை புரிந்தார். 1956இல் எழுந்த தட்சிண பாரதத்திட்டத்தை எதிர்த்து மொழிவாரி மாநிலம் ஏற்படக் கிளர்ச்சி செய்தார். திராவிடர் கழகத்தின் துணை அமைப்புகளாகப் பொதுமக்களும், ஆசிரியர்களும், அரசு அலுவலர்களும் பங்கேற்கும் பகுத்தறிவாளர் கழகம், சிந்தனையாளர் கழகங்களைப் பரவச் செய்தார். தேரடியிலும், தெருமுனையிலும், நாற்சந்தியிலும், பொட்டல்வெளியிலும் பெரியார் பேச்சைக் கேட்டவர்கள், பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழக அரங்கங்களில் பெரியார் பேச்சைக் கேட்டனர். அவ்வரங்கங்களில் பெரியார் பெருமை பேசப்படுவதையும் தமிழ் நாட்டினர் கேட்டனர். பெரியாரும் குன்றாத போர்க்குணத்துடன் எப்போதும் களப்பணியாற்றிக்கொண்டிருந்தார். பெரியாரியத்தின் வெற்றியாக அவர் வாழ்ந்த காலத்திலேயே அவரது உருவச் சிலைகள் ஊர்தோறும் உயர்ந்து நின்றன.

### முதல் முரண்பாடு

15-8-1947 இந்திய விடுதலை நாள்

> இது நமக்குத் துக்கநாள். வெள்ளையன் வெளியேறினாலும், வடநாட்டுக்கொள்ளையன் நம் மீது சவாரி செய்கிறானே

என்றார் பெரியார்.

> இருவர் நம் மீது சவாரி செய்தனர்; ஒருவன் ஒழிந்ததில் பாதிச் சுமை குறைந்ததல்லவா! அதனால் ஆகஸ்டு 15- மகிழ்ச்சிக்குரிய நாளே

என்றார் அண்ணா. தலைவரும் தளபதியும் முரண்பட்டனர். தந்தையும் தனயனுமாய் இருந்த இயக்கத்தில் இரண்டு சிந்தனைகள் எழுந்தன.

## புரிந்துகொள்ள முடியாத பொருந்தாத் திருமணம்

பொது வாழ்விற்குள் புகுந்த ஒரு தனிமனிதரின் குடும்ப வாழ்வு குறித்து ஆராய்ச்சி செய்வதும் குற்றம் குறை காண்பதும் பொதுசன வழக்கந்தானே. வெறும் வாயை மெல்பவருக்கு அவல் கிடைத்தால் விடுவார்களா? 70 வயதிலிருந்த பெரியார், தன் உடல் நலன் பேண உடனிருந்த 30 வயதுடைய பெண் தொண்டர் மணியம்மையை 9-6-1949இல் திருமணம் செய்துகொண்டார். குடும்பப் பொறுப்பை மட்டுமல்ல, திராவிடர் கழகப் பொறுப்பையும் அவரிடம் கொடுத்தார்.

எல்லாரும் சரி என்று எண்ணியதைக் கூட தவறு என நிலைநாட்டுபவர் பெரியார் என்ற எண்ணத்திற்கு மாறாக எல்லாரும் தவறு எனச் சொல்லியும் தமக்குச் சரியெனப்பட்டதாக இத் திருமணத்தை உறுதிப்படுத்தினார். ஐயாயிரம் ஆண்டுகளாகப் புரியாதிருந்த சனாதனப் புரட்டுகளை எல்லாம் தமிழனுக்குப் புரிய வைத்த பெரியாரின் பொருந்தாத் திருமணம் ஏன்? என்பது மட்டும் எவர்க்கும் புரியாததாகவே போய்விட்டது.

## கழகம் உடைந்தது கண்ணீர்த் துளி பிறந்தது.

பெரியாரின் திராவிடர் கழகத்தில் எழுத்தாற்றலும் பேச்சாற்றலும் மிக்க இளைஞர் கூட்டம் ஒன்று எழுச்சி பெற்றிருந்தது. பெரியார் ஊட்டிய சமுதாய விடுதலை உணர்வால் தம் சொந்த வாழ்வை மறந்து பொது வாழ்வையே புது வாழ்வாய் ஏற்றவர் பலர் இருந்தனர். பட்டிதொட்டியெல்லாம் பயணித்துப் பெரியார் சிந்தனையைப் பேசிப் பழகியவர்கள் அவர்கள், கதை, கவிதை, கட்டுரை, நாடகம், திரைப்படம் எனப் பகுத்தறிவுச் சிந்தனையை எழுதிப் பரப்பியவர்கள் அவர்கள். பெரியாரின் போராட்டங்களில் முன்னணியில் நின்று ஆட்சியாளர் சிறைக்கூடங்களில் அடைக்கப்பட்டவர்கள் அவர்கள். இத்தகு ஆற்றல்மிக்க அந்த இளைஞர் படை பொதுமக்களின் இதயச் சிறையிலும் இடம் பெற்றிருந்தனர். தமிழ் இளைஞர் கூட்டத்தின் போற்றுதலுக்கும், பாராட்டுதலுக்கும், பின்பற்றுதலுக்கும் உரிய 'HEROS' ஆகத் திகழ்ந்தனர்.

இந்த மக்கள் செல்வாக்கு, திராவிடர் கழக இளந்தலைவர்கள் உள்ளத்தில் புதிய சிந்தனைக்கு வித்திட்டது. அப்போதுதான் சுதந்திர இந்தியா - மக்களாட்சி மாண்புடைய குடியரசு இந்தியா - மலர்ந்திருந்தது. பொதுத்தேர்தல்கள் மூலம், மக்கள் செல்வாக்குப் பெற்றவர்கள் கோட்டையில் கோலோச்சும் அதிகாரம் பெறலாம் என்ற சூழ்நிலை அவர்களுக்கு ஆசை மூட்டியது. காங்கிரஸ் மட்டுமே அன்று அனைவரும் அறிந்த அரசியல் கட்சி. பெரியாரோ சனநாயகத்திற்கு, தேர்தலுக்குத் தான் எதிரி என அறிவித்துக்கொண்டவர்.

இந்தச் சூழ்நிலையில்தான் பெரியாரின் பொருந்தாத திருமணம், மணியம்மையாருக்கு கழகத்திலும் மகுடம் சூட்டியது இயக்கத்

தலைவர்களிடையே கசப்பை ஊட்டியது; கழகத்தில் பிளவை மூட்டியது. அப்பொழுது பெரியாரை அடுத்துத் தலைமைக்குரிய தகுதியும் அனைவரையும் அரவணைக்கும் அன்புள்ளமும், ஆழமான அறிவும், அடக்கமான பண்பும் உடையவராகத் திகழ்ந்த 'அண்ணா' இளந்தலைவர்களுக்கு முன்னவராக, முதல்வராக, அண்ணனாக அறியப்பட்டார். சமநிலைச் சமுதாயம் காணும் பெரியார் குறிக்கோளைப் பெரியாரிலும் பெரிதாக ஏற்றிருந்த அண்ணா, அந்தக் குறிக்கோளை வெற்றியாக்க அரசியல் நுழைவும், ஆட்சி உரிமையும் அடித் தளமமைக்கும் என நம்பியிருந்தார். பாமர மனிதனும் பட்டப்படிப்பாளியும் ஏற்றுப் போற்றத்தக்க இளந்தலைவராக விளங்கிய அண்ணா தலைமையில் 'கண்ணீருடன் பிரிகிறோம்' என்ற முன்னுரையுடன் திராவிட முன்னேற்றக் கழகம் பிறந்தது.

# பெரியாரியச் சாதனைகள் சமுதாயம்

## அரைஞாண் கயிறு

கேவலம் ஒரு கருப்புக் கயிறு, இடுப்பில் கட்டுவது (அரை - இடுப்பு, ஞாண் கயிறு) இதைக் கட்டிக்கொள்வதற்குக்கூட சூத்திரனுக்கு தாழ்த்தப்பட்டவனுக்கு உரிமையில்லை, பார்ப்பான் - பட்டு நூல்கயிறு, சத்திரியன் - பருத்தி நூல்கயிறு, வைசியன் - நார்க்கயிறு கட்டிக்கொள்ளலாம். இதுதான் பெரியாருக்கு முன்னிருந்த வருணாசிரமச் சமுதாயம். அற்பத்தனமான இந்தக் கயிற்றைக் கூடக் கட்டுவதற்கு உரிமையில்லாத அடிமை நிலை அன்றிருந்தது என்பதை நினைத்துப் பார்த்தால்தான் பெரியார் தொண்டின் பெருமை இன்றையத் தமிழனுக்கு - நிமிர்ந்து நடக்கிறானே நெஞ்சை நிமிர்த்தியபடி - தன்மானத் தமிழன் - அவனுக்குப் புரியும்.

'இந்தியனும் நாயும் உள்ளே நுழையக் கூடாது'

என ஆங்கிலேயர்கள் தங்கள் கேளிக்கை விடுதி வாயிலில் அறிவிப்பு வைத்திருந்தார்கள். சென்னையில் அன்று. குற்றாலம் அருவியில் தமிழன் குளிக்கத் தடையிருந்த அந்நியராட்சிக் காலமும் நாம் கண்டதுதான். இவற்றை மாற்றப் போராடிய நாட்டுப் பற்றாளரை, விடுதலைப் போராட்ட வீரரை நாம் மதிக்கிறோம், போற்றுகிறோம். ஆனால் நம் நாட்டில், நம்மைப் போன்ற சக மனிதனை 'இங்கு நடக்காதே! இங்கு நிற்காதே, இதை அணியாதே' எனக் காலங்காலமாகத் தடுத்து வந்ததையும் தடுக்கப்பட்டிருந்ததையும் ஏற்றுக் கொண்டிருந்த இழி மனம் யாரால் மறைந்தது? பெரியார் பிறப்பால்தானே!

## கானா ஊர் கல்யாணமா?

ஏசு கிறித்துவின் பிறப்பு, முகமது நபியின் வருகை எனத் தேவ குமாரனாகவோ, இறைத் தூதராகவோ விண்ணிலிருந்து இறங்கி வந்தவர் இல்லை பெரியார். அவர் மண்ணில் பிறந்ததுவே உண்மை. உயிர் நீத்து மண்ணில் புதையுண்டு மறைந்ததும் முழு உண்மை. ஆனால் அவர் சமுதாயத்தில் நிகழ்த்திக் காட்டிய அற்புதங்கள், ஏசு நிகழ்த்திய கானா ஊர் கல்யாண விருந்தல்ல! முகமது நபி தொட்டு உலுக்கிய பேரீச்சம்பழத்தோட்டமல்ல, உண்மை. முழு உண்மை.

குட்டக்குட்டக் குனிந்து புன்மைத் தேரையாய் புதைந்திருந்த மனிதன் சமுதாயத்தில் எழுந்து நின்றான். கட்டியிருந்த கைகளை உதறினான். கால்களை விரித்து நின்றான். பக்கத்து மனிதனின் தோளில் பரிவுடன் கைவைத்துத் தோழமை கொண்டான். இவ்வாறு கல்வி நிலையங்கள், கடைத் தெருக்கள், பேருந்து, தொடர் வண்டிப் பயணங்கள், உணவு விடுதிகள், ஓய்வு இல்லங்கள், எங்கும் வேறுபாடு இல்லாமல் கலந்து பழகும் சமுதாயத்தை உருவாக்கியது பெரியார் பணிதானே!

முதன்முறை சென்னை வந்த காந்தியார், சீனிவாச சாஸ்திரியார் வீட்டுத் திண்ணையில் அமர்த்தப்பட்டார். இரண்டாது முறை வந்தபோது வீட்டுக் கூடத்திற்கு அழைக்கப்பட்டார். வெளியே வந்த காந்தி செய்தியாளரிடம், இந்த முன்னேற்றத்திற்குப் பெரியாருக்கு நன்றி தெரிவிப்பதாகச் சொன்னார். காந்தியாருக்கே சமுதாய மதிப்பைப் பெற்றுத் தந்தவர் பெரியார்தானே.

## சாதி வாலற்ற சமுதாயம்

ஒன்றாயிருக்கும் உடன் பிறப்பாளர்க்கிடையே கூடப் பேதம் உண்டாக்கிப் பிரித்தாளும் சூழ்ச்சியால் நாட்டையே பிடித்துக்கொண்டவன் ஆங்கிலேயன் என்பார்கள் வரலாற்றாளர்கள். மனிதக் கூட்டத்திற்குள் தம் மேலாண்மை ஆதிக்கத்தை நிலை நாட்டத் தொடங்கிய குறுக்குப்புத்தியாளர்களும் மனிதனைப் பிரித்துப் பிரித்துத் தானே வைத்திருக்கிறார்கள். அதற்கு அடையாளமாகத்தானே பெயருக்குப் பின்னால் வன்னியர், கவுண்டர், செட்டியார், முதலியார் என வேறு வேறு வால்களைத் தொங்கவிட்டிருந்தார்கள். கலப்புத் திருமணம் செய்துகொண்டால் கூட இருந்த வாலை அறுப்பதற்குப்பதில் இரட்டைவால் கட்டினார்களே!

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னர் கூடப் பார்ப்பான் ஒருவன் தமிழன் ஒருவனை விளிக்கும்போது ஓய் தேவரே, ஓய் நாடாரே என்று தான் அழைப்பான். நம் சாதிவால் அறுந்து விடாமல் ஒட்ட வைக்கும் வேலை - நாடார் வேறு, தேவர் வேறு எனப் பிரித்து வைக்கும் வேலை இது. அதிலும் இன்னொரு கொடுமை, பத்து வயதுப் பார்ப்பான், ஐம்பது வயதுத் தமிழரைக் கூட நீ,வா,போ என்று ஒருமையில் அழைத்துத் தன் உயர்வாண்மையை நிலை நிறுத்தினான். எனவே தான் பெரியார் ஒரே வெட்டில் தமிழனின் சாதி வாலை முழுமையாக வெட்டி எறிந்தார். சாதி வால் இல்லாத தமிழ்ச் சமுதாயம் பெரியார் உருவாக்கியது தானே. இன்றும் வட இந்தியாவில் உள்ள யாதவ், குப்தா, சட்டர்ஜி, பண்டிட் என்ற அனைத்துமே சாதிவால்கள் தான். பெரியார் வெட்டிய வெட்டில் தமிழ்நாட்டுப் பார்ப்பனரின் சாதிவாலும் சேர்ந்து அறுந்து விட்டதே!

## கண் கண்ட கடவுள் மோசடி

இது ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் நடந்த நிகழ்ச்சி. ஒரு ஆங்கில அதிகாரி தன் பணியாளுடன் (PEON) நடந்து வந்து கொண்டிருந்தார். அந்தப்

பணியாளர் பார்ப்பனர். எதிரில் அந்த ஆங்கில அதிகாரியின் அலுவலக உதவியாளர் (P.A) ஒருவர் வந்தார். அவர் நாயுடு வகுப்பினர். தன் அதிகாரியை எதிரில் கண்ட உதவியாளர் அவருக்கு வணக்கம் சொல்லியபடி அவருடன் கை குலுக்கினார்.பின்னர் அருகில் நின்ற பார்ப்பனப் பணியாளர் கால்களைத் தொட்டுக் கண்களில் ஒத்திக் கொண்டார். ஆங்கில அதிகாரி திடுக்கிட்டார்.வியப்புடன் வினவினார்.

'நான் உன் மேலதிகாரி, என்னுடன் கை குலுக்கி விட்டு நம் பணியாளன் காலைத் தொடுகிறாயே! இது ஏன்?' என்றார். அலுவலக உதவியாளர் சொன்னார்.

'நீங்கள் எமது அதிகாரியா‚ ‍ ‍ஹும் மிலேச்சர் அன்றோ. அவரோ, பிராமணர். அவரை வணங்க வேண்டியது எனது கடமை' என்றார்.

இந்தச் செய்தியை எழுதியிருப்பவர் R.S.S இயக்கத் தலைவரான கோல்வால்கார். (ஆதாரம்: M.S.GOLWALKER,BUNCH OF THOUGHTS) இந்தச் செய்தி மூலம், கோல்வால்கார்,பிராமணர்களின் பெருமையை எடுத்துக்காட்டியுள்ளார் என்பது தான் வியப்பான செய்தி.ஆனால் நமக்கோ,நம்மை எந்த அளவு அடிமுட்டாள் ஆக்கி வைத்திருந்திருக்கிறார்கள் என்ற ஆத்திரமும் நாம் எந்த அளவு அடிமை நிலையில் மூழ்கிக் கிடந்துள்ளோம் என்ற அவமானமும் புரிகிறது. புரிய வைத்தவர் யார்? என்று புரிந்தால் போதும்.

## அறியாமை, வறுமை அகன்ற சமுதாயம்

பெரியாரின் சமுதாயப் புரட்சியால் தாழ்த்தப்பட்ட,பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்குக் கல்வி நிலையைக் கதவுகள் திறக்கப்பட்டன. கல்வி, அவர்களிடம் முடங்கிக் கிடந்த மூட நம்பிக்கை முடை நாற்றத்தைப் போக்கியது. ஆண்கள் மட்டுமல்ல,பெண்களும் கற்றால் தான் களர் நிலமான குடும்பங்கள் பல்கலைக் கழகமாகும் எனப் புரிந்தது. அறியாமை அகன்றதால் வறுமையும் படிப்படியாக விடை பெற்றது. ஒடுங்கிக் கிடந்தவர்கள் உயர்வு பெறத் தொடங்கினர். அரசுப் பணி, தொழில்கள், வணிகம் எனத் துறைதோறும் தமிழர் தலைதூக்கினர்; தாழ்வு நீங்கினர். பெரியார் அமைத்துத் தந்த வகுப்பு வாரி உரிமை என்ற படிக்கட்டு, அவர்களின் வாழ்வில் படிப்படியாக உயர முதற்படியாயிற்று. கல்வி அறிவும் பொருளாதார உயர்வும் மக்களிடையே சமநிலையையும், பொதுநிலையையும் உருவாக்கியதால் காதல் திருமணம், சாதி மறுப்புத் திருமணம் ஆகியவை சுயமரியாதைத் திருமணமாகத் தமிழ்ச் சமுதாயத்தைப் பிணைத்தது.

# பெரியாரியச் சாதனைகள் அரசியல்

## பார்ப்பனத் தலைமைக்கு முடிவு

அக்காலத்தில் இந்திய அளவில் பொதுவுடைமைக் கட்சி உட்பட அனைத்து அரசியல் கட்சிகளிலும் பார்ப்பனர்களே பெரும்பாலும் தலைமையிடங்களில் இருந்தனர். எனவே ஊராட்சி முதல் குடியரசுத் தலைவர் வரை பார்ப்பனர்களே பதவி வாய்ப்புக்களை மிகுதியாய்ப் பெற்றிருந்தனர். கல்வியிலும், அரசுப் பணிகளிலும் தமிழர் இடம் பெறப் பெரியார் பெற்றுத் தந்த இடஒதுக்கீட்டு உரிமை.இயல்பாகவே ஆட்சியிலும் அரசியலிலும் பார்ப்பனத் தலைமைக்கு முடிவு கட்டியது. இட ஒதுக்கீட்டால் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் 50% வரை இடம்பெற்று மருத்துவர், பொறியாளர், பேராசிரியர், நீதியரசர், ஆட்சித்தலைவர் என முன்னேறத் தொடங்கிய இக்காலக் கட்டத்தில் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும், மத்திய, மாநில அமைச்சர்களாகவும் அரசியல் கட்சிகளின் மாநில, மாவட்டத் தலைவர்களாகவும் உரிமை பெற்றனர்.

### சட்ட உரிமைகள்

சென்னை மாநிலம், தமிழ் நாடு மாநிலமாயிற்று. இன்றும் என்றும் இந்திக்கு இடமில்லை என்ற நிலை வந்தது. தீண்டாமைக்கு எதிராகக் கடுமையான சட்டங்கள் இயற்றப்பட்டன. சுயமரியாதைத் திருமணம் சட்டப்பாதுகாப்புப் பெற்றது. வழிபாட்டு இடங்களில் அனைவருக்கும் சம உரிமை மட்டுமல்ல, வழிபாடு நடத்துவதிலும் (அர்ச்சகராதல்) அனைவருக்கும் சம உரிமை வழங்க அரசாங்கம் முன் வந்தது. பெண்ணுரிமை, பெண்ணுக்குக் கல்வி உரிமை, பெண்ணுக்குச் சொத்தில் உரிமைச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அரசியலிலும் ஆட்சியிலும் பெண்ணுக்கு இட ஒதுக்கீடு வழங்கும் வகையில் அனைத்து அரசாங்கங்களிலும் பெரியாரின் தாக்கம் பதிந்தது. ஆண்களைவிடப் பெண்களே அதிக எண்ணிக்கையில் கல்வி பெறத் தொடங்கிய அளவு பெண்கள் பள்ளி, பெண்கள் கல்லூரி, மகளிர் பல்கலைக் கழகங்கள் எழுந்தன. அனைத்து வகைத் தேர்வுகளிலும் ஆண்களை விடப் பெண்களே அதிகம் பேர் வெற்றி பெற்றனர்; முதலிடம் பெற்றனர். காவல்துறையிலும், பாதுகாப்புத்துறையிலும் கூட பெண்கள் தங்கள் ஆண்மையை வெளிப்படுத்தினர்.

# பெரியார் மறைவுக்குப் பின் திராவிடச் சமூக இயக்கங்கள்

## 40 ஆண்டுகாலத் தாழ்ச்சி நிலை

1973 - பெரியார் மறைவுக்குப் பின் இன்று வரை (2014) பெரியார் கண்ட *திராவிடர் கழகத்தின் நிலை, பெரியார் இயக்கத்தின் அரசியல் பிரிவாய் ஆட்சிப்* பொறுப்பேற்ற திராவிடக் கட்சிகளின் நிலை, பெரியாரால் எழுச்சி பெற்றிருந்த தமிழ்ச் சமுதாயம் பெரியாருக்குப் பின் அடைந்த நிலை ஆகியவற்றை ஆய்வு செய்யப் புகுந்தால் இன்று தமிழர் நிலை தாழ்ச்சியைத்தான் அடைந்திருக்கிறது என்பதே கசப்பான உண்மை.

## திராவிடர் கழகம் - சொத்துக்காப்புக் கழகம்

சேர்ந்து வாழத் தெரியாத குணம் எப்படியோ நம்மினத்தின் சொத்தாகிவிட்டது. ஓரிடத்தில் சொத்தும் இருந்தால் கேட்கவா வேண்டும்? பிளவு உறுதிதான். இரண்டு தமிழறிஞர்கள் இருந்தால் அவர்களிடம் மூன்று பிரிவுகள் இருக்கும் எனப் பெரியார் வேடிக்கையாகச் சொல்வார். அதுபோல் பெரியாருக்குப் பின்னர் திராவிடர் கழகங்கள் பிரிந்து, பிரிந்து பல கழகங்கள் ஆயின. பெரியாரின் அறிவுசார் சொத்துரிமைக்கே சொந்தம் கொண்டாடுபவர்கள் பொருள்சார் சொத்துரிமையில் முரண்படுவது இயல்புதானே! திராவிடர் கழகம் பெரியாரின் சொத்துக் காப்புக் கழகமாகவும் சொத்து வளர்ப்புக் கழகமாகவும் வளர்ச்சி பெற்றது. பெரியார் பெயரில் பல்கலைக்கழகங்கள் முதலிய வணிக வளாகங்கள் வளர்ந்தன. பெரியார் - திடலின் ஒரு மூலையில் அமைதி காத்தார்.

## முதியோர் இல்லம்

பெரியாரின் எழுச்சிக் காலத்தில் இளைஞராய் இருந்து இன்று எஞ்சியிருப்போரின் முதியோர் இல்லமாகத் திராவிடர் கழகம் முடங்கியது. இன்றைய இளைஞனை வழிப்படுத்தும் ஈர்ப்பினைக் கழகம் இழந்துவிட்டது. சிற்றூர்களில் திராவிடர் கழகப் பரப்புரைக் கூட்டங்கள், படிப்பகங்கள் மறைந்து

போய்விட்டன. தேநீர் நிலையத்தில், முடிதிருத்தகங்களில் விடுதலை இதழை ஏந்தியபடி வீரமுழக்கமிட்ட கருப்புச் சட்டைக்காரன் காணாமல் போய்விட்டான்.

## போராட ஆயிரம் காரணங்கள்

புதுப்புது வடிவு கொள்ளும் சாதிப்பேய், பொருட்செல்வத்தைக் குவித்துக் கொண்டிருக்கும் போலிச் சாமியார்கள், நவீன மூடநம்பிக்கைகள், பொய்க் கல்விக் கூடங்கள், பொங்கி வழியும் மது - புழுவாய் நெளியும் இலஞ்சம், ஊழல் என புதைச் சேற்றில் சிக்கியிருக்கும் தமிழ்ச் சமுதாயத்தைத் திருத்தவும், ஆட்சியாளரைத் தட்டிக் கேட்கவும் ஆயிரம் காரணங்கள் இருக்கத்தான் செய்கின்றன. ஆனால் பெரியாரியத்திற்காகப் போராடத்தான் ஆள் இல்லை. போராட்ட உணர்ச்சி ஊட்டப்படவும் இல்லை. நேற்றையச் சமுதாயத் தீமையைப் பெரியார் திருத்தினார்; இன்றையச் சமுதாயத் தீமைகளைத் திருத்தப் போராடுவதும் சிறை செல்வதும் பெரியாரியத் தொடர் பணி என்ற உணர்வு எழவே இல்லை. காலையில் சிறை, மாலையில் விடுதலை என்ற சனநாயக வளர்ச்சியின் புதிய சிறை வாசம் ஏற்கவும் எவருக்கும் துணிவில்லை, நேரமும் இல்லை.

## தமிழகத்தின் தலையாய பிரச்சனைகள்

காவிரி, பெரியாறு போன்ற நீர்ப்பங்கீட்டுச் சிக்கல்கள், சேதுத் திட்டம், இலங்கை அரசால் எழும் மீனவர் வாழ்வாதாரப் பாதிப்பு, ஈழப்படுகொலை எனத் தமிழினத்திற்கு இன்று எழுந்துள்ள சோதனைகள் எண்ணிலடங்கா. வாக்கு அரசியலும் வணிக அரசியலும் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் திராவிட அரசியல் கட்சிகளை நம்பிப் பயனே இல்லை. இன்றும் தமிழினம் காக்கும் பொறுப்பும் கடமையும் பெரியார் கண்ட திராவிடர் கழகத்திற்குத் தான் உண்டு. ஆனால் தமிழகத்தின் தலையாய சிக்கல்களில் கூட நூறு பேர் திரளும் மனிதச் சங்கிலி, பத்துப் பேர் கூடும் பாதை மாறியலுடன் தன் சமுதாயக் கடமையை முடித்துக்கொள்கிறது திராவிடர் கழகம்.

## ஈழப்படுகொலை - நம் இழிமான நிலை

பக்கத்து வீட்டில் நம் தமிழினம் முற்றாக அழிக்கப்பட்டுக் கொண்டிருந்த நிலையில் இங்கு பதவி அரசியல் நடத்திக்கொண்டிருந்த தூய திராவிட அரசியல் வாதிகள், நீலிக்கண்ணீர் நாடகத்துடனும் நீண்ட உண்ணா நிலைகளுடனும் தங்கள் எதிர்ப்பை நிறுத்திக்கொண்டார்கள். ஆனால் பெரியாரால் மானமும் அறிவுமுடையதாக மாற்றப்பட்ட சுயமரியாதைச் சுடர்களாவது பொங்கி எழுந்திருக்க வேண்டாமா? தமிழ் மண் போர்க்களமாகியிருக்க வேண்டாமா? 'இருப்பது ஓருயிர் - இறப்பதும் ஓர்முறை - அது என் இனிய திராவிட இனத்திற்காகவே இறந்துவிட்டுப் போகிறேன்' என எழுதிய வசனங்களைச் செயற்படுத்த இளைஞர் படையை ஈழத்தை காக்கத் திரட்டியிருக்க வேண்டாமா? கள்ளத் தோணிகள் கூடக் கண்ணில் படவில்லையா?

தமிழ் நாட்டில் எழும் போராட்டங்கள் மூலமாக மத்திய அரசை நமக்கு இசைவாக்க அசைத்துப் பார்த்திருக்க வேண்டாமா? ஈழத் தமிழன் உயிர்காக்க மீண்டும் அமைதிப்படை அனுப்பப்பட்டிருக்க வேண்டாமா? பெரியார் திடலை விற்றுக் கூடப் போராடித் தோற்றிருக்கலாமே. இன்று பெரியார் இருந்தால் இந்த இழிமான நிலையைப் பார்த்துக்கொண்டிருப்பாரா? இன்றும் தமிழனுக்குப் பெரியார் ஊட்டிய உணர்ச்சி இருந்தது... வேகம் இருந்தது... வெறியும் இருந்தது. ஆனால் அவனை ஒன்று திரட்டப் போர்க்குணங்கொண்ட தலைமையோ, இயக்கமோ இல்லாததால்... அவன் அழுதழுது ஆற்றிக்கொண்டான்; தனித்தனி மரமாய் நின்று தவித்து ஓய்ந்தான்.

## பெரியார் பிறந்த நாள் - நினைவு நாள்

பெரியார் வாழ்நாளில் அவரது பிறந்த நாள், அடுத்த பிறந்த நாள் வரும் வரை ஒவ்வொரு ஊராக நடந்து கொண்டேயிருக்கும். பிறந்த நாள் விழா என்பது பொன்னாரங்கள் சூட்டுவதும் புகழ்ந்து புகழ்ந்து பேசுவதுமா? இல்லை, இல்லை. கொள்கை விளக்கக் கூட்டங்கள் தாம் அவை. பிறந்தநாள் பரிசுகள் ஆடு மாடாகக் கூட இருக்கும். இயக்கத்தை வலுப்படுத்தும் நிதிக்காக அவை அங்கேயே ஏலம் விடப்படும். பொது நிதியைக் கையாளுவதிலும் கடுங்கஞ்சர் பெரியார்.

சிற்றூர்களிலுள்ள சிவன் கோயில்களில் நித்திய பூசைகள் நடத்தப்படுவதைப் பார்த்திருக்கிறீர்களா? ஒற்றை அழுக்குப் பார்ப்பான் - கழும்பேறிய ஒரு கரிச்சட்டியில் நைவேத்தியம் - ஒரு நொண்டி மேளக்காரன் - நாதசுரச் சக்கரவர்த்தியும் அவனே - திருடர் இருட்டுக்குகை போன்ற கருவறை - மாமியார் செத்து மருமகள் அழுவது போன்ற மந்திர ஒலி - வாந்தி வரவைக்கும் வௌவால் நாற்றம் - நான்கு வேளைப் பூசையும் கடனே என நடக்கும். இன்று பெரியார் பிறந்த நாளுடன் நினைவு நாளும் சிவன் கோயில் பூசையாக நடக்கிறது. திராவிடக் கழகத்தார், எண்ணற்ற 'திராவிட'க் கட்சிகள், தமிழக அரசு; ஏதோ நடத்துகிறார்கள். யாருக்கு நடக்கிறது? என்று தெரியாமல் நடக்கிறது. தமிழ் நாட்டில் நாயும் பேயும்கூட ஆளுக்கு நான்கு தொலைக்காட்சி அலைவரிசை நடத்துகிறார்கள். பெரியாரியம் பரப்ப ஒரு அலைவரிசை ஏற்படுத்தக் கூடத் திராவிடர் கழகங்களின் தரித்திரம் இடங்கொடுக்கவில்லை போலும்.

## சுரண்டப்பட்டது சுயமரியாதைச் சுண்ணாம்பு

இந்த இயக்கங்களில் பெரியார் தீட்டிய சுய மரியாதைச் சுண்ணாம்பாவது இன்னும் ஒட்டிக்கொண்டிருக்கிறதா என்று பார்த்தால் சுத்தமாகச் சுரண்டிவிட்டார்கள். எந்தச் சனநாயக நடைமுறைகளும் இல்லாத கழகங்கள்... இல்லை.... கம்பெனிகள் ஆகிவிட்டன. நிரந்தரத் தலைவர்கள் -

வாரிசுரிமைகள், தலைமை வழிபாடு இங்கும் வழிமுறையாகி விட்டது. சமுதாயத்தில் பெரியார் கொள்கைகளுக்கிருந்த செல்வாக்கு குறைந்துகொண்டிருக்கும்பொழுது தாங்கள் சமுதாயச் செல்வாக்குப் பெற அரசியல் கழகங்களுக்கு வால் பிடித்துக் கால்பிடித்துப் பிழைப்பது தான் இவர்கள் பகுத்தறிவுப் பணி.

## முடங்கிப்போன மூட நம்பிக்கை ஒழிப்புப்பணி

பெரியாருக்குப் பின்னும் மூடநம்பிக்கை ஒழிப்புப் பணி முனைப்புடன் செயல்படுத்தப் பட்டிருந்தால் தமிழகத்தில் இன்று பக்தி இயக்கம் இந்த அளவு வெறித்தனமாக வளர்ந்திருக்குமா? பக்திச் சுற்றுலாக்கள், பாதயாத்திரைகள் எனத் தமிழரில் பாதிப்பேர் ஆண்டில் பாதி நாட்கள் கோவில் கோவிலாய் சுற்றத் தொடங்கிவிட்டனர்; தொலைக்காட்சிகளின் தூண்டுதலால் புதுப்புதுக் கோயில்கள், பூசைகள், திருவிழாக்கள் நடந்த வண்ணம் உள்ளன. ஊர் ஊராய்ப் போலிச் சாமியார்கள் முதலில் கோவில் கட்டுகிறார்கள்; உடனே கல்லூரி கட்டுகிறார்கள். மறுநாள் பல்கலைக்கழக வேந்தர் ஆகிவிடுகிறார்கள். எங்காவது பெரியார் இயக்கத்தார் எவராவது இதை எதிர்த்திருக்கிறார்களா? மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஊட்டியிருக்கிறார்களா? மனைவியரை அனுப்பிப் போலி மகான்களுக்குப் பாதபூசை செய்கிறார்களோ என்னவோ?

# பெரியார் மறைவுக்குப் பின் திராவிட அரசியல் இயக்கங்கள்

## புதிய கட்சியும் பழைய பற்றும்

'ஒன்றே குலம்'

என்றார் பெரியார். அது அவர் கண்ட சமூக இயல்.

'ஒன்றே குலம்,ஒருவனே தேவன்'

என ஒட்டு வேலை செய்தார் அண்ணா - அது அவர் கொண்ட அரசியல் நழுவல் ஒட்டு வேலை.

'பிள்ளையாரை உடை'

சமூக விடுதலைக்குப் பெரியார் கொடுத்த நெருக்கடி

பிள்ளையாரை உடைக்க மாட்டேன்; பிள்ளையாருக்குத்
தேங்காயும் உடைக்க மாட்டேன்

இது அண்ணாவிற்கு ஏற்பட்ட அரசியல் நெருக்கடி

அடைந்தால் திராவிடநாடு;
இல்லையேல் சுடுகாடு

இது பெரியார் கண்ட தி.க.

'மத்தியில் கூட்டாட்சி:
மாநிலத்தில் சுயாட்சி'

இது அண்ணா கண்ட தி.மு.க.

இப்படித் தொடங்கியதுதான் திராவிட அரசியல் இயக்கம். பெரியார் இருக்கும்வரை - அண்ணா இருக்கும் வரை தி.மு.க.வில் பெரியாருக்காக தலைவர் நாற்காலி காத்திருந்தது. சமுதாய விடுதலைப் போரில் இரு கழகங்களும் இரட்டைக் குழல் துப்பாக்கி; இந்த ஆட்சியைப் பெரியாருக்குக் காணிக்கை ஆக்குகிறோம் என்றெல்லாம் முழங்கினார்கள்.

புதிய கட்சி கண்ட பின்னரும் பகுத்தறிவும் சுயமரியாதையும் பழைய பற்றாக ஒட்டிக்கொண்டுதான் இருந்தன. தி.மு.க. தோன்றிய பொழுது அந்தக் கட்சியில் இருந்தவர்கள் நூறு விழுக்காடும் நாத்திகர்கள்தாம்; பார்ப்பன எதிர்ப்பாளர்கள் தாம்; சுயமரியாதைக்காரர்கள்தாம். இது மறுக்கமுடியாத உண்மை. ஆனால் புதிய வெள்ளம், பழைய வெள்ளத்தை அடித்துப் போனது போல அரசியலில் எழுந்த ஆழிப்பேரலைகளில் பெரியாரியம் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது.

## பற்பல தி.மு.கழகங்கள்

வழக்கம் போல் தி.மு.க.வும் பலப்பல கட்சிகளாக உடைந்தது - 'திராவிட' என்ற ஒட்டு, ஒட்டிற்காக யாவருக்கும் தேவைப்பட்டது. 'பார்ப்பானையும் பாம்பையும் கண்டால் பார்ப்பானை முதலில் அடி' என்று பெரியாரே விரும்பாத வன்முறை ஒலியாக வெறுக்கப்பட்டிருந்த பார்ப்பானுக்குப் பெரியார் இயக்கம் உறுப்பினர் சீட்டுக்கூடத் தர மறுத்தது பழைய காலம். இன்று கட்சியை - தலைமையையே - தந்துவிட்ட புதுத் திராவிடக் காலம். தனிமனித முரண்பாடுகளை மட்டுமே கொள்கையாகக் கொண்டு இரண்டு திராவிடக் கட்சிகள் இன்று மாறி மாறித் தமிழகத்திற்குத் தலைமை தாங்குகின்றன. பெற்ற ஆட்சியைத் தக்க வைக்க எதுவும் செய்யலாம்; இழந்த ஆட்சியை மீண்டும் பெற எதுவும் செய்யலாம், எனப் 'பதவிக்காக எதுவும் செய்யலாம்' என்பது இவர்கள் பாடம். சொத்துச் சேர்ப்பு முயற்சிகளும் சொத்துக் குவிப்பு வழக்குகளும் இவர்களுக்குப் பொழுது போக்குகள். மூன்றெழுத்தில் இவர்கள் மூச்சிருக்கும். அது பதவி - பதவி - பதவி. பெரியார் ஊட்டிய சுயமரியாதை உணர்வையும் தன்மான நெறியையும் 'இலவசம்' என்ற புதை குழியில் போட்டு மூடியதுதான் இவர்கள் செய்த விலையில்லாப் பகுத்தறிவுப்பணி. ஆட்சிமொழிச் சட்டப்பிரிவு 17ஐக் கொளுத்திய இந்தி எதிர்ப்புப் போராட்டத்தால் பதவிக்கு வந்த தி.மு.க. இதுவரை அச்சட்டத்தில் ஓரெழுத்தை மாற்றக் கூட முயற்சி செய்யவில்லை.

## கையூட்டும் ஊழலும்

திராவிடர் கழகத்திலிருந்து அரசியல் கட்சி அமைக்க ஒரு கூட்டம் வெளியேறிய சமயத்தில், பெரியார் கூறினார், 'பொறுக்கப் போய்விட் டார்கள்' என்று. ஓட்டுப் பொறுக்கப் போய்விட்டார்கள் என்று அந்தத் தொடரில் ஒட்டு வேலை செய்து நாகரிகப்படுத்தினார்கள் சிலர். உண்மையில் 'ஒட்டுப் பொறுக்க'த் தான் போய் விட்டார்கள் என்பதுதான் திராவிட அரசியல் கட்சிகளின் நாற்பதாண்டு நடைமுறையில் நாம் கண்கூடாகக் கண்ட உண்மை. அண்ணா முதலமைச்சரான முதலாண்டு முடிவதற்குள், ஒரு அமைச்சரவைக் கூட்டத்தில் மேல்துண்டால் தம் கையைத் துடைத்தபடியிருந்தாராம். 'என்ன அண்ணா,

துடைக்கிறீர்கள்?' என அமைச்சர் தம்பியர் கேட்டனர். அண்ணா சொன்னார், 'என் கைகள் கறையாகிவிட்டது போல் தெரிகிறது'.

இது 1968இல் நடந்ததாகச் சொல்லப்படும் உரையாடல் - கற்பனையாடலாகக்கூட இருக்கலாம். 40 ஆண்டுத் திராவிட கட்சிகளின் ஆட்சிக்குப் பின்னர் ஒரு அமைச்சரவைக் கூட்டம். கோட்டையையே வளைத்துள்ள முதலமைச்சர், தன் அமைச்சர் ஒருவரைப் பார்த்துக் கேட்கிறார். 'உன் ஊரிலுள்ள மலையைத் தவிர மற்றவை அனைத்தையும் வளைத்துவிட்டாயாமே!' இதுவும் எதிர்க்கட்சிக் கூட்டத்தில் எழுந்த நகைச்சுவைத் துணுக்காக இருந்து விட்டால் நல்லதே! ஆனால் இந்த நிகழ்வுகளில் காணப்படும் அடிப்படை உண்மை மறுக்கமுடியாததுதானே! பெரியார் உள் மனத்தில் பொதுவுடைமைச் சிந்தனையும் பூத்திருந்ததை எவரும் அறிவார்கள். எனவே பெரியாரியம் ஊழலுக்கும், கையூட்டுக்கும் எதிரானதே. பெரியார் மட்டுமல்லர், அண்ணா உயிருடன் இருந்திருந்தாலும் குட்டையில் ஊறிய மட்டைகளாக இவர்களை ஊழலில் ஊற விட்டிருப்பாரா?

## புதிய மானபங்கம்

பெரியார் உழுவால் பண்பட்ட தமிழ் மண் இது. எதிரியும் ஏற்றுக்கொண்ட உண்மை இது. நா நயமிக்க பெரியார் நாணயத்திலும் (பணம்) நாணயம்மிக்க நற்பண்பாளர் ஆவார். ஆனால் எதிரியாலும் வீழ்த்தமுடியாத பெரியார் கொள்கைகளை அவர் பெயரைச் சொல்லிக் கொண்டே அழிக்கும் கொடுமையை மிகப்பெரிய துரோகக்கும்பல் சுய லாபங்கருதிச் செய்து கொண்டிருக்கிறது. உலகத்திலேயே தன்னைத் தானே மானபங்கம் செய்யும் புதிய வரலாற்றை அச்சமில்லாமல் வெளிச்சம் போட்டுச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

## சாதியை அழித்தார் பெரியார், சாதியால் வாழ்கிறார்கள் இவர்கள்

1967 முதல் தமிழகத்தை என்றும் ஆளும் உரிமையை, வாரிசுரிமை, வைப்புரிமையாகப் பெற்று ஆட்சியையும் பங்காளிச் சண்டையையும் ஒரு சேர நடத்திக் கொண்டிருக்கும் திராவிடக் கட்சியினர் சாதியற்ற சமுதாயத்தை உருவாக்க ஏதாவது செய்திருக்கிறார்களா? சாதி அரசியல், வலுத்த சாதிக்கே ஆதரவு, போலி மதச்சார்பின்மை, மதவாதக் கட்சிகளுடன் கூட்டு என்ற பொருந்தா உறவு கொண்டனர். பெரியார் கொன்று புதைத்த சாதிப் பிணங்களை மீண்டும் தோண்டி எடுத்துச் சொந்தம் கொண்டாடும் இவர்களா பெரியார் வழியினர்? சாதியைக் காட்டித் தேர்தல் வெற்றிபெற இவர்கள் எத்தனையோ கொள்கை மறவர்களைத் தூக்கிலிட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

திராவிட ஆட்சியில் சாதிச் செல்வாக்கு உடையவர் பெரியாரையும், ஏன், அண்ணாவையும் தெரியாமலேகூட அமைச்சராகி விடலாம். கயவனோ! காமுகனோ! அடிமுட்டாளோ! அயோக்கியனோ! கவலை யில்லை - அவன் அந்தப் பகுதியில் அதிகமாக, ஆதிக்கமாக உள்ள சாதிக்காரனா? அவனை மாவட்டச் செயலாளர் ஆக்கு; மந்திரியாக்கு என்ற கோட்பாடுதானே கொள்கையாகிவிட்டது. அடுத்த முதல்வர், ஆறாவது முறை முதல்வர், சாகும்வரை முதல்வர், நிரந்தர முதல்வர் என்ற உயர்ந்த குறிக்கோளின் முன்னர் சாதியாவது, சமுதாயமாவது... வெங்காயம்.

## சுயமரியாதை இழப்பு

தமிழனுக்குச் சுயமரியாதையை அறிமுகப்படுத்தியவர் பெரியார்தான். ஆனால் இன்று பொய்யான புகழுரைகள், போலிப்பணிவு, காலில் விழும் கலாச்சாரம், தலைவர்க்கு மட்டுமல்ல, அவர்வீட்டு நாய்க்கும் அடிபணிவது, தன் இடத்தைத் தக்க வைக்கத் தன்னையும் தன் மனைவியையும் கூட விற்கத் துணிவது, இன்று வழிவழி வழக்கமாகி விட்டது. சுருக்கமாகச் சொன்னால் சுத்தமாகச் சுயமரியாதையை இழந்துவிட்டார்கள்.

## சுரண்டுவலதத் தொழிலாக்கியவர்கள்

கட்சியில் சேர்வதையும் ஒரு வணிகம் தொடங்குவதுபோல் ஆக்கியவர்கள் திராவிடக் கட்சியினர் தாம். சிற்றூர்களில் கூட, தம் பிள்ளை அரசியலில் இருப்பதை ஒரு தொழில் செய்வதைப்போல் சொல்கிறார்கள். பிள்ளைகளும் ஆளுக்கொரு கட்சியில் இருந்துகொண்டு சுரண்டும் வாய்ப்பு எப்போதும் தம் குடும்பத்திற்கே வரும்படி பார்த்துக்கொள்கிறார்கள். கிளைச் செயலாளர் - V.A.O. நகரச் செயலாளர் - வட்டாட்சியர் - மாவட்டச் செயலாளர் - ஆட்சியர் என்பது போல் பதவி வரிசை ஏற்படுத்தி அதிகாரம் செலுத்துகிறார்கள். ஊரார் சொத்துக்களைக் கொள்ளையடித்துத் தங்கள் உடமையாக்கி அமைச்சரைக் கொண்டு திறப்பு விழா நடத்துகிறார்கள். சூரியன் உதிப்பதற்கும் இலைகள் அசைவதற்கும் மட்டுமே கையூட்டுத் தேவையில்லை. சிக்கன வாழ்விற்கடையாளமாக வாழ்ந்த பெரியார், ஆடம்பரமே அறியாத அண்ணா வழிவந்த இவர்கள் காதுகுத்து விழாவிற்குக் கூடக் கடல்மேல் பந்தல் இடுவார்கள்... ஊரான் காசைச் செலவழிக்க வலிக்காது அல்லவா?

## கல்வி வணிகம்

திராவிடக் கட்சியினர் தங்கள் பரம்பரைக்கும் வருமானம் பெறுவதற்குச் செய்த பாதுகாப்பு ஏற்பாடுதான் கல்வி நிலையங்கள் தொடங்குவது. மழலையர் பள்ளி முதல் மருத்துவக் கல்லூரி வரை ஒன்றோ பலவோ. வைப்பு வைத்திருப்பார்கள். இந்த விசயத்தில் நமது திராவிட அரசியல் கட்சிகளுக்கு இளைத்ததல்ல திராவிடச் சமூக இயக்கங்கள். அவர்களும் இந்தக் கல்வி

வணிகத்திற்குத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர்கள் தாம். அடுத்த ஆண்டில் இடம்பெற இந்த ஆண்டே அன்பளிப்புப் பெறுவது இவர்கள் சிறப்பியல்பு. அங்கே பழைய சுயமரியாதைக்காரனுக்குப் புதுச் சலுகை உண்டு; 'உட்காரவே சொல்லமாட்டார்கள்'.

## ஒழுக்கக் கேடுகள்

பொதுவாழ்வில் பெரியாரிடம் நேர்மையும் நாணயமும் இருந்ததால்தான் காந்தியார் போன்ற தலைவர்களாலும், இராசாசி போன்ற எதிரிகளாலும் அவர் மதிக்கத்தக்கவராக இருந்தார். ஆனால் அவர் வழி வந்தவர்களோ பொது வாழ்வில் ஒழுக்கக் கேட்டிற்கு உதாரணமானார்கள். கையூட்டு, ஊழலைத் தவிரவும் கட்சிமாறுவது, வாரிசு அரசியல், பொருந்தாத உறவுகள், சகிக்க முடியாத ஆடம்பரம், கட்சிக்குள் சனநாயக மறுப்பு, போலிக் கவர்ச்சித் திட்டங்கள், மட்டமான விளம்பர மோகம், நான் என்ற ஆணவம் - இப்படி சொல்லிக்கொண்டே போகலாம்.

# பெரியார் மறைவுக்குப் பின் சமுதாயச் சறுக்கல்கள்

## இன்னும் தொடரும் இடஒதுக்கீட்டுச் சிக்கல்கள்

இந்திய நடுவண் அரசின் 66 ஆண்டுகால ஆட்சியிலும் மாநில அரசுகளில் பொறுப்பேற்கும் எண்ணற்ற கட்சிகளின் ஆட்சியிலும் இடஒதுக்கீட்டுக்கு ஏற்பட்ட ஏற்ற இறக்கங்கள் எத்தனை எத்தனையோ! அரசியல்வாதிகளின் அப்போதைக்கப்போதைய ஓட்டு வங்கிக் கணக்குகளுக்கு ஏற்ப எத்தனையோ விதிமுறைகள்; விதி மீறல்கள் நடந்து கொண்டேயிருக்கின்றன. மிக உயர்ந்த பதவிகளைத் தங்களுக்குத் தான் ஒதுக்கிக்கொண்டிருக்கிறார்களே ஒழிய இட ஒதுக்கீட்டைக் காணோம். மாறிவரும் பொருளாதாரச் சூழலில் ஏற்பட்ட தனியார் துறை ஆதிக்கம் – மீண்டும் இட ஒதுக்கீட்டையே இல்லாததாக்கிக் கொண்டிருக்கிறது.

இட ஒதுக்கீட்டில் பயனடைந்த ஒரு கூட்டம் தங்கள் சாதியைக் கைவிட்டு உயர்சாதியுடனும் ஒட்டமுடியாமல் தவித்துப் புதுச்சாதி கண்டிருக்கிறது.

இன்னும் இட ஒதுக்கீடு தேவையா? எனச் சிலர் பழைய கேள்வியைப் புதுக்குரலில் கேட்கிறார்கள். இவ்வளவு இட ஒதுக்கீடு வாய்ப்புக் கொடுத்தும் பயன்படுத்தினார்களா? கையைக் கொடுத்தால் பற்றி மேலேறாமல் பள்ளத்திற்குள்ளே படுத்துறங்குகிறார்களே! எனப் பரிதவிப் பவர்களுக்கு இருக்கிறார்கள்.

இத்தனைக்கும் மேல் நம் நீதி மன்றங்கள், எவருக்கும் எங்கும் எப்போதும் நீதி ஒன்றுதான் என்ற நிலை மாறி ஊருக்கு ஏற்ற நீதி, ஆட்சிக்கேற்ற நீதி, ஆளுக்கேற்ற நீதி என எது நீதி என்பதையே புரிந்துகொள்ள முடியாமல் புது நீதி செய்துகொண்டிருக்கின்றன. இந்த நீதி மன்றங்களில் இடஒதுக்கீடு படும் பாடு, சமூக நீதி காக்க வந்தவர்களையும் தடுமாறவைக்கிறது.

2014ஆம் ஆண்டின் செய்தி இது. சென்னை உயர்நீதி மன்றத்தில் காலியாக இருக்கும் பத்து இடங்களுக்குப் பன்னிரண்டு பேர் கொண்ட பட்டியல் தயாரிக்கப்பட்டுப் பரிந்துரைக்கப்பட்டது அதில் ஒருவர்கூட பிற்படுத்த, தாழ்த்தப்பட்டவர் இல்லை. இதனால் நீதியரசர்களுக்கிடையே கருத்து மாறுபாடுகளும் மோதல்களும் எழுந்தன. இது எப்படி நேர்கிறது?

புதிய தலைமைச் செயலகமாகத் தொடங்கிய உயர் பல்நோக்கு மருத்துவ மனை நியமனத்தில் இட ஒதுக்கீடு இல்லை என்கிறது திராவிடப் பெயருடைய தமிழக அரசு. இது எப்படி முடிகிறது? தமிழ் நாட்டிலேயே இந்த நிலை என்றால் இந்தியாவில்? கேள்விக்குறிதான் பதில்.

## ஊடகங்களும் திரைப்படங்களும்

சர்க்கரை நோயையும், உயர் இரத்த அழுத்தத்தையும் தீர்க்கமுடியாத தொடர் நோய்கள் என்று மருத்துவமே கூறிக்கொண்டிருக்கிறது. உண்மையில் தமிழன் ஒவ்வொருவனையும் பற்றியிருக்கும் தீர்க்க முடியாத பெரு நோய்கள் ஊடகங்களும் திரைப்படங்களுமே. இன்று நோய் முற்றிவிட்டது. தொலைக்காட்சிக்கும் திரைக்காட்சிக்கும் தமிழன் அடிமை ஆகி விட்டான். தமிழனுக்கு அடிமைத்தனம் வாடிக்கைதானே!

இன்றையத் தொலைக்காட்சிகளில் சோதிடம், எண்கணிதம், வாஸ்து, மரகதக்கல், மகாலட்சுமி டாலர், ஹயகிரீவர் தாயத்து போன்ற பொய் விளம்பரங்கள், முந்திய தலைமுடித் தைலம், சாம்பு போன்ற போலி விளம்பரங்களையும் விஞ்சி விட்டன. கொலை செய்யும் மாமியார், குடி கெடுக்கும் மருமகள், கொலைக்காட்சியும் சிறைக்காட்சியும் காணாத பெண்களும், குடும்பமும் இல்லை என்னும் படி நடத்தப்படும் குடும்பத் தொடர்கள் நல்ல குடும்பங்களில் நஞ்சைக் கலக்கின்றன இந்த அவலங்களைத் தட்டிக் கேட்கப் பெரியார் கைத்தடி பிறிதொன்று இல்லையே! பெண் ஏன் அடிமையானாள்? என்று அன்று பெரியார் நூல் எழுதினார். இன்று ‘தொலைக்காட்சிப் பெட்டிக்குப் பெண் ஏன் அடிமையானாள்?’ என்ற தொலைக்காட்சி விவாதம் உடனடித் தேவை.

## ஏழைக்கு இரு போதைகள்

ஆங்கிலப் பள்ளிக்கூடம்,அரசு மதுக்கூடம் இன்றைய ஏழைக்கு இரு போதைகள் இவையே. இரண்டும் கூட்டம் நிறைந்த கூடங்கள் தாம். மனைவியின் தாலி,குடிக்க மட்டும் தான் பயன்படுமா? இன்றையக் கல்விக் கொள்ளையில் ஏழைகள் பல நேரங்களில் தாலியுடன் கூடிய சங்கிலியையும் விற்றுத் தான் பள்ளிக் கட்டணம் கட்டுகிறார்கள். ஆங்கிலப் பள்ளிகள் தாம், ஏழைத்தாய்மார்களின் கழுத்துச் சங்கிலியை அறுத்துப்பறிக்கும் கள்வர் கூட்டம். இதனால் தான் பெண்களுக்குத் தாலி வேண்டாம் என்று பெரியார் அன்றே எச்சரித்தார் போலும்.

வண்ணத் தொலைக்காட்சி முதல் சின்னக் கணினி வரை அரசு வழங்கிய விலையில்லாப் பொருட்களை விற்று அரசு மதுக் கூடங்களில் வழங்கும் ஏழைத் தமிழனின் நேர்மையை நாம் குடித்துத் தான் கொண்டாட வேண்டும். மேலை நாட்டான் குடிக்காமல் இருந்தால் குளிரில் செத்துவிடுவான். நம்மவனோ கொதிக்கும் வெயிலிலும் குடித்துச்9 சாகிறான். இவனை 24 மணி

நேரக் குடிகாரனாக்கிய பெருமை திராவிடக் கட்சிகளுக்கே உரியது. மது விலக்கிற்காகத் தன் தென்னந்தோப்பையே அழித்தவர். தன் குடும்பப் பெண்களைக் கள்ளுக்கடை மறியலுக்கு அனுப்பியவர் பெரியார். இன்று நம் குடும்ப ஆண்களை அரசு மதுக்கூடத்திற்குப் போக விடாமல் தடுக்கப் பெண்கள் மறியல் செய்வார்களா? பாவம்,அவர்களும் தொலைக்காட்சிப் போதையில் தலை சுற்றிக் கிடக்கிறார்களே!

குடிக்கும் ஏழையை அரசு மதுக் கூடம் கெடுத்தது. குடிக்காத ஏழையின் குடும்பத்தையே கெடுக்க வந்ததுதான் ஆங்கில வழிக் கல்வி. குடிக்குச் செலவழிப்பதை விடக் கல்விக்குச் செலவு செய்யும் தொகை ஏழைக்கு மிகப் பெரியது என்பதை யாரும் மறுக்க முடியாது. குடிபோதையில் தூங்கியவன் எழும் போது தெளிந்து விடுகிறான். ஆனால்,ஆங்கிலக் கல்வி என்ற போதை வயப்பட்ட ஏழைக்குடும்பம்... தெளியவே வழியில்லை. குலக்கல்வித் திட்டத்தை விட இந்தக் கொள்ளைக்காரக் கல்வித் திட்டம் கொடிது. கொடிது; ஏழைக்குக் கொடிது.

அகிலத்தை ஆளப்பயன்படும் ஆங்கிலக் கல்வியையா கொடிது என்கிறாய்? என்று ஆத்திரப்படுங்கள். பெரியாரே ஆங்கிலத்தை ஆதரித்தவர் தானே! என ஆதாரம் காட்டுங்கள்; எனக்கு அக்கறையில்லை. வடமொழியில் பாடப்படும் வழிபாட்டுப் பாடல் (PRAYER SONG), ஆங்கில எழுத்தில் எழுதிப்பாடும் தமிழ்த் திருவெம்பாவை இசைப்பாடல், அங்கிள் சற்குணர், மதர் தெரசா என ஆங்கிலத்தைத் தமிழில் எழுதும் பள்ளிப் பெயர்களின் அலங்கோலம். தமிழே படிக்காமல் தமிழ் எண் ணும்,எழுத்தும் தெரியாமலே பன்னிரு வகுப்பைத் தாண்டும் பள்ளிப் பருவம் எனத் திராவிடக் கட்சிகளின் ஆட்சியில் கல்வி வளர்ச்சி சிறந்ததாகவே இருந்து விட்டுப் போகட்டும். ஆனால், ஆங்கிலக் கல்வி எனும் தேன்தடவி அரைவகுப்பில் பிள்ளையைச் சேர்க்க ஐம்பதாயிரம் பிடுங்கும் கொடுமை - சீருடை தொடங்கிச் சுற்றுலா வரை பேர் தெரியாத பெயர்களிலெல்லாம் பணம் பறித்துக் கொண்டேயிருக்கும் படுபாதகம் சரியா? குழந்தையே ஒழுகி விழும் ஓட்டைப் பேருந்துக் கட்டணமே வானூர்திப் பயணக்கட்டணத்தை விடப் பல மடங்கு என்பன போன்ற சொல்லிச் சொல்லி மாளாத சுரண்டல்கள் முறையா?

முந்தைய நூற்றாண்டில் திரைகடல் ஓடிச் செல்வம் திரட்டிய வணிக அரசர்கள் கல்வித் தொண்டாற்றத் தொடங்கிய பல்கலைக்கழகங்கள் இன்று திறந்தவெளிக் கல்விச் சேவையில் திரட்டும் செல்வம் திரைகடலையே விஞ்சிவிட்டது. பாராளுமன்றத்தில் மூடநம்பிக்கை ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றிக் கொண்டிருக்கும் போது நம் பல்கலைக்கழகங்கள் சோதிடத்தைக் கூடப் பட்டமாக்கிச் சுரண்டத் திட்டமிடுகிறார்கள்.

1960 வரை அரசு உயர்நிலைப் பள்ளியில்கூட மாதம் ஐந்தரை ரூபாய் கல்விக்கட்டணம். அன்றைய ஏழைக்கு ஐந்தரை ரூபாய் பெரிய தொகை. 2,3 குழந்தைகள் ஒரே குடும்பத்தில் படித்துக்கொண்டிருந்தால் என்ன செய்வான் ஏழை? படிப்புத்தான் நிறுத்தப்படும். பெருந்தலைவர் காமராசரால் கல்விக் கட்டணம் ஒழிந்தது. அன்று உயர்நிலை வகுப்பை முடித்த ஏழைகள்தாம் அரச ஊழியர்களாகி, ஆசிரியர்களாகி வாழ்வு பெற்றனர்; தம் அடுத்த தலைமுறையை மருத்துவராகப் பொறியாளராக மாண்புறச் செய்தனர். அவர்கள் அறிவார்கள், இலவசக் கல்வி தந்த இனிய வாழ்வை.

மாத வருவாய் இலட்சங்கள் பெறுபவர்கள் தம் பிள்ளைகளின் கல்விக்கு அள்ளி அள்ளி வீசட்டும்; அளவு குறையாது. கொட்டியழட்டும், குடிமுழுகிப்போகாது. ஆனால் புலியைப் பார்த்துச் சூடு போட்டுக்கொண்ட ஏழைப் பூனைகள் தம் ஓராண்டு வருவாயையே ஒரு குழந்தையின் ஓராண்டுக் கல்விக் கட்டணமாகக் கட்டினால் சூடு கண்ட பூனையாய் சுருண்டுவிடுவார்களே. இதை எந்தத் திராவிட அரசாவது எண்ணிப் பார்த்ததா? திருத்த முயன்றதா? தனியார் கல்லூரிகளின் கட்டண உயர்விற்கு அரசே வழிகாட்டுவது பெரிய அநியாயமல்லவா? ஏழையை மேலும் ஏழையாக்கும் இத்தகையச் சமுதாயச் சருக்கல்களைப் பெரியார் இருந்தால் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பாரா? இவையனைத்துமே பெரியார் காண விரும்பிய *சமநிலைச் சமுதாயத்திற்கு எதிரான சதிகள் தாம்.*

# பெரியார் மறைந்தார்
# பெரியாரியம் மறையலாமா?

### சமூகத் தீமை

மானமும் அறிவும் மனிதனுக்கு அழகு என்பதுதான் பெரியாரியம், சுயமரியாதையும் பகுத்தறிவும் உடையவனே மனிதன் என்பதுதான் பெரியாரியம். உன் புத்தியைப் பயன் படுத்து! ஏன் என்று கேள்வி கேள்! என்பதுதான் பெரியாரியம். வருணாசிரமம், தமிழனின் மானத்திற்கும் சுய மரியாதைக்கும் பகுத்தறிவுக்கும் எதிராக இருந்த சமூகத் தீமையாக நிலவியதால் பெரியார் அதைக் கடுமையாக எதிர்த்தார். சமூகத் தீமையாக தாம் கருதும் எதையும் எதிர்க்க அவர் தயங்கமாட்டார்.

## பேய்களும் நோய்களும்

*கடவுள், மதம், சாத்திரங்கள், சாதி, சனநாயகம்* - இவை தமிழனைப் பிடித்த பேய்கள். பார்ப்பான், பத்திரிகை (ஊடகங்கள்) அரசியல் கட்சிகள், தேர்தல், திரைப்படம் - இவை *தமிழனை அரிக்கும்* நோய்கள் *எனப்* பட்டியலிட்டவர் பெரியார். சனநாயகத் தேர்தல் ஆட்சியில் பதவிக்கு வருபவரிடம் ஊழல் கட்டாயம் இருக்கும் என்பதால்*தான் சனநாயத்தையும்* பேயாகக் கண்டார் பெரியார். பெரியார் அன்று கண்ட பேய்களும், நோய்களும் இன்றும் தமிழனை ஆட்டிப் படைத்துக்கொண்டுதானே இருக்கின்றன. இவற்றுடன் ஆங்கிலக் கல்விக் கூடங்களையும் அரசு மதுக்கூடங்களையும் பின் இணைப்பாகப் பெரியார் கட்டாயம் சேர்ந்திருப்பார் அல்லவா! இன்று பெரியார் மறைந்தாலும் பெரியாரியம் காக்கப் பெற்றால், கற்பிக்கப் பெற்றால் தமிழன் தலை நிமிர்வான், தகுதி பெறுவான்.

### பார்ப்பனீயம் வீழ்ந்ததா?

*சமநிலைச் சமுதாயத்திற்*கெதிரான முதல் சூத்திரதாரி பார்ப்பானாக இருப்பதைப் பெரியார் புரிந்து கொண்டதால் தான் பார்ப்பன எதிர்ப்பை முதல் எதிர்ப்பாக முழு எதிர்ப்பாகக் கையில் எடுத்தார். *ஆனால், பார்ப்பன இனத்தாரால்* தமிழர் இன்னும் பாதிக்கப்படுகிறாரா? பார்ப்பனரின் சனாதன தர்மம் நம்மைக்

கட்டுப்படுத்துகிறதா? ஏன் இன்னும் பார்ப்பான் பாட்டையே பாடுகிறீர்கள்? என்று பெரியார் தொண்டர்களைப் பார்த்துப் பெரிய படிப்பாளர்கள் சிலர் கேட்கிறார்கள். பார்ப்பனரும் காலம் காலமாகத் தமிழ் நாட்டில் வாழ்கிறார்கள்; தமிழ்தான் பேசுகிறார்கள். அவரும் நம்மைப் போல் தமிழர்தானே! தமிழரின் சாதிப்பிரிவுகளில் ஒரு பிரிவுதாம் பார்ப்பனரும். அவரை மட்டும் ஏன் வேறுபடுத்துகிறீர்கள்? என்பது சாமானியத் தமிழனின் சந்தேகம்.

வேறு வேறு சாதியைச் சேர்ந்த நான்கு தமிழர்களும் ஒரு பார்ப்பனரும் ஓரிடத்தில் நின்றால், அதில் பார்ப்பான் யார்? என்பதைப் பார்த்தவுடனேயே தெளிவாகப் பிரித்து அறியமுடியும். ஆனால் அங்கு நிற்கும் நான்கு தமிழரில் யார் யார் என்ன சாதி என்பதைக் குறிப்பிட்டுக் கூறமுடியுமா? தீர்க்கமாக முடிவு செய்ய முடியுமா? இப்போது புரிந்து கொள்ளுங்கள். வெள்ளையன் வேறு இனம், நீக்ரோ வேறு இனம் என்பதுபோல் பார்ப்பான் வேறு இனம், தமிழன் வேறு இனம். நீக்ரோவை வெள்ளையன் தன் வலிமையால் அடிமைப்படுத்தியது 500 ஆண்டுகளுக்கு முந்திய வரலாறு. எனவே தெளிவாகத் தெரிகிறது. தமிழனைப் பார்ப்பான் தன் சூழ்ச்சியால் அடிமைப்படுத்தியது 5000 ஆண்டுகளுக்கு முந்திய வரலாறு. எனவே எல்லாருக்கும் மறந்து விட்டது; மரத்தும் விட்டது - பெரியார் வரும் வரை.

அன்று, மனிதனில் உயர்வு தாழ்வை இந்த மண்ணில் கற்பித்தது பார்ப்பனியம். இன்றும் மனிதரில் உயர்வு தாழ்வை யார் யார் கற்பிக்கிறார் களோ; யார் யார் பின்பற்றுகிறார்களோ, அவர்கள் அத்துணை பேரும் பார்ப்பனிய வழிமுறையினரே, பெரியாரிய எதிரணியினரே.

'பாரடா உனது மானிடப் பரப்பை!
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
மானிடச் சமுத்திரம் நானென்று கூவு
பிரிவில்லை; எங்கும் பேத மில்லை!'

என முழங்கும் புரட்சிக் கவிஞரின் மனிதப் பொதுமைக் குரலை ஏற்றுக்கொண்டவர்களுக்குப் பெரியாரியம் இன்றும் தேவை; என்றும் தேவையே.

# பெரியார் தாழ்த்தப்பட்டோருக்கு எதிரியா?

## சாதியொழிப்பிற்கே முதலிடம்

'எனக்கு மொழிப்பற்றோ நாட்டுப்பற்றோ கிடையாது. நான் வைத்திருக்கும் ஒரே பற்று மக்கள் பற்று மட்டுமே' என வெளிப்படையாக அறிவித்தவர் பெரியார். தன் வாழ்நாள் கொள்கையாக - ஒரே கொள்கையாக 'அனைத்துயிரும் ஒன்று' - எனக் கொண்டவர் அவர். வருணாசிரம ஒழிப்பே என்னுடைய ஒரே பிரதான தொண்டு என வாக்குமூலம் கொடுத்தவர் பெரியார். வறுமை ஒழிப்பா? சாதி ஒழிப்பா? என்ற நிலையில் சாதியொழிப்பிற்கே முதலிடம் கொடுத்தவர் பெரியார். தமிழனிடம் சாதியொழிந்தால் தாழ்த்தப்பட்டவருக்கு என்ன பாதிப்பு? பெரியார் எப்படி அவர்களுக்கு எதிரியாவார்? என்பது வியப்பும் வேதனையும் கலந்த வினா.

## இனத் தலைவர்கள்

பெரியாரின் முழுமைச் சிந்தனையும் சமநிலைச் சமுதாயத்தை நோக்கமாகக் கொண்டிருந்தது. அவரது ஒரே எதிரி பார்ப்பனியம் மட்டுமே. தமிழர்களைத் தாழ்த்தப்பட்டவர், பிற்படுத்தப்பட்டவர், மேல் வகுப்பார் என்றெல்லாம் பெரியார் பிரித்துப் பார்த்தவரில்லை.

பெரியாரால் கிடைத்த இட ஒதுக்கீட்டு வாய்ப்பில் தாழ்த்தப் பட்டவர்களுக்கு உரிய பங்கு இருந்தது. ஆனால் இட ஒதுக்கீட்டு வாய்ப்பைப் பிற்படுத்தப்பட்டவர் பயன்படுத்திக்கொண்ட அளவு தாழ்த்தப்பட்டவர் பயன்படுத்திக் கொள்ளவில்லை. இதற்குக் காரணம் அவர்களுக்கு வழிகாட்டியாகப் புறப்பட்ட எண்ணற்ற இனத் தலைவர்களில் மிகப் பலர் அவர்களுக்குச் சரியான வழிகாட்டவில்லை; தலைமையைத் தங்கள் சுயலத்திற்குப் பயன்படுத்திக்கொண்டனர். முதுகுளத்தூர் கலவரத்தில் தாழ்த்தப்பட்டவருக்கு ஆதரவாகக் கடைசி வரை நின்றவர் பெரியார் மட்டுமே. இரட்டை வாக்குரிமைக்குப் பாடுபட்ட தாழ்த்தப்பட்ட இனத் தலைவர்களை முழுமையாக ஆதரித்தவர். டாக்டர் அம்பேத்காரும் பெரியாரும்

ஒருவருக்கொருவர் மதிப்பும் வழிகாட்டலும் கொண்ட உயர் நட்புடையவராகத் திகழ்ந்தவர்கள்.

300 ஆண்டுகளுக்கு முன்பு வரை தாழ்த்தப்பட்டவர்களைப் போலவே சமுதாயத்தில் தாழ்த்தி வைக்கப்பட்டிருந்த நாடார் சமூகம், கல்வி, வணிகம் இரண்டிலும் உயர்ந்த நிலைக்குத் தம்மை முதன்மைப் படுத்திக்கொள்ள வில்லையா? தங்கள் இனத்தின் கூட்டு முயற்சியால் எண்ணற்ற பள்ளி, கல்லூரிகள் தொடங்கிய அவர்கள் முயற்சியைத் தாழ்த்தப்பட்டவர்கள் பின்பற்றினார்களா? அவ்வினத்தலைவர்கள் வழிகாட்டினார்களா?

## நிரப்பப்படாத இட ஒதுக்கீடு

தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கல்வி நிலையங்களிலும் வேலை வாய்ப்பிலும் வழங்கப்பட்ட சலுகைகள் அவர்களால் முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளப்படவில்லை என்பதற்கு இன்றுவரை மத்திய மாநில அரசுகளின் வேலை வாய்ப்புகளில் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இடம் தகுதியான ஆட்கள் கிடைக்காததால் நிரப்பப்படாமல் இருக்கும் நிலையே சான்றாகும்.

தாழ்த்தப்பட்டோரில் இட ஒதுக்கீட்டால் உயர்வு பெற்றுச் சமூகத்தின் உயர் இடத்தை அடைந்தவர்கள், தங்கள் சமூகத்திலிருந்து தங்களைப் பிரித்துக்கொண்டு போலி உயர் வகுப்பினராக ஒதுங்கினர். இடஒதுக்கீட்டு வாய்ப்பை மட்டும் தம் தலைமுறைக்கும் தவறாது பெற்றனர். தாழ்த்தப்பட்ட விவசாயக் கூலியாள் மகனின் மருத்துவக் கல்லூரி இட ஒதுக்கீட்டு வாய்ப்பை தாழ்த்தப்பட்ட மருத்துவர் மகன் எளிதாகத் தட்டிச் செல்வது இன்று கண்கூடு. இதனால் விரக்தியடைந்தவர்கள் இட ஒதுக்கீட்டையே குற்றம் சொல்லும் நிலைக்குத் தள்ளப்பட்டனர்.

## தாழ்த்தப்பட்டோருக்காகத் தாங்கிய அடிகள்

ஒரே குடும்பத்தில் படித்து உயர்வு பெற்ற மகனும் படிக்காததால் தாழ்வடைந்த மகனும் இருந்தால், படிக்காத மகன், தன் தாழ்விற்குத் தம் பெற்றோரே காரணம் எனப் பழிப்பதும், உயர்வு பெற்ற உடன் பிறந்தான் மீது பொறாமை கொள்வதும் இயல்பாதல் போன்றதே இவர்கள் நிலையும்.

'மூவேந்தர் கால முதல் நாயக்கர், சிற்றரசர், பாளையக்காரர், சமீன்தாரர் ஆட்சிவரை தாழ்த்தப்பட்டவர் நிலை என்ன? பெரியார் சமூகப்பணியில் அவர்களுக்காக உழைத்த பின்னர் தமிழ் நாட்டில் தலித்துக்கள் அடைந்த சமூக உயர்வு இந்தியாவில் வேறெங்கும் இல்லை' என்கிறார் எழுத்தாளர் சங்கமித்ரா.

தாழ்த்தப்பட்டோருக்குப் பெரியார் ஏதும் செய்யவில்லை என்பார் இதற்கு என்ன பதில் வைத்திருக்கிறார்கள்? திருச்சியில் பிணத்தை எரிப்பதற்கும்

இடம்தர மறுத்த மேற்சாதியாருக்கு எதிராகச் சுடுகாட்டிற்கே ஓடியவர் பெரியார் மட்டுமே. நீதிக் கட்சியின் ஆட்சியில் இராமநாதபுரம் மாவட்டக் குழுத் தலைவராக இருந்த ஊ.பு.து.சௌந்திரபாண்டியன், ஆதி திராவிடர்களைப் பயணம் செய்ய அனுமதிக்காத பேருந்து உரிமங்களை இரத்து செய்ய ஆணையிட்டார்.

தமிழ் நாட்டின் எல்லா ஊர்களிலும் எல்லாத் தெருக்களிலும் தாழ்த்தப்பட்டவர்கள் இன்று தலை நிமிர்ந்து நடப்பதற்குப் பெரியார் தொண்டர்களாகிய சுயமரியாதைக்காரர்கள் வாங்கிய அடிகள், தாங்கிய அவமானங்கள், அடைபட்ட சிறைக் கூடங்கள் எத்தனை தெரியுமா?

தாழ்த்தப்பட்டவர் தமக்குச் சமூகம் செய்த இழிவை எதிர்த்துத் தாமே எழுந்து புரட்சி செய்த வரலாறு எத்தனை? தாழ்த்தப்பட்டவருக்காகச் சமூகத்தை எதிர்த்து எழுந்த சுயமரியாதைக்காரன் தமிழகத்தின் ஊர்தோறும், தெருத்தோறும் படைத்த வரலாறு எத்தனை? எத்தனை? இந்த மான உணர்வின் மையப்புள்ளி பெரியாரே.

# திராவிடத்தால் வீழ்ந்தோம் / எழுந்தோம்

## திராவிடமும் தமிழும்

பெரியார் - சாதி என்ற சமுதாயச் சிக்கலை ஒழிக்கப் புறப்பட்ட சமூகப் போராளி. அவர் எந்த நாட்டிற்கும் விடுதலை வாங்கித்தரப் போராடிய 'சேகுவரா' அல்லர். எந்த மொழியைக் காக்கவும் தீக்குளிக்க வந்த 'சின்னச்சாமி' அல்லர். பெரியார் அமெரிக்காவில் பிறந்திருந்தால் நீக்ரோ விடுதலைக்குப் போராடியிருப்பார். அயர்லாந்தில் பிறந்திருந்தால் ஐரீஷ்காரன் விடுதலைக்குப் பாடுபட்டிருப்பார். மலையாளத்தில் பிறந்திருந்தால் ஈழுவர் அடிமை எதிர்ப்பை முன்னெடுத்திருப்பார். அவர் பிறந்து வளர்ந்து வாழும் மண்ணையே தாயகமாகக் கொண்டவர். உலகில் மனிதனுக்குள், உயர்வு தாழ்வு கூடாது என்பது மட்டுமே அவர் கொள்கை. அதற்கான போர்க்குணம் அவர் உயிரில் உருப்பெற்றது; குருதியில் நிறைந்தது. பெரியாரைப் பொறுத்தவரை அவருக்குத் திராவிடமும் தமிழும் ஒன்றுதான். திராவிடம் என்பது அவர் கண்டறிந்த சொல் அன்று. திராவிடம் என்பது ஆரிய எதிர்ப்புக் குறியீடே. தமிழ் நாட்டில் தமிழனை அடிமையாக வைத்திருக்கும் தமிழ் பேசும் பார்ப்பானிடமிருந்து தமிழனுக்கு விடுதலை பெற்றுத் தரப் பாடுபட்டவர் பெரியார். அடிமைநிலையைப் பாதுகாக்கப் பார்ப்பான் தமிழனுக்குப் பூட்டியிருந்த சாதி, மதம், வேதம், புராணம், கடவுள், சொர்க்கம், நரகம் இத்யாதி விலங்குகளை உடைக்கும் சம்மட்டிதான் பெரியாரின் கைத்தடி.

1956க்கு முன்பு வரை நான்கு மொழியாளரும் அடங்கிய அகண்ட தமிழ் நாட்டு மக்களுக்காகப் போராடியபொழுது ஏற்கனவே கையாளப்பட்டு வந்த 'திராவிடன்' என்ற பொதுப் பெயரைத் தாமும் எடுத்துக்கொண்டார். மொழிவாரி மாநிலம் பிரிந்து தமிழ் நாடாகச் சுருங்கியபோதும், தமிழர் கழகம் எனப் பெயரிட்டால் தமிழ் பேசும் பார்ப்பானும் தமிழனாகிவிடக் கூடாது என்பதற்காகத்தான் 'திராவிடர்' என்ற சொல்லாட்சி அவருக்கு உதவியது என்பது ஊரறிந்த இரகசியம். மேலும்,

> தமிழ், தமிழர் கழகம் என்பது மொழிப் போராட்டத்திற்குப் பயன்படுவது போல் இனப் போராட்டத்திற்குப் பயன்படாது

என்று கூறிய பெரியாரின் நுட்பம் வியப்பிற்குரியது.

> வடவரின் பொருளாதாரச் சுரண்டலும் பார்ப்பனியச் சாதியமும் ஒழியப் பெற்ற ஒரு சமதர்மச் சமுதாயத்தைச் சமைப்பதற்குத் தேவையான நிலப் பகுதியினைக் குறிக்கும் சொல்லே திராவிடம்

என அழுத்தம் திருத்தமாக உறுதி செய்யலாம்.

## கன்னடரா? கன்னடத் தமிழரா? தமிழ்க்கன்னடரா?

> திராவிட இயக்கத்தார் அனைவரும் வந்தேறிகளான கன்னடர், ஆந்திரர், மலையாளிகள். இவர்கள் தமிழரைக் கொள்ளையடித்துக் கொண்டிருக்கின்றனர்; தமிழரை அடிமையாக்கி உள்ளனர்; இக்கொள்ளைக் கூட்டத்திற்குத் தலைவர் பெரியார்

என்று சாத்தூர் சேகரன் என்பவர் 'ஏன் வேண்டாம் துன்பத் திராவிடம்' நூலில் எழுதுகிறார்.

> தமிழர்கள் மட்டுமின்றி நெடுங்காலமாகத் தமிழகத்தைத் தாயகமாகக் கொண்டுள்ள மக்கள் அனைவரும் தமிழ்த் தேசிய சக்திகளே. 300, 400 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்தில் வந்து தங்கி, வீட்டு மொழியாகத் தங்கள் மொழியையும் நாட்டு மொழியாகத் தமிழையும் ஏற்றுக்கொண்டுள்ள ஆந்திரர், கன்னடர், மலையாளர் தமிழ்த் தேசிய சக்திகளே

என எதிர்வாதம் வைக்கிறார் மணியரசன்.

> கொள்கை, நடைமுறை இரண்டிலும் பார்ப்பனியத்தை மறந்து தமிழ் உணர்வோடு செயல்பட முன்வரும் பார்ப்பனர்களைத் தமிழ்த் தேசியம் அரவணைக்கிறது. ஆனால் அவர்களது உளவியல் ஊனத்தையும் அவர்கள் ஆளும் சக்தியாக உள்ளார்கள் என்பதையும் தமிழ்த் தேசியம் கணக்கில் எடுத்துக்கொள்கிறது

என்று மணியரசன் பார்ப்பனரை ஏற்றுக் கொள்வது போல் தொடங்கித் தள்ளி வைக்கிறார். பெரியார் துணிச்சல் எவருக்கும் வராது.

> தமிழக எல்லைப் பகுதிகளில் அடுத்துள்ள மாநில மொழிபேசுவோர் உள்ளனர்; நடுப் பகுதியில் மன்னராட்சிக் காலக் குடியேற்றங்களாகிய தெலுங்கர், சௌராட்டிரர் உள்ளனர். தமிழக நகரங்களில் உழைக்க வந்த வடமாநிலத்தவர் உள்ளனர்

என்கிறார் சீவசகாப்தன்.

'பெரியார், ஆரிய எதிர்ப்பை விடத் தமிழ்ப் பகுதிகளைப் பறித்துக்கொண்ட கன்னட, மலையாள, தெலுங்கர் எதிர்ப்பையே கையில் எடுத்திருக்க வேண்டும். ஆரியரை எதிர்த்த பெரியாரின் அணுகுமுறை யாலேயே தமிழர் வீழ்ந்தனர்'

இது – திராவிடத்தால் வீழ்ந்தோம் என்னும் குணா. மொழிவாரி மாநிலப் பிரிப்பும் பிணக்கும் 1956இல். பெரியார் சமூகப் போராளியாக எழுந்தது 1926இல். திரு. குணா கூறுவது அப்பனுக்குப் பிள்ளை பேர்வைப்பது போல் உள்ளது. அதுவும் இப்போது நடக்கிறது என்பதால் எதை எழுதினாலும் ஆய்வு ஆகிறது.

> திராவிடம் என்பதைப் பெரியார் கைகளில் எடுத்தது ஆரியர்களுக்கு எதிராகத்தானே தவிர மலையாளிகள், கன்னடர்கள், தெலுங்கர்களுக்கு ஆதரவாக அல்ல

என *'ஆரியத்தால் வீழ்ந்தோம்'* என்கிறார் மஞ்சை வசந்தன்.

> பெரியார், கன்னடராகத் தம்மை உணர்ந்திருந்தால் – நான்கு தென் மாநிலங்களையும் இணைத்த தட்சிண பிரதேசத் திட்டத்தை எதிர்த்திருப்பாரா?

எனத் சீவசகாப்தனும் கேள்வி எழுப்புகிறார். மொத்தத்தில் பெரியார் திராவிடரா, கன்னடரா, தமிழரா என்ற மூடச் சந்தேகங்களும் பெரியார் கன்னட ஆதரவாளர்; தமிழ்ப் பகைவர் என்ற முட்டாள்தனங்களும், பெரியார் மனித நேயர்மட்டுமே என்ற உண்மையை மறக்கச் செய்துவிடும் போலும்.

> 'திராவிடம்' என்ற சொல் தமிழ் மொழியை ஆரியர்கள் ஒலியிலே மாறுபாட்டுடன் குறித்த சொல்.

என்று தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் கூறிய கருத்துக்கு மிகப் பழைமையானது முதல் இன்று வரை ஆயிரம் ஆதாரங்கள் இருந்தாலும் இன்றும் திராவிடர் வேறு, தமிழர் வேறு எனப் பேசவும் எழுதவும் ஆட்கள் கிடைக்கிறார்கள்.

அன்னை தெரசா – அயல் நாட்டாரா? இந்தியரா? வங்காளியா? என்று ஆய்வு செய்யாமல் அவர் ஒரு மனித நேயர்; சமூகத் தொண்டர் என்றே ஏற்றுக்கொள்ளவில்லையா?

> பெரியாரை ஒரு பெரிய *சமுதாயச் சிந்தனையாளராகத் தமிழ்ச்* சமுதாயத்திற்குப் பணியாற்றியவராக மட்டுமே பார்க்க வேண்டும். *கன்னடரா? தெலுங்கரா? என்று* பார்க்கக்கூடாது

எனப் பொன்னிறைவன் தெளிவுபடுத்துகிறார்.

## பெரியார் பற்றிய விமரிசனத்தின் பின்புலம்

பெரியாருக்கு எதிராக இத்தனை விமரிசனங்கள் எழுவதற்கும் காரணம் இல்லாமல் இல்லை.

> பெரியார் காலம் வரை, தமிழ் இன விடுதலையே திராவிட இயக்கத்தின் இலக்காக இருந்தது. பெரியாருக்குப்பின் தேர்தலில் போட்டியிடாத திராவிடர் கழகங்களின் தலைவர்கள் கடவுள் மறுப்பு, மூடநம்பிக்கைகள் ஒழிப்பு, பகுத்தறிவு பரப்புதல் எனத் தங்கள் செயல் எல்லைகளைச் சுருக்கிக்கொண்டனர். தேர்தல் அரசியலில் நுழைந்த திராவிட இயக்கங்கள் பதவிச் சுகம் கண்டு கோடிகளில் புதைந்துபோய்விட்டனர். இவ்வாறு இன்றையத் திராவிட இயக்கத் தலைவர்கள் இயக்கக் கொள்கைகளை மறந்ததும் துறந்ததும்தான் பெரியாரியப் பின்னடைவின் காரணம். குற்றவாளிகள் இன்றையத் தலைவர்களே தவிர இயக்கம் குறைகூறத் தக்கதன்று

என்கிறார் திரு. இரணியன்.

மார்க்சியப் பொதுவுடைமைக் கட்சியின் தமிழின விரோதப் போக்குக்குக் காரல் மார்க்சைக் காரணம் கூறுவது எவ்வளவு அபத்தமானதோ அதே போன்றதுதான் ஊழல் நிறைந்த திராவிடக் கட்சிகளின் அக்கறையற்ற ஆட்சியை வைத்துத் திராவிடம் என்ற கருத்துருவைப் புறந்தள்ளுவது என்ற மதுரை தளபதியின் கருத்து திராவிடத்தால் வீழ்ந்தோம் என்பார்க்குத் தெளிவான விடையாகிறது.

பெரியார் சொல்வார்,

> என் கருத்தைச் சொல்ல எனக்கு உரிமை இருக்கிறது. அதை ஏற்றுக்கொள்ளவோ மறுக்கவோ உனக்கு உரிமை இருக்கிறது. உன் புத்தியைப் பயன்படுத்திப்பார்

என்று. எனவே பெரியாரைக் குறித்து யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் கூறலாம். அதற்குப் பெரியாரே உரிமை கொடுத்துவிட்டார். ஆனால் கூறுபவர்கள் புத்தியைப் பயன்படுத்தினார்களோ இல்லையோ நாமாவது அவரவர் புத்தியைப் பயன்படுத்திப் பார்த்தால் புரிந்து கொள்ளலாம்.

# திராவிடத்தேசியமா? தமிழ்த் தேசியமா?

## எத்தனை தேசியங்கள்?

இன்று தமிழ் நாட்டில் தனிப்பெருந்தலைவர்களுக்குப் பஞ்சமேயில்லை. திராவிட நாடு, தனித் தமிழ் நாடு, தமிழரசு, தமிழ்ப் பேரரசு, தமிழ்த்தேசியம், திராவிடத்தேசியம் தமிழக மக்கள் பொருளியல் உரிமை, இடது சாரித் தமிழ்த் தேசியம் என இன்னும் எத்தனை எத்தனையோ இலக்குகள், இயக்கங்கள், தலைவர்கள், கொடிகள். (தமிழன் ஒவ்வொருவனுக்கும் ஒரு கொடி கொடுத்துவிடலாம்) இவர்கள் ஒருவரையொருவர் திட்டிப் பேசுவதும் எழுதுவதும் மட்டுமே இவர்கள் இலட்சியப் பணி.

## தமிழ்த் தேசியம்

> எமது தேசிய இனம் தமிழர், எமது தேசிய மொழி தமிழ், எமது தேசம் தமிழ்த்தேசம், எமது இலக்கு தமிழ்த் தேசக் குடியரசு அமைத்தல்

என்பதுவே தமிழ்த்தேசியம் என்கிறார் பெ.மணியரசன்.

> பெரியாரின் இந்திய எதிர்ப்பில் இறக்கும்வரை இம்மியளவும் மாற்றமில்லை, அதே வேளையில் தமிழ் நாட்டின் விடுதலைக்கும் அவரிடம் குறிப்பிட்ட திட்டமில்லை

என்று பெரியாரைத் திறனாயும் மணியரசனிடம் அவரது இலககாகிய தமிழ்த் தேசியக் குடியரசு அமைய என்ன திட்டம் உள்ளது? சனநாயகமா? ஆயுதப் புரட்சியா? என்பதும் தெரியவில்லை. மேலும் அவர்,

> தமிழர் என்பது ஒரு மரபினம். அது இன்று தமிழ்த்தேசிய இனமாகவும் உள்ளது. திராவிடர் என்பது ஒரு மரபினம் அல்ல. அது ஒரு தேசிய இனமும் அன்று; அது ஒரு மொழியினமும் அல்ல

என்கிறார். தமிழின் மறுபெயர்தான் திராவிடம் என்பதைப் பழங்காலத் தமிழ் நூற்சான்றுகள் தொடங்கிப் பாவாணர் வரை உறுதி செய்த பின்னரும்

தமிழறிஞர்கள், மொழியாய்வாளர்கள் ஏற்றுக் கொண்டபின்னரும் தமிழ் வேறு, திராவிடம் வேறு எனப் பேசிக்கொண்டே பிழைப்பது வெறும் மன வேறுபாடு, இயக்க வேறுபாடுகளால் மட்டும் தானோ? தமிழனுக்கே உரிய தன் முனைப்பு மனநோயாலா?

## ம.பொ.சியும் சி.பா.ஆவும்

தமிழ்த் தேசியத்தின் மூலவராக, மூத்த தலைவராக முன்னிறுத்தப்பட்ட ம.பொ.சிவஞானம் 1950களில் திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடுகள் நடத்தியவர். தமிழரசுக் கழகம் கண்ட அவர் 1967க்குப் பின் ஆளும் திராவிட இயக்கத்தில் பதவி பெற்றுக் கரைந்து போனார். நாம் தமிழர் எனக் கூறிப் புறப்பட்ட ஆதித்தனாரும் தமிழ்ப் பேரரசை இலக்காக்கினார்.அதற்கு வழிகாட்டாமல் ஆளும் திராவிட இயக்கத்தில் அமைச்சராகி மறைந்தார். இவ்விருவரது வாழ்வும் வரலாறும் தமிழகம் அறிந்ததே. அவர்கள் காலத்தில் வலுவுடன் எழுந்த திராவிட இயக்கத்திற்கு மாற்றாக நாம் மக்கள் செல்வாக்குப் பெற வேண்டும் என்பதற்காகத்தான் தமிழ்த் தேசியம் பேசினார்கள். தி.க., தி.மு.க.விற்கு எதிர்க் குறிக்கோளே எங்கள் குறிக்கோள் என்பதை மறைமுகமாகத் தமிழ்த் தேசியம் என்று முழங்கியவர்கள் தாம் அவர்கள்.

இவர்களைத் தவிர, தி.மு.க.வில் இருந்து சொந்த வேறுபாடுகளால் வெளியேறிய ஈ.வெ.கி. சம்பத், கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் தமிழ்த் தேசியக் கட்சி கண்டு பின் காங்கிரசில் கரைந்தனர். அவர்கள் தமிழ்த் தேசியமும், தி.மு.க எதிர்ப்பு மட்டுமே. பழ.நெடுமாறனும் தி.மு.க வில் தொடங்கி, காங்கிரஸில் இருந்து பின் வெளியேறியவர் தான். அவருக்கு இன்றும் தமிழ்த் தேசியம் பேச்சு, ஈழப் பிரச்சனை மூச்சு, திராவிட எதிர்ப்பே அவர் கையில் ஏந்தியுள்ள ஒரே போர்க்கருவி.

## தமிழ்த் தேசியத்திற்குள் முரண்பாடுகள்

> பெரியார் தொடங்கி நெடுமாறன் வரை திராவிடம்,தமிழ்த் தேசியம் பேசியோர் அனைவரும் போலிகளே; தாழ்த்தப்பட்டவர்கள் பொருளியல் உயர்வு காண முடியாமை இவர்களால்தான். இவர்கள் இட ஒதுக்கீட்டுக் கொள்கையும் குற்றமுடையதே

எனக்கூறுகிறார் குமரி மைந்தன். இவர் தமது தாழ்த்தப்பட்டோர் சார்பைத் தமிழ்த் தேசியமாக்குகிறார். ஈழத் தமிழர் தங்கள் மண்ணிலிருந்து வெளியேற்றப்பட்டு அயல் நாடுகளில் தஞ்சமடைந்துள்ளதையும் தமிழ் இளைஞர்கள் தமிழ்நாட்டிலிருந்து வெளியேறி அயல் நாடுகளில் பணியேற்றுக் குடியுரிமை பெறுவதையும் ஒப்பிடுகிறார்.

> ஈழத்தமிழரும் தமிழகத் தமிழரும் தங்கள் தாய் மண்ணிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள் (விரட்டப்படுகிறார்கள்) ஈழத் தமிழருக்கு ஏன் வெளியேற்றப்படுகிறோம்? யார் வெளியேற்றுபவர்? என்ற காரணம் தெரியும். மீண்டும் தம் மண்ணை மீட்க வேண்டும் என்ற வெறியுடன் உள்ளனர் அவர்கள். தமிழகத் தமிழனுக்கு இவை எதுவும் தெரியவில்லை. மீண்டும் மண்ணை அடைய வேண்டும் என்ற உணர்வும் இல்லை. தாய் மண்ணிலிருந்து வெளியேறும் தகுதி (கல்வி) பெறத் தமிழகத் தமிழன் தன் குடும்பத்திற்குச் சோறு போட்டுக் கொண்டிருந்த நிலங்களை விற்றுவிட்டான். (ஈழத் தமிழன் நிலம் நேரடிப் பகைவனால் பறிக்கப்பட்டது) இந்த மண்ணிழப்பு நிலைமை, பெரியார் அவர் வழி வந்த எத்துவாளிகளால் வந்தது.

என்ற குமரி மைந்தனின் வார்த்தைகளில் பெரியாரைக் குறை கூற வேண்டும் என்பதற்காகச் சொல்லப்பட்ட கொடுஞ்சொற்கள் கொதிக்கும் உண்மையையும் விஞ்சி உள்ளது. குமரி மைந்தனின் தமிழ்த் தேசியமும் தனி மனித வெறுப்புத் தானோ? குணா, பெரியாரையும் மற்றும் மிகப்பல திராவிட இயக்கத்தாரையும் தமிழர் அல்லாதவராகவே காட்டித் திராவிடத்தால் வீழ்கிறார். அவருக்கு எதிராக

> பெரியாரின் திராவிடப் பற்றில் கன்னடச் சார்பு இல்லை; தமிழ்த் தேசியத் தோழர்களின் திராவிட எதிர்ப்பில் ஆரியச் சார்பு இருக்கிறது

என்ற திறனாய்வும் எழத்தானே செய்கிறது. இதுபோல் இன்று தமிழ்த் தேசியம் பேசும் ஒவ்வொருவரையும் ஆராயத் தொடங்கினால் அது பெரிய இராமாயண, மகாபாரத மலிவுப் பதிப்புகள் ஆகி விடும்.

## பெரியார் கண்டதே தமிழ்த் தேசியம் தான்

1955 இல் மொழிவாரி மாநிலங்களாகக் கன்னடம்,ஆந்திரம், மலையாளம் பிரிந்த பிறகு மீதியுள்ள தமிழ்நாட்டிற்குச் 'சென்னை மாகாணம்' எனச் சூழ்ச்சியாகப் பெயர் வைத்தார்கள். (பெரியார் பார்ப்பானைத் தவிர்க்கச் சூழ்ச்சி செய்ததற்கு எதிர்ச் சூழ்ச்சியாகப் பார்ப்பானை உள்ளடக்கிய தமிழ் நாட்டிற்குச் சென்னை மாநிலம் எனப் பெயரிட்டனர்) 'இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமம்' எனப் பெரியார் எதிர்த்த போது எழுந்தது அவர் தமிழ்த் தேசியம். மாநிலப் பிரிவினையில் தமிழ்நாட்டின் (சென்னை மாகாணத்தின்) எல்லைப் பிரச்சனை எழுந்த பொழுது

> நான் விஸ்தீரணத்துக்காகப் (இடப் பரப்புக்காக) போராடுபவன் இல்லை; விடுதலைக்காகப் போராடுபவன்

எனப் பெரியார் கூறியபொழுது அவரது தமிழ்த் தேசியத்தின் இலக்கை வெளிப்படுத்தினார். தமிழ் நாட்டைச் சுற்றியிருக்கும் கன்னடர், தெலுங்கர், மலையாளர்களுடன் நமக்கு எழுவது உரிமைச் சிக்கல்தான்; ஆனால் ஆரியருக்கும் தமிழருக்கும் இடையே உள்ளது இனப்பகை என்பதைப் பெரியார் இதன் மூலம் உணர்த்தினார்.

> பெரியார் 1929இல் நடத்திய முதல் சுயமரியாதை மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட எந்தத் தீர்மானமும் இன்றைய எந்தத் தமிழ்த் தேசியத்திற்கும் எதிரானது அல்ல

என்ற ஆய்வாளர் தளபதியின் கருத்தை ஆழ்ந்து சிந்திப்போர், பெரியாரே தமிழ்த் தேசியத்தின் தந்தை என்பதை ஒப்புக்கொள்வார்கள்.

> தமிழ்த் தேசியம் நம் அடையாளம். பார்ப்பன எதிர்ப்பான பகுத்தறிவுத் திராவிடம், வர்க்கச் சமத்துவம் கூறும் மார்க்சியம், சாதி ஒழிப்பை முன்னிறுத்தும் தலித்தியம் ஆகியவை அதன் கூறுகளாக இருக்க வேண்டும். பெரியாரைப் பகைத்து, மார்க்சை மறுத்து, அம்பேத்காரைக் கண்டு கொள்ளாத தமிழக விடுதலை விடுதலையாகாது

என்ற கவிஞர் தமிழேந்தியின் கருத்து, இன்றையத் தமிழ்த் தேசியவாதிகளுக்கு விழிப் பூட்டினால் மட்டுமே நமக்கு விடுதலை விடியும்.

> திராவிட இயக்கம் அடிமரம். தமிழ்த் தேசியம் அதன் கிளை. கிளையிலிருந்து கொண்டு அடிமரத்தை வெட்டக்கூடாது

என்று சுப. வீரபாண்டியனின் எச்சரிக்கை எண்ணிப் பார்க்கத்தக்கதே! இந்த எச்சரிக்கையை வழிமொழிகிறார், தலைநகர் தமிழ்ச்சங்கத் தலைவர் சுந்தரராசன்.

> தமிழர்கள் தமிழ்த் தேசியம், திராவிடத் தேசியம் என்னும் நிலையில் மோதிக் கொள்வதும் பிளவுபட்டு நிற்பதும் தமிழ் எதிரிகளின் பலத்தை வலுவடையச் செய்யும்

என்பது அவர் ஆய்வு (மக்கள் செங்கோல் இதழ் - திசம்பர் 2012)

## தமிழ்த் தேசியத்தின் திறவுகோல் பெரியாரியமே

தனிமனித விருப்பு வெறுப்புக்கள், அடிமனத்தின் அயல் சார்புகள் ஆகியவற்றைக் களைந்த தமிழ் உணர்வாளர்கள் ஒன்று திரண்டால் தூய தமிழ்த் தேசியத்தை மலரச் செய்ய முடியும்.

> திராவிடம் என்ற கருத்தாக்கத்தின் வழியே நெடுந்துயிலில் இருந்து விழித்த தமிழகம் அந்த எழுச்சியினை அடித்தளமாக்கி அதன் மீதுதான் தமிழ்த் தேசியம் என்கிற மாளிகையினைக் கட்டி எழுப்ப வேண்டும். அந்நாளில் மகத்தான அம் மாளிகையின் திறவு கோல் என்பது பெரியாரியமே

என்ற ஆய்வாளர் லலிதா அவர்களின் கருத்துரை தமிழ்த் தேசியத்தை ஒன்றிணைக்கும்.

# மீண்டும் தொடக்கத்திலிருந்து...

பெரியார் பேசிய திராவிடமும் தமிழும் ஒன்றே - பெரியார் விடுதலைப் போராட்ட வீரர் அல்லர்; அவர் ஒரு சமூகப் போராளியே. சாதி ஒழிப்பே அவர் ஒரே கொள்கை. பெரியார் இன்னும் புரிந்துகொள்ளப்படவில்லை. அவர் கொள்கைகளை அவர் தொண்டர்களே சிதைக்கின்றனர். பெரியார் குறித்த ஆய்வு தொடங்கு முன்னே முடிக்கப்படுகிறது. உண்மையில் பெரியாரியம் முழுமையாக நடு நிலையுடன் மீண்டும் மீண்டும் ஆய்வு செய்யப்படவேண்டும்.

கடவுள் மறுப்பு, பிரிவினை வாதம் குறித்த பெரியார் கருத்துக்களும் காரணங்களும் தீர்வு செய்யப்படவேண்டும். சாதி ஒழிப்பிற்குப் பெரியார் கண்ட வழி தவறென்றால் புது வழி என்ன? புது வழி கண்டு போதித்தவர், போதிப்பவர் உண்டா? அதில் வென்றவர் உண்டா? என்ற வினாக்களுக்கு விடை வேண்டும். அதற்குமுன் சாதி ஒழிய வேண்டுமா? என்பதற்குத் தமிழ்ச் சமுதாயம் உள்ளவொளியுடன் உண்மை சொல்ல வேண்டும். இன்னும் சாதி ஒழியவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

பெரியார், தமிழ் இன மேன்மைக்காக மட்டுமே வாழ்நாள் முழுவதும் உழைத்தவர். அவர்கள் அனைவரையும் சமநிலையாகக் கருதியவர். அவர்களுக்கிருந்த அடிமை இழிவை நீக்கப்பாடுபட்டவர். தமிழர் தமக்குள் உயர்வு தாழ்வு பாராட்டக்கூடாது என்பதில் குறியாகச் செயல்பட்டவர்.

பெரியாரியத்தின் தொடர்ச்சி தான் தமிழ்த் தேசியம். தமிழ்த் தேசியத்தில் பெரியாருக்கு என்றும் முரண்பாடில்லை. தமிழ்த் தேசியவாதிகள் பெரியாருடன் முரண்படுவதில் பொருத்தமே இல்லை.

திராவிடர், தமிழர் என்று பெயர் சூட்டிக்கொண்டு தன்னலத்துடன் இயக்கமோ ஆட்சியோ நடத்தித் தமிழ் நாட்டிற்கே கேடு செய்வோர் எவரும் கண்டிக்கத்தக்கவரே; வெறுக்கத் தக்கவரே; தூக்கியெறியப்பட வேண்டியவரே. இதுவும் பெரியாரியம்தான். பொது வாழ்வில் தூய்மையும் நேர்மையும் விரும்பும் இளைஞர் கூட்டம் பெரியாரியத்தைத் தமக்கு இலக்கணமாக்கிக் கொள்வதில் எந்தத் தவறும் வராது. பெரியாரியத்தைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதிலும் எந்தக் குற்றமும் நேராது என்பது உறுதி.

இன்று தமிழ் நாட்டில் திரைப்பட நடிகர் பெயரில் சங்கங்கள் தெருத்தோறும் திறந்துள்ளனர். கம்பன் கழகங்கள்கூட ஊர்தோறும் காட்சியளிக்கின்றன. அதுபோல் பெரியார் கழகங்கள், எந்தச் சார்புமற்ற பொதுக் கழகங்களாகத் தோன்ற வேண்டும். அவை படிப்பகம், நூலகம், பயிற்சி வகுப்பு, பொதுக்கூட்டங்கள் வாயிலாகப் பெரியாரியத்தைப் பரப்ப வேண்டும்.

சாதியில்லாத தமிழகத்தை இளைஞர் கூட்டம் சாதித்துக் காட்ட வேண்டும். பெரியார் தொடங்கி முடிவு பெறாமல் அரைகுறையாகக் கிடக்கும் பணிகளைத் தம் தோள் மேல் சுமக்கும் சுய மரியாதைப்படை இன்றும் இன்னும் எழ வேண்டும்.

> முழுமையான பகுத்தறிவுச் சிந்தனை உடையவரிடத்தில் தமிழ் நாட்டரசு இன்னும் கிடைக்காததால் தான் தீண்டாமை இன்னும் ஒழியவில்லை

என்ற திராவிட இயக்க ஆய்வாளர் க. திருநாவுக்கரசு கூறிய நுட்பத்தை உள்வாங்கி உருவாக்கும் திறனுடை மறவர்கள் கூட்டம் திரளவேண்டும்; பெருக வேண்டும்; வெற்றி பெற வேண்டும்.

விருப்பு வெறுப்பின்றிப் பெரியாரியம் எதிர்க்கப்பட்டால் எவராலும் ஏற்கப்படும். இது உறுதி.

<><><><>

# துணைநூல் பட்டியல்


1. பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், வே. ஆனைமுத்து, சிந்தனையாளர் கழகம், திருச்சி-2.
2. தமிழர் தலைவர் பெரியார், சாமி, சிதம்பரனார் சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை-7.
3. தந்தை பெரியார் அறிவுரை நூறு, சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
4. ஞான சூரியன், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
5. பெரியார் வாழ்க்கை நெறி, சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
6. சிந்தனையும் பகுத்தறிவும் - பெரியார், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
7. நான் ஏன் கிறித்துவனல்ல, பெட்ரண்ட் ரஸ்ஸல், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
8. நான் நாத்திகன் ஏன்?, பகத் சிங், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
9. இங்கர்சால் வாழ்க்கைவரலாறு - ஆர். இராமநாதன், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
10. நான் நாத்திகவாதி ஆனது ஏன்?, இங்கர்சால், சுயமரியாதைப் பிரச்சார நிறுவன வெளியீடு, சென்னை.
11. தந்தை பெரியார் வாழ்க்கை வரலாறு, கவிஞர் கருணானந்தம்.
12. திராவிட இயக்கச் சிந்தனைகள், முனைவர் இ.கி.இராமசாமி, செல்லப்பா பதிப்பகம், மதுரை-1.
13. பெரியார் 125, அருணன் வசந்தம் வெளியீட்டகம், மதுரை-14.
14. பெரியார் ஒரு நடைச்சித்திரம், தேன்மழை பதிப்பகம், மயிலைநாதன், சென்னை-16.
15. மனிதஉரிமைப் போரில், கு.வெ.கி. ஆசான், பெரியார் பேணிய அடையாளம்.
16. பெரியார் ஒரு முழுப் புரட்சியாளர், ந. இராமநாதன்.
17. தந்தை பெரியார் ஒரு பார்வை, திருச்சி ஆளவந்தார் ஞானமணி பதிப்பகம், சென்னை-14.

18. திராவிடத்தால் வீழ்ந்தோம், குணா, தமிழக ஆய்வரண், பெங்களூர்-8.

19. ஏன் வேண்டாம் துன்பத் திராவிடம்?, சாத்தூர் சேகரன், முத்தமிழ்ப் பதிப்பகம், சென்னை-99.

20. தேசியம் வெல்லும், குமரி மைந்தன், தமிழக மக்கள் பொருளியல் உரிமைக் கழகம், மதுரை.

21. தமிழகத் தேசிய அரசியல், தமிழக மக்கள் பொருளியல் உரிமைக் கழகம், மதுரை.

22. தமிழ்த் தேசக் குடியரசு, பெ.மணியரசன் பன்மை வெளி, சென்னை-78.

23. ஆரியத்தால் வீழ்ந்தோம் திராவிடத்தால் எழுந்தோம், மஞ்சை வசந்தன், புரட்சிக் கனல் பதிப்பகம் வெளியீடு. சேத்தியாதோப்பு - 608 702.

24. பெரியார் தமிழுக்கும், சோ.க. அறிவுடைநம்பி, தாழ்த்தப்பட்டோருக்கும் செந்தமிழ்ப் பதிப்பகம், இரண்டகம் செய்தாரா? சோமான் கோட்டை,

25. திராவிடம், பெரியாரியம், பதிப்பாசிரியர் கவிஞர் புகழேந்தி, இன்றும் தேவையே புரட்சிக் கவிஞர் கலை இலக்கிய மன்றம், அரக்கோணம்.

26. பெரியாரின் இடதுசாரி, சுப. வீரபாண்டியன், தமிழ்த் தேசியம், தமிழ் முழக்கம் பதிப்பகம், சென்னை-6.

27. பெரியாரின் மொழிச் சிந்தனைகள், கி. வீரமணி, திராவிடர் கழக வெளியீடு, சென்னை-7.

28. பெரியாரின் இலக்கியச் சிந்தனைகள், முனைவர் இரா. மணியன். புரட்சிப்பாதைப் பதிப்பகம், சென்னை-7.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

தரமணி, சென்னை - 600 113.

## அண்மை வெளியீடுகள்

| | | ரூ. பை. |
|---|---|---|
| 1. | சிலப்பதிகார இலக்கியக் கட்டமைப்பு | 160.00 |
| 2. | பழந்தமிழரின் பழக்க வழக்கங்கள் | 55.00 |
| 3. | பேரறிஞர் அண்ணாவின் சமூகப் பொருளாதாரச் சிந்தனைகள் | 75.00 |
| 4. | தமிழ்ச் செவ்வியல் நூல்களில் அறம், அறிவியல், சமூகம் | 70.00 |
| 5. | கிறித்தவக் காப்பியங்கள் | 225.00 |
| 6. | தமிழ் நாளிதழ்களின் மொழிநடை | 70.00 |
| 7. | சுயமரியாதை இயக்க வீராங்கனைகள் அன்றும் இன்றும் | 50.00 |
| 8. | குலோத்துங்கனின் கவிதை வளம் | 60.00 |
| 9. | தமிழ்த்தூது (கட்டுரைக் கொத்து) | 40.00 |
| 10. | தனிநாயக அடிகளாரின் ஆய்வுகள் | 50.00 |
| 11. | தனிநாயக அடிகளார் | 120.00 |
| 12. | வளர்ச்சிப் பாதையில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் | 200.00 |
| 13. | சங்கப் பெண்பாற் புலவர்களின் மொழிநடை | 70.00 |
| 14. | ஆதிசைவம் | 70.00 |
| 15. | பெ.நா. அப்புசுவாமியின் அறிவியல் கட்டுரைகள் தொகுதி - 3 | 235.00 |

வெ.எண் : 793

பெரியார் என்னும் பேரொளி

விலை : ₹ 50.00